

கல்கி
KALKI
20.6.65
35
காசு




கல்கி

பொருளடக்கம்

விசுவாவசு ஆனி 6 — ஜூன் 20

3 — காமராஜரின் குழப்பம்
5 — ரூபாயின் மதிப்பு
6 — ராஜாஜியின் கருத்துக்கள்
7 — என்ன செதி?
9 — காலச் சக்கரம்
18 — கந்தன் கருணை
22 — இன்றைய நாகரிகம்
25 — திரைப்பட விமரிசனம்
29 — படிமக் கலை
34 — அவள் எங்கே?
38 — ஜீவ கீதம்
56 — சித்திரக் களஞ்சியம்
59 — கியூ வரிசைக் கதைகள்
66 — தாய்தான்!
73 — பற்றுக்கோடு




பதினான்கு மொழிகள்
PK
ஹிந்தி
பலியைக் கொழுக்க வைக்கிறார்!



மலர் 24 ● இதழ் 47

காமராஜரின் குழப்பம்

காங்கிரஸ் அக்கிராஸனர் திரு காமராஜ் அவர்களின் பேச்சுக்களைச் செய்தித் தாள்களில் பார்க்கும் போது அவர் பரிதாபத்துக்குரிய முறையில் குழம்பிப் போயிருக்கிறார் என்று தெரிகிறது. இந்தியாவின் மத்தியத் தலைமைப் பீடத்தை ஒருகாலும் பலவீனப் படுத்தக்கூடாது என்றும், பலமான மத்திய அமைப்பு இல்லாவிடில் உலகில் இந்தியாவின் முக்கியத்துவம் குறைந்துவிடுமென்றும் அவர் ஒரிஸ்ஸாவில் பலாஸூரில் பேசியிருக்கிறார். பலமான மத்திய சர்க்கார் அவசியமென்பது உண்மை. ஆனால் 'மத்தியத் தலைமைப் பீடம்' என்று கூறும்போது திரு காமராஜ் அவர்கள் மத்திய சர்க்காரை நினைக்கவில்லை. காங்கிரஸ் கட்சியின் 'மேலிடத்தை'யே அவர் நாட்டின் மத்திய அமைப்பாகக் கருதி, அதனைப் பலப்படுத்த வேண்டுமென்கிறார். சர்க்காரின் மைய ஸ்தானம் பலமாக இருக்க வேண்டுமென்பதில் அவர் கவனம் செலுத்தவில்லை; ஜனநாயகத்தின் ஆதாரமான கருத்துச் சுதந்திரத்தை அழித்தாவது ஆள்கிற கட்சியின் மைய ஸ்தானத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதே அவரது விருப்பம். கம்யூனிஸ்ட் நாடுகளில் உள்ளதுபோல், ஆளும் கட்சியான காங்கிரஸின் மேலிடத்தை யாரும் எதிர்க்க வொண்ணாதபடி பலப்படுத்துவதன் மூலம் அக்கட்சியின் அதருமப் போக்கையும், அக்கட்சியைப் பற்றி எழும் ஊழல் குற்றச்சாட்டுகளையும் மூடி மறைத்து விடலாமென அவர் எண்ணுகிறார்.

திரு காமராஜ் விரும்புவது போல், ராஜ்ய காங்கிரஸ் பிரிவுகள் மேலிடத்தின் திட்டங்களை ஒருபோதும் ஆட்சேபியாமல் அதன் யதேச்சாதிகாரத்துக்கு அடி பணிந்து பிரதேச நலன்களை மத்திய பீடத்தின் ஹிந்தி மெஜாரிட்டிக்கு விட்டுக் கொடுத்தால் பிரதேச மக்கள் தமது ஜனநாயக சுதந்திர உரிமைகளை இழக்க வேண்டியதுதான். காங்கிரஸ் இருந்தால்தான் பலமான அரசாங்கம் கிடைக்கும் என்று கூறி எதிர்க் கட்சிகளின் வளர்ச்சியை அவர் தடுப்பதால் நாட்டின் நிருவாகத்துக்கு மத்திய ஸ்தாபனமான பார்லிமென்டின் ஜனநாயக பலம் குறையும். அதாவது, கட்சியின் மத்திய பீடத்தைப் பலப்படுத்துவதால் தேசத்தின் மத்திய பீடம் சக்தி குன்றிப் போகும்.

தமது ராஜ்யமான தமிழகத்தைப் பொறுத்த மட்டில் தி. மு. க.வின் ஆயுதத்தைத் தாம் பறித்துப் பிரயோகித்துக் காங்கிரஸை அசைக்க முடியாமல் நிலை நாட்டி விடலாமென திரு காமராஜ் எண்ணுகிறார். இதன்படி பதினான்கு மொழிகளையும் அவற்றின் நிகழ் கால ஆற்றலுக்கு அப்பாற்பட்ட துறைகளில் புகுத்துவதால் நாட்டின் படிப்பாளிகளும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் அந்தந்த ராஜ்யத்தில் முடங்கிப் போய்த் தேசம் பதினாலு துண்டமாகப் போகிறது. இந்நிலையில் மத்திய சர்க்காரின் பலம் எப்படிக் குன்றிப் போகும் என்பதைச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை. அதாவது ஒரு புறத்தில் திரு காமராஜ் காங்கிரஸின் மத்திய பலத்தைப் பெருக்க விரும்பியவாறே, மறுபுறம் தேசத்தின் மத்திய சர்க்கார் வலுவிழந்து நிற்கவும் வழி செய்கிறார்! 'மத்திய' ஆட்சி என்பதைக் குறித்து அவர் எப்படிக் குழம்பியிருக்கிறார் என்பதற்கு இது சான்று.

இந்தியாவுக்கு இப்போது தேவைப்படுவது உண்மையான ஜனநாயகத்தை வளர்க்கும் கருத்துச் சுதந்திர

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி — பாப்பா
— பாரதியார்

முன்ன பார்லிமெண்டின் ஆட்சிதான். ஆசியா கம்யூனிஸ வலையில் விழாமல் தடுக்க அதுவே காப்பு. காங்கிரஸ் கட்சியே அரசாங்கம், அதுவே இந்தியா என்கிற எண்ணத்தில் கூறப்படும் யதேச்சாதிகார மந்திரங்கள் நாட்டு நலனுக்கு உகந்தவையல்ல. காங்கிரஸ் கட்சி தேசப் பொருளாதாரத் துறையில் சர்வாதிபத்தியம் செலுத்தித் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதுதான் ஸ்திரமான மத்திய ஆட்சி என்றும், எதிர்க் கட்சியை எழும்பவொட்டாமல் தடுப்பதுதான் ஸ்திரமான அரசாங்கம் என்றும் ஏமாற்று வித்தை செய்து வருகிறார்கள்.

வெளியுலகத்தில் இந்தியா மதிப்புப் பெறுவது பற்றித் திரு காமராஜ் பேசியிருக்கிறார். அவ்வாறு மதிப்புப் பெற உண்மையில் செய்ய வேண்டியதென்னவெனில் காங்கிரஸ் கட்சி தன் சர்வாதிகாரப் போக்கை விட்டு ஜனநாயகத்தை வாழவைப்பதுதான். அதோடு கம்யூனிஸ நாடுகளின்புறம் அதிகமாகச் சாய்வதையும் இந்தியா நிறுத்தினாலே உலகின் ஜனநாயக நாடுகளிடை மதிப்புப் பெற முடியும்.

உண்மையில் காங்கிரஸின் ஊழலை மறைக்கவே அக்கட்சியின் மத்தியபீடத்துக்கு சர்வாதிகாரம் கோரப்படுகிறது. அதனால்தான் திரு காமராஜ் அவர்கள் கட்சி ஒற்றுமை பற்றியும் கட்சிக் கட்டுப்பாடு பற்றியும் திரும்பத் திரும்பப் பேசி வருகிறார். இப்படிப் பேசுவதே ஊழல்கள் நிறைய இருப்பதற்குச் சான்றாகும். வெறும் பேச்சினால் காங்கிரஸின் ஊழல் போக்கைத் தடுக்க முடியாது. சக்தி வாய்ந்த எதிர்க் கட்சி உருவாக வாய்ப்புத் தந்தால்தான் ஆள்கிற கட்சியின் ஊழல் குறையும். தற்போது சர்க்கார் பெற்றுள்ள வரம்பற்ற அதிகாரத்தைப் பூரணமாகப் பிரயோகிக்கவும், துஷ்பிரயோகிக்கவும் ஒரு கட்சி வசதி பெற்றிருக்கும் போது அக்கட்சியில் ஊழல் பெருகுவது — இரவை அடுத்துப் பகல் பிறப்பது போல்—இயற்கையே.

கட்சியின் சுயநலனைத் தேச நலனாகத் திரித்துப் பேசுவதால் ஊழல்களை மழுப்பி விடலாமென்றும், காங்கிரஸின் அதரும ஆட்சியை மக்கள் ஏற்குமாறு செய்யலாம் என்றும் காங்கிரஸ் அக்ராசனர் திரு காமராஜ் நம்புவது வீண்.

கிருஷ்ண மேனனின் ஆட்சேபம்

இந்தியாவும் ஜப்பானும் ஒன்று சேர்ந்துதான் ஆசியாவில் கம்யூனிஸம் பரவாமல் தடுக்க வேண்டும் என்று ராஜாஜி 'நியூயார்க் டைம்ஸ்'ஸில் எழுதியிருக்கிறார். இதை ஸ்ரீமான் வி. கே. கிருஷ்ணமேனன் அவர்கள் ஆட்சேபித்திருக்கிறார். அவரது ஆட்சேபமே தமது யோசனை மிகவும் சரியானது என்பதை வலியுறுத்துவதாக ராஜாஜி கருதுகிறார்.

காங்கிரஸில் படர்ந்து வரும் ஒரு பயங்கரப் போக்குக்கு ஸ்ரீ கிருஷ்ணமேனன் ஓர் உதாரணம். இந்தியாவின் உண்மையான நண்பர்களிடமிருந்து விலகி, நாட்டைக் கம்யூனிஸ முகாமுக்குள் அடக்கம் செய்வதற்குக் காங்கிரஸின் ஒரு பிரிவு தீவிரமாக முனைந்திருக்கிறது. இந்தியாவின் பொருளாதாரம், பாதுகாப்பு இரண்டுமே மேல்நாடுகளைத்தான் சார்ந்துள்ளது என்பதை மறந்து, நன்றியும் விவேகமுமில்லாமல் இவர்கள் செயல்படுகிறார்கள். சீனாவும் ருஷியாவும் ஒற்றுமையாகி விடுமென்றும், அதன்பின் ஏற்படும் அகண்ட கம்யூனிஸ சாம்ராஜ்ய விருட்சம் இந்தியாவிலும் வேர்விட வேண்டுமென்றும், இவர்கள் விரும்புகிறார்கள். இப்போது சீனா இவர்களின் நம்பிக்கைக்குச் சாதகமாக நடக்கவில்லை. எனினும், இப்போதைக்கு இந்தியாவில் மேல் நாட்டு வல்லரசுகளின்பால் அருவையையாவது ஏற்படுத்துவோமே என்று கருதி அவ்வழியில் காங்கிரஸின் மறைமுக கம்யூனிஸ்ட்கள் கைங்கரியம் செய்து வருகிறார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குச் சாதகமாகவே மொழித் திட்டமும் உருவாகியிருக்கிறது. ஆங்கிலம் அழிந்தால் அதன் இடத்தை ஹிந்தி பூரணமாகப் பெற்று, நாட்டை ஐக்கியப்படுத்தும் என்று ஹிந்தி உற்சாகிகள் நினைப்பது போல் ஒரு நாளும் நடக்கப் போவதில்லை. பதினாறு போதனை மொழிகளும், பதினாறு சர்க்கார் பரீட்சை மொழிகளும் அமுலானபின் நாடும் நிர்வாகமும் கண்ட துண்டமாக வேண்டியதுதான். இச் சூழ்நிலையில் மத்திய சர்க்கார் அதற்குரிய பலத்தை இழந்து விடும். அத்தகைய சந்தர்ப்பத்தைத் தான் கம்யூனிஸ்டுகளும் விரும்புகிறார்கள்.

கம்யூனிஸத்துக்கு உள்நாட்டில் இத்தகைய வாய்ப்பு அளிப்பது போதாதென்று ஆட்சியாளர்கள் மாஸ்கோவின்புறம் அதிகம் சாய்ந்து வாழத் தலைப்பட்டு விட்டார்கள்.

சீனா ஆசியாவில் பெற்றுள்ள அந்தஸ்தை ஈடு செய்வதற்காக ருஷியா நமது நட்பை விரும்புகிறது. நாம் அவர்களுக்கு நம் நட்பைத் தருவதில் தவறில்லை. ஆனால் அதற்காக, ஆபத்துக் காலத்தில் நமக்கு உதவக் கூடிய மேல் நாடுகளுடன் நமக்குள்ள நல்லுறவை நலியச் செய்வது மகத்தான தவறாகும். யார் நண்பன், யார் விரோதி என்றறிவதே ராஜநீதியின் அதிமுக்கியமான பாடம். ஆபத்துக் காலத்தில் நமக்கு யார் உதவுவர் என்றறிவதே அரசியல் அறிவின் ஆரம்பப் பாடம். ஆபத்துக் காலத்தில் அசட்டுக் கௌரவத்தை விட்டு அமெரிக்கத் தலைவருக்கு எழுதி கல்கத்தாவைச் சீனாவின் ஆகாயத் தாக்குதலுக்கு இரையாகாமல் காத்த ஜவாஹர்லால்ஜி துரதிருஷ்டவசமாக இன்று நம்மிடையே இல்லை. ஏமாற்றுதலுக்கும் பயமுறுத்தலுக்கும் எளிதில் ஆளாகக் கூடியவர்களிடம் நாடு சிக்கிக் கொண்டிருக்கிறது.

எண்ணெய்ப் பிரச்னை

பற்றாக்குறையும் கட்டுப்பாடும் காங்கிரஸ் ஆட்சியின் சோஷலிஸ சமுதாயத்தில் நமக்குப் பழகிப் போன விஷயங்கள். அரிசி முதல் பால் வரையில், சர்க்கரை முதல் சிமெண்ட் வரையில் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருளாயிருந்தாலும், இறக்குமதி செய்ய வேண்டிய பொருளாயிருந்தாலும், திடீரென்று கட்டுப்பாடு தோன்றும். உடனே விலை ஏற ஆரம்பிக்கும். நியாய விலை-அநியாய விலை என்ற பாகுபாடு ஆரம்பிக்கும். இதைச் சமாளிக்கச் சர்க்கார் தலையிட, அதிகாரிகள் ஆதிக்கம் இவை அதிகரிக்கும். இந்தப் போக்குக்கு இப்போது மண்ணெண்ணெயும் டீஸல் எண்ணெயும் ஆளாகியுள்ளன. எப்போதுமே இவை பெருமளவுக்கு இறக்குமதி செய்யப்பட்டுத்தான் விநியோகமாகின்றன. அந்நியச் செலாவணி நெருக்கடியினால் இந்த இறக்குமதிக்கு இப்போது போதிய அளவு வகை செய்யப்படவில்லை. தனியார்த் துறை, சர்க்கார் துறை என்ற பாகுபாடு வேறு. ருஷ்யாவிடமிருந்து இறக்குமதி செய்து சர்க்கார் ஸ்தாபனத்தின் மூலமாக விநியோகம் செய்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் ஆவல். ஆனால் விநியோகம் செய்வதற்கு வேண்டிய முழு அமைப்பையும் அரசாங்கம் திருப்திகரமாக அமைத்துக் கொள்ளவில்லை. தனியார்த் துறைக் கம்பெனிகளின் விநியோக முறை மிகவும் திருப்திகரமாக உள்ளது என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆனால் டீஸல் எண்ணெயை அவர்கள் விருப்பப்படி இறக்குமதி செய்யச் சர்க்கார் அனுமதிக்கவில்லை. ருஷ்யாவிடமிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டும் என்று கண்டிப்புச் செய்கிறார்கள். இதற்குத் தனியார்த் துறை எண்ணெய்க் கம்பெனிகள் சம்மதிக்கவில்லை. ருஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்து விநியோகிக்க இஷ்டமில்லை என்றால், தாங்களாகவே நாட்டின் அந்நியச் செலாவணி வீணாகாத வகையில், தங்களுடைய தலைமை ஸ்தாபனங்கள் மூலம் போதிய கிரசின், டீஸல் எண்ணெய்களைத் தருவித்துக் கொள்ள அவர்களால் முடியும். அதற்கு அவர்கள் முன்வந்ததாகத் தெரியவில்லை. ஆகவே தனியார்க் கம்பெனிகளுக்கு விநியோக வசதிகள் இருந்தும், சப்ளை பற்றாக்குறையினால் விநியோகம் சரிவர நடைபெறத் தடை ஏற்பட்டுள்ளது. சர்க்கார் கம்பெனிகளுக்குச் சப்ளை ஓரளவுக்கு இருந்தும், விநியோக வசதிக் குறைவினால் தடை. இரு சாராருக்கும் நல்லுறவும் ஒத்துழைப்பும் ஏற்படாதபடி நடுவில் நிற்பது அரசாங்கத்தின் கொள்கை. இந்தச் சித்தாந்தப் போரில் அகப்பட்டுக் கொண்டு தவிப்பவர் டீஸல் எண்ணெய் உபயோகிப்போரும், கிரசின் உபயோகிக்கும் சாமானிய மக்களுமாவர். இவற்றின் விலை ஏறத் தொடங்கி விட்டது. பம்பு செட்டுகள் வைத்திருக்கும் விவசாயிகள், லாரி—பஸ் ஸ்தாபனங்கள், நெடுந்தூரம் செல்லும் பிரயாணப் போக்குவரத்து மற்றும் சில தொழிற்சாலைகளைச் சேர்ந்தவர் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். சர்க்காரின் ஏகபோக உரிமையை நிலைக்கச் செய்ய இப்போது எல்லா எண்ணெய்க் கம்பெனிகளின் விநியோகத்தையும் கட்டுப்படுத்துகிற விசேஷ அதிகாரங்களைச் சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ளது. இதனால் விநியோகம் எந்த அளவுக்குச் சீர்பெறும், கட்டுப்பாடு எவ்வளவு குறையும் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது.

ரூபாயின் மதிப்பு

1954லிருந்து 64 வரையுள்ள பத்தாண்டு காலத்தில் உலக நாடுகளின் நாணயங்கள் எந்த அளவுக்கு மதிப்பிழந்து விட்டன என்பதை ஆராய்ந்து 'பீர்ஸ்ட் நாஷனல் ஸிட்டி பாங்கு' வெளியிட்டுள்ள அறிக்கையில் நமது நாட்டு ரூபாய் நாணயத்தைப் பற்றியும் வருத்தத்துக்குரிய தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு சராசரி 4.2 சதம் விதம் சென்ற பத்தாண்டு காலமாக ரூபாய் மதிப்பிழந்து வருவதாக அவர்கள் கணக்குப் போட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது 1954ல் ஒரு ரூபாயாக இருந்த நாணயத்தின் மதிப்பு 1964ல் 65 பைசாவுக்குக் குறைந்து விட்டது. 100 காசில் 35 செல்லாக் காசு இருந்தால் எப்படியோ அதற்குச் சமானமே இந்த நிலை. இதைவிடக் கவலை தருவது சென்ற ஓர் ஆண்டில் மட்டும் (1963–64) ரூபாயின் மதிப்பு இந்தச் சராசரி விகிதத்தைவிட ஏறக்குறைய மும்மடங்கு அதிகமாக, அதாவது 11.7 சதவீதம் குறைந்திருப்பதேயாகும். முன்னேற்றத்துக்கும் மக்கள் வாழ்க்கைத் தர உயர்வுக்கும் உதவுவதாகப் பறைசாற்றப்படும் இரண்டாவது மூன்றாவது திட்டங்கள்தான் இந்த அவல நிலைக்குக் காரணம். ரூபாயின் மதிப்புக் குறைவை விலைவாசிகளின் ஏற்றத்தைக் கொண்டே பெரும்பாலும் கணிப்பதால், 1964–65ம் ஆண்டில் ரூபாயின் மதிப்பு இன்னும் அதிகமாகக் குறைந்திருக்கும் என்று நிச்சயமாகச் சொல்லலாம். மேன்மேலும் விரிவடைந்து கொண்டே செல்லும் திட்டங்களினால் இந்நிலை மேலும் மோசமாகுமே தவிர, அபிவிருத்தி ஏற்படாது. தொழில்களுக்கும் வியாபாரத்துக்கும் கொடுக்கப்படும் பாங்குக் கடன்களைக் கட்டுப்படுத்தி விட்டால் நிலைமையைச் சமாளித்து விடலாம் என்று அரசாங்கத்துக்கு ஒரு பிரமை. கணக்கில் வராத கறுப்புப் பணத்தைக் கண்டு பிடித்து விட்டால் நிலைமை திருந்தி விடும் என்று மற்றொரு பிரமை. ஆனால் நமது சமூகத்தைப் பிடித்து வாட்டும் பொருளாதார வியாதிக்கு இத்தகைய சுக்குக் கஷாய நிவாரணம் பலனளிக்காது. திட்ட அளவைக் கணிசமாகக் குறைத்து, வீண் செலவை அடியோடு தவிர்த்து, உற்பத்தியை அதிகரிப்பதே உண்மையான மருந்து.

ராஜாஜியின் கருத்துக்கள்

விற்பனை வரி அதிகாரிகளுக்கு முன்னிலும் அதிகமான அதிகாரங்களை அளிக்கத் திட்டம் போடப்பட்டு வருகிறது. சட்டத்தின் ஆட்சி பற்றியோ, ஜீவாதார உரிமைகள் குறித்தோ, ஹைகோர்ட்டுத் தீர்ப்புகள் பற்றியோ இலட்சியம் செய்யாமல் சட்டசபைகளில் தனக்குள்ள மெஜாரிட்டி பலத்தினால் காங்கிரஸ்கட்சி இவ்வாறு செய்கிறது. இதன்படி எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் அதிகாரிகள் சோதனை செய்யலாம், பொருளைப் பறிமுதல் செய்யலாம், வியாபாரிகளை இம்சை செய்யலாம். சோதனையும் பறிமுதலும் வியாபாரிகளை மிகவும் அவமானப்படுத்தும் நடவடிக்கைகள். அதிகாரத்தை அளிப்பது சுலபம். ஆனால் அதிகாரம் பெற்றவர்களைக் கட்டுப்பாட்டுடன் நடக்கச் செய்வது கடினம். வருமான வரி அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்களை விற்பனை வரி அதிகாரிகளுக்கும் தருவது பொருந்தாது. இவ்விரு பிரிவும் மிகவும் வித்தியாசமானவை. இவற்றின் கீழ் வரி தருபவர்களும் வித்தியாசமானவர்கள். ஹைகோர்ட்டில் முன்பே இவ்விஷயத்தில் தோல்வியடைந்த தமிழ் நாட்டு அரசாங்கம் விற்பனை வரி அதிகாரிகளின் அதிகாரத்தைப் பெருக்காது என்று நம்புவோமாக!

ஃஃஃ

சர்வதேசச் செலாவணியில் நமது ரூபாய் மிகவும் மதிப்பிழந்து விட்டது. ஒரு டாலர் என்பது பெயருக்கு நாலேமுக்கால் ரூபாய்க்குச் சமம். இது கடையில் கிடைக்காத பொருளுக்குப் பட்டியலில் விலை எழுதும் முறை. அவ்வளவே. ஆனால் நடைமுறைச் செலாவணியில் வெளி நாடுகளில் ஒன்பது ரூபாய்க்குத் தான் ஒரு டாலர் பெற முடிகிறது. இதற்குப் பரிகாரமாக, சமீபத்தில் விதிக்கப்பட்ட பத்துச் சதவிகித சுங்க உயர்வை நிரந்தரமாக்கி விடலாமென சர்க்கார் யோசிக்கிறார்களாம். அந்நியப் பொருள் இறக்குமதிக்கு லைசென்ஸ் வழங்குவதை மேலும் கட்டுப்படுத்த உத்தேசிப்பதாகத் தெரிகிறது.

ஆனால் இந்த நடவடிக்கைகளால் ரூபாய்க்கு மதிப்பு ஏற்படுத்தித் தர முடியாது. மாறாக, இதன் விளைவாக இதுவரை விஷயமறியாதவர்களும் இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து போனதை அறிவார்கள்; அதனால் நம் அந்நியச் செலாவணி நெருக்கடி தீவிரமாகக் கூடும். இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதால் தற்போது நடைபெற்று வரும் பல தொழில்கள் ஸ்தம்பிதமடையும். சர்க்கார் உத்தேசிக்கிற நடவடிக்கைகள் பழைய முட்டாள்தனத் திட்டங்களின் விளைவு தானேயன்றி, அவற்றுக்குப் பரிகாரமாகாது. அந்நியச் செலாவணியில் சிக்கனம் பிடிப்பதற்காக இவ்வாறு நடவடிக்கை எடுத்தாலும், இன்னொரு புறத்தில் மந்திரிமார்கள் யாவரும் 'கியூ' வரிசையில் ஆர்வமாக நின்று வெளிநாடுகளுக்குப் போவதையும், தினந்தோறும் கண்டு வருகிறோம்!

ஃஃஃ

ஆக்கிரமித்த பகுதியிலிருந்து எதிராளி வெளியேறிப் பழைய நிலவரம் உண்டானால் தான் பேச்சு வார்த்தை நடத்துவோம் என்று சொல்லுவது நியாயம். ஆனால் அப்படி நாம் சொல்வதால் ஆக்கிரமித்த பகுதியை எதிரி விட்டுவிட மாட்டான். இச்சமயத்தில் எதிரியின் இடத்துக்குச் சென்று நாம் தாக்குவது சரியல்ல என்று சர்க்கார் கருதுகிறார்கள். நம்முடைய ராணுவபலத்தை யொட்டிப் பார்த்தால் இக்கருத்து சரியாகவே இருக்கக் கூடும்.

எனினும், இதுகாரணமாக எதிரியிடமே நம் பகுதியை விட்டு வைப்பது நியாயமா? எதிரியிடமிருந்து நம் பகுதியை மீட்க வேறு வழி கிடையாதா? உண்டு. நமக்கு எக்காலத்திலும் உதவக்கூடிய வல்லரசுடன் ராணுவ உறவு பெற்று அந்தப் பலத்தைக் கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதுதான் வழி.

சீன விஷயத்தில் இந்தியா இந்த வழியைப் பின்பற்றக் காணோம். கெய்ரோவுக்குச் சென்ற நமது பிரதமர், நாஸர் அவர்களின் மூலம் சீனாவுடன் சமாதானம் பேச முயன்றதாகத் தெரிகிறது. பெருத்த அவமானம். இதனால் நாம் இழந்தபகுதியைத் திரும்பப் பெறப் போவதில்லை; நாம் இழந்த செல்வாக்கையும் மீண்டும் பெறப் போவதில்லை; சீனாவின் எதிர்கால ஆக்கிரமிப்புத் திட்டங்களையும் தடுக்க முடியப் போவதில்லை. லால்பஹாதுர் அவர்களின் அந்நியப் பயணம் தேசத்தின் பாதுகாப்பைவிட அவருடைய சொந்த அந்தஸ்தை உயர்த்திக் காட்டுவதற்காகவே ஏற்பாடாகியுள்ளது எனத் தோன்றுகிறது.

ஃஃஃ

ஆட்சி மொழி பற்றிய காங்கிரஸ் காரியக் கமிட்டித் திட்டத்துக்கு ஸ்ரீ பக்தவத்ஸலம் ஒத்துப் போய் விட்டார். ஹிந்தியைப் பள்ளிகளில் கட்டாய பாடமாக்குவதற்கு அவர் ஒப்புக் கொண்டு விட்டார். ஆனால் தமிழ் நாட்டுச் சட்டசபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஸ்ரீ நெடுஞ்செழியன் அவர்கள் மேற்படி திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்க முடியாது என்று உறுதியாகக் கூறியிருக்கிறார். காங்கிரஸ் காரியக் கமிட்டியின் மொழித் திட்டம் தேசத்தில் பெரும் குழப்பத்தை விளைவிக்குமென்று எச்சரித்துள்ளார். ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி தாற்காலிகமாகத்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதென்றும், அதனை அடியோடு ரத்து செய்து விடவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார். தமிழ் நாட்டைச் சேர்ந்தவரான காங்கிரஸ் அக்கிராசனர் காமராஜ் அவர்களும், நமது முதன் மந்திரியும் தமிழ் மக்களின் உண்மையான கருத்தைத் தில்லிக்குத் தெரிவிக்கவில்லை என்று ஸ்ரீ நெடுஞ்செழியன் கண்டித்திருக்கிறார். ஸ்ரீ காமராஜ் அவர்களோ தமது யோசனையினால் தி. மு. க.வின் எதிர்ப்பு சீக்கிரத்தில் மங்கிவிடும் என்று நம்பிவருகிறார்!

ஸ்ரீ ஜவாஹர் அவர்கள் தமது சொந்த ஹோதாவில் அமெரிக்க சர்க்காருக்குக் கோரிக்கை விடுத்ததன் பேரிலேயே, மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அமெரிக்கா கல்கத்தாவைக் காக்க விமானப் படையை அனுப்பி வைத்தது. இது காரணமாகவே சீனா மேற்கொண்டு ஆக்கிரமிப்பு நிகழ்த்தாமல் கட்டுப்படுத்திக் கொண்டது. இவ்வாறு நடக்கவில்லை என்று சர்க்கார் சார்பில் பார்லிமெண்டில் கூறப்பட்டாலும் இதுவே உண்மை. நேரு அவர்களுக்கும் அமெரிக்க சர்க்காருக்கும் கல்கத்தா என்றென்றும் நன்றி தெரிவிக்க வேண்டிய ஓர் உத்தமமான காரியத்தை, 'நடுநிலைமை' என்ற வறட்டுச் சித்தாந்தத்துக்காக அரசாங்கம் மறுத்துக் கூறியிருக்கிறது. ஜவாஹர் அவர்கள் ராஜநீதியறிந்து இவ்விஷயத்தில் நடந்து கொண்டதால் நம் பாராட்டுக் குரியவராகிறாரேயன்றி, இதில் அவர் அவமானகரமாக எதுவும் செய்துவிடவில்லை. இன்றைய இந்திய சர்க்கார் கூறுவதை அமெரிக்க சர்க்காரும் ஒப்புக்கொண்டிருப்பதற்குக் காரணம், இந்திய அரசாங்கத்தின் வறட்டு அந்தஸ்தைக்கூட அவர்கள் போனால் போகிறதென்று மதித்து நம்மைக் காட்டிக்கொடுக்க விரும்பாத பெருந்தன்மைதான். அமெரிக்கா நம்மிடம் எவ்வளவு நல்லெண்ணம் கொண்டுள்ள நம்பகமான நாடு என்பதற்கு இது மேலும் ஒரு சான்று.

கல்கத்தாவைக் காக்க நேருஜி அமெரிக்க உதவியை நாடினார் என ஸ்ரீ ஸுதீர கோஷ் கூறியது கட்டுக்கதையல்ல என்று ஸ்ரீ லால் பஹாதூர் உணர வேண்டும். அது உண்மையே என்பதற்கு நான் அத்தாட்சி சொல்கிறேன்; என் உறுதிமொழியைப் பிரதமர் ஒப்புக் கொள்ளட்டும். இதன் பின்னராவது பிரதமர் இடதுசாரியின் மாயத்துக்கு ஆளாகாமல் அந்நியக் கொள்கையை முறைப்படி உருவாக்கிக் கொள்வாராக.

என்ன சேதி?

கடற்கரைக் கூட்டம்

சென்ற 5ம் தேதி சனிக்கிழமையன்று சென்னை கடற்கரையில் சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்துக்காகக் கூடிய மகா ஜனங்கள் இடுமென மழைபெய்ததால், தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் கூடிய பெருந்தலைவர்களின் அரிய சொற்களைக் கேட்க முடியாமற் போயிற்றே என்று வருத்தமடைந்திருப்பார்கள். இவ்வளவு நல்லவர்கள் ஒருசேர ஒரு மேடையில் கூடிய பிறகும் வருண பகவானால் எப்படிச் சும்மா இருக்க முடியும்? ஆகவே, சொற்பொழிவுகள் எல்லாவற்றையும் விட, அன்று பெய்த மழையே சுதந்திரக் கட்சி தெய்வ சம்மதம் பெற்ற சிறந்த கட்சி என்ற உண்மையை நன்கு வலியுறுத்தியது.

நல்லெண்ணத் தூது

ஆண்டுதோறும் பல முக்கிய மந்திரிகள், இரண்டாந்தர மந்திரிகள், மூன்றாந்தர மந்திரிகள், பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் குழு — என்று பல நூறு பேர்கள் மேனாடுகளுக்கு 'நல்ல எண்ணம்' வளர்க்கும் தூதர்களாக அனுப்பப்படுகிறார்கள். இவர்கள் எல்லோரும் போய் எவ்வளவு நல்லெண்ணத்தைத் தேடித் தந்திருக்கிறார்கள் என்பதை இன்று நாட்டில் விஷயமறிந்தவர்கள் நன்கறிவார்கள். இவர்கள் எல்லாரையும்விட உலக மக்களிடை பரஸ்பர நல்லபிமானத்தைச் சம்பாதித்துத் தருபவர்கள் கிரிக்கெட் விளையாட்டுக்காரர்கள்தான். ஆனால் இவ்வாண்டு நமது அரசாங்கம் மேற்கிந்திய கிரிக்கெட் குழு நம் நாடு வருவதற்கு அந்நியச் செலாவணி தர மறுத்துவிட்டது!

அதே போல், ரோட்டரி — லயன்ஸ் கிளப் அங்கத்தினர்கள் வெளியே வியாபார, நல்லெண்ணத் தூதுவர்களாகவும் தொழில் துறை அநுபவம் பெற்று வரவும் போவதுண்டு. வெளிநாட்டு ரோட்டரி — லயன்ஸ் கிளப் அங்கத்தினர்கள் இங்கு வருவதுபோல் நம் நாட்டிலிருந்தும் அங்கத்தினர்கள் வெளிநாடு போய் வர வேண்டுமல்லவா? அம்முறையில் சிலரை அனுப்ப ரோட்டரி — லயன்ஸ் கிளப் திட்டமிட்டிருந்தது. அரசாங்கம் அவர்களுக்கு அநுமதி மறுத்துவிட்டது அநியாயம்.

தொழில் துறையில் எல்லாம் சர்க்காரே செய்ய வேண்டும் என்று சொல்வது போல் வெளிநாட்டில் நல்லெண்ணத் தூதுப் பணியும் சர்க்கார் அங்கத்தினர்கள்தான் செய்ய வேண்டும் என்று அபிப்பிராயம் போலும்.

மனச்சாட்சி விஷயம்

சமீபத்தில் வடநாட்டில் நிலக்கரி சுரங்கத்தில் விபத்து ஏற்பட்டு சுமார் மூந்நூறு பேர் உயிர் இழந்தார்கள்.

ஏறத்தாழ இதே அளவுக்கு ஜப்பான் தேசத்திலும் ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து ஏற்பட்டுப் பலர் உயிர் இழந்தனர்.

ஆனால் ஒரு வித்தியாசம்.

ஜப்பான்தேச நிலக்கரிச் சுரங்கம் சம்பந்தப்பட்ட மந்திரி முன்னமேயே தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காதது தமது தவறு என்று கருதிப் பதவியை ராஜிநாமாச்செய்துவிட்டார். அவருக்கு மனச்சாட்சி இருந்தது.

சம்ஸ்கிருதத்துக்கு ஆபத்து!

மும்மொழித் திட்டத்தில் உள்ள பல ஆபத்துக்களிலொன்று. இத்திட்டம் அமுலானபின் நம் குழந்தைகள் தாய்மொழி, ஹிந்தி, ஆங்கிலம் இம்மூன்றையும் கட்டாய பாடமாகக் கொள்வதால் சம்ஸ்கிருதத்தைப் புறக்கணிக்க வேண்டி வரும். பாரத தேசத்தின் ஆன்மிக அபிவிருத்திக்கும் கலை வளர்ச்சிக்கும் ஆணி வேராக உள்ள சம்ஸ்கிருதத்தைப் பாடத் திட்டத்திலிருந்து நீக்கும் நிலை ஏற்படும். இன்றைய இந்திய சர்க்கார் அடுத்த தலைமுறைக்கு இழைத்துள்ள பல இன்னல்களில் இதுவும் ஒன்று.


ஜூன் 19௳ முதல்
சென்னை
வெலிங்டன்
ஸ்ரீமுருகன்
ராக்ஸி.ராம்
மற்றும்
தென்னாடெங்கும்
எவிஎம்
ப்ரொடக்ஷன்ஸ்
அளிக்கும்
முருகன் பிரதர்ஸ்
காக்கும்
கரங்கள்
MB
முருகன் பிரதர்ஸ்
கதை-டைரக்ஷன்
A.C.திருலோகசந்தர் M.A
வசனம்
ஆரூர் தாஸ்
இசை
K.V.மஹாதேவன்



காலச் சக்கரம்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 11

ஒரு மனம் போதுமா?

தங்கப்பனுக்கும் செல்லத்துக்கும் இடையே மௌனமாக நடந்த நாடகத்தைச் சபாபதியோ அல்லது சொர்ணமோ கவனிக்கவேயில்லை. வாய் திறவாமலே பேசுவதைப் புரிந்து கொள்ளக் கூடிய வயதில்லை அந்தத் தம்பதியருக்கு. யாரும் இயல்பாக எடுத்துக் கொள்ளக் கூடிய, வேறுவிதமாகச் சந்தேகிக்க இயலாத சிறு சிறு செய்கைகளால் பெரிய பெரிய அந்தரங்க விஷயங்களை உணர்த்துகிற கலையை ரசித்து அநுபவிக்கிற பருவத்தை அவர்கள் கடந்து நீண்ட காலமாகி விட்டது. அதோடு, தங்கப்பனும் செல்லமும் தங்களுக்குள்ளே மௌன நாடகத்தை ஒரு புறம் நடத்திக் கொண்டிருந்தார்களே ஒழிய மற்றொரு புறம் வாய் வார்த்தையாகச் செல்லத்தின் பெற்றோருக்கும் பொதுவாகப் பேசிக் கொண்டுதான் வந்தார்கள். அந்த உரையாடலின் சுவாரசியத்தில் முழுமையாக மூழ்கிவிட்டிருந்தார்கள், சபாபதியும் அவரது சகதர்மிணியும்.

''ஐயோ பாவம்!'' என்று காயமுற்ற உஷாவுக்காகப் பரிந்து கூறினாள் செல்லம். அவள் குரலில், முன்பு ஹோட்டலில் இருந்தது போன்ற அத்தானைக் கிண்டல் செய்கிற தொனி இல்லை இப்போது. உண்மையான பரிவுதான் ஒலித்தது. ஆனாலும், 'உஷாவுடன் தான் பழகிய விதத்தை விகல்பக் கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டாம்' என்று சொல்லாமல் சொல்லிய அத்தானின் கோரிக்கைக்குப் பிறகும், அவளுக்கு உஷாவுடன் தான் போட்டி போட நேருமோ என்ற பயமும் அடியோடு தெளியவில்லை, தன்னம்பிக்கையும் இன்னும் முழுமையாக வளரவில்லை.


''அத்தான் ரயில் கிளம்புகிற நேரத்துக்கு அரை மணி முன்னதாகவே புறப்பட்டு அவங்க ஜாகைக்குப் போய் விசாரிச்சுட்டு வந்திருக்கலாம். அதுக்கு வழியில்லாமெ அவருக்குப் போர்ட்டர் உத்தியோகம் கொடுத்துட்டார் இந்த அப்பா!'' என்றாள் செல்லம்.

சாமான்கள் பலவற்றையும் அத்தான் தானே நாலு நடை நடந்து கொண்டு வந்து ரயிலில் ஏற்றியதைப் பார்த்துக் கொண்டு போர்ட்டரை அழைக்காமல் சும்மா நின்று கொண்டிருந்தார் அப்பா என்பதில் அவளுக்கு அவரிடம் ரொம்பக் கோபம்.

தங்கப்பனுக்கோ அவற்றைத் தூக்கி வருவது இலகுவாகவும் தமாஷாகவும் இருந்தது. கூடவே தனது உடல் வலிமையை அவர்களுக்கு உணர்த்துவதில் ஒருவித ரகசியப் பெருமையுற்றான் அவன். வாயால் சொன்னால்தானே தற்பெருமையடித்துக் கொள்வதாய்த் தோன்றும்? இப்படி நிரூபித்துக் காட்டுவதைத் தவறாக எண்ணிக் கொள்ள முடியாது; அவனுடைய உடல் உறுதி குறித்து வியப்படையாமலும் அவர்களால் இருக்க முடியாது !

''ஒருத்தர் பலசாலியாக இருக்கிறார் என்கிறதினாலேயே அவரைப் பழி தீர்த்து விடணுமா, என்ன?'' என்று செல்லம் அப்பாவைப் பற்றிக் குறை கூறியபோது அவள் கண்களில்தான் எத்தனை கர்வம் மிதந்தது, திடகாத்திரரான தன் அத்தானை நினைத்து!

''என். ஸி. ஸி.யிலே சேர்ந்து ஸி. சர்டிபிகேட் வாங்கினவனுக்கு இந்தப் பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கிட்டு வரது ஒண்ணும் சிரமமில்லே, செல்லம்! அங்கே 'டிரெயினிங்' கொடுக்கிறேன்னு ஆளை முறுக்கிப் பிழிஞ்சுடுவான். உடம்பும் கல்லுப் போல ஆகி விடும். அதோடு நீ நினைக்கிறாப் போல உஷாவைப் போய்ப் பார்த்து வரணும்கிற அவசியமும் இல்லே. அவ என்ன விவரம் தெரியாத பொண்ணா ? ஊரையே விலைக்கு வாங்கிடற சாமர்த்தியம் அதுக்கு உண்டு. நாம யாராவது



போய் அடிபட்டுதான்னு கேட்டாத்தான் ஏதோ 'இன்ஸல்டு' பண்ணறதாக எடுத்துக்கிடும். என்னைக் கவனிச்சுக்கிட எனக்கே நல்லாத் தெரியும். நீங்க ஒண்ணும் கவலைப்பட்டுக்கிட வேணாம்னு முகத்திலே அடிச்சமாதிரி எதையானும் சொல்லி அனுப்பிச்சுடும்!'

''உன்னைவிட உன் அத்தானுக்கு அந்தப் பெண்ணைப் பற்றி நல்லாத் தெரியும்; நீ எதுக்குக் கிடந்து அலட்டிக்கிடறே?'' என்று மகளிடம் சற்றுக் குத்தலாகப் பேசிய சொர்ணம் திடீரென்று இரும ஆரம்பித்தாள். ''இதென்ன இப்படிக் கமறுது, இங்கே?'' என்று கேட்டவாறே மீண்டும் கண்களில் நீர் மல்க இருமினாள்.

ஜன்னலுக்கு வெளியே பார்த்த சபாபதி, ''இது என்ன பாக்டரி தம்பி? ஒரே யடியாகப் புகையைக் கக்கி நம்மைத் திணற அடிக்குதே!'' என்றார்.

மப்பும் மந்தாரமுமாய் மேகங்கள் கவிந்திருந்ததால் தொழிற்சாலையின் புகை மண்டலம் விண்ணை நோக்கிச் செல்லாது தாழ்வாகவே படர்ந்து ரயிலுக்குள்ளே யெல்லாம்கூட நுழைந்து மூச்சை அடைத்தது.

''இது தெரியாதா, மாமா! அதோ பாருங்க, போர்டு போட்டிருக்கு 'கார்டைட் பாக்டரி'ன்னு.''

''இருபது வருஷ ஸ்டேஷனே உத்தியோகத்திலே கார்டைட் என்கிற வார்த்தையையே கண்ணால் கண்டதில்லை தம்பி.''

''கிழிஞ்சுது போங்க! கார்டைட்னா வெடி மருந்துன்னு அர்த்தம்...''

''ஓ! அப்படிச் சொல்லு! சீனாக்காரனைத் துரத்தியடிக்க இங்கேதான் வெடி மருந்து தயாராகுதா? அப்படியானால் இந்த நாற்றத்தை எவ்வளவு நேரம் வேணுமானாலும் சகிச்

சுக்கிடலாம். சொர்ணம்! மூக்கை மூடியிருக்கிற புடைவைத் தலைப்பை விலக்கிட்டு இந்தப் புகையை இன்னும் ரெண்டு இழுப்பு இழுத்துக்க சொல்றேன். பின்னாலே எதுக்



காவது என்னண்டை சண்டைக்கு வரப்போகுண்டு போட்ட மாதிரி வார்த்தைகளை 'ஷூட்' பண்ணலாம்!''

இவ்வாறு சபாபதி கூறியதை அடுத்து அங்கு நிலவிய சிரிப்பொலிக்கும் மேலாக, ''சீனாக்காரனை விரட்டி அடிக்க இந்த ஒரு தொழிற்சாலை போதுமா மாமா? இது போல் தேசமெங்கும் நூற்றுக்கணக்கிலே தொழிற்சாலைகள் விதம் விதமான ராணுவத் தளவாடங்களைத் தயாரிக்க உருவாகணும்'' என்று சிந்தனைச் செறிவுடன் பேசினான் தங்கப்பன். ''மிலிடரி ஆபீஸர்கள் பயிற்சிக் கல்லூரிகூட இங்கே பக்கத்திலேதான் வெலிங்டனில் இருக்குது.''

''அதிலே இன்னொரு விஷயம் பாரு, தம்பி!'' என்று ஏதோ ரொம்பப் பெரிய தத்துவத்தைப் பற்றிப் பேசப் போகிறவர் போல முன்னுக்குச் சாய்ந்தார் சபாபதி. ''ராணுவ முக்கியத்

துவம் வாய்ந்த இந்த மாதிரி சமாசாரங்களை யெல்லாம் இப்படிப்பட்ட மலைப்பாங்கான பகுதிகளிலே ஒளிச்சு வைச்சிருந்த வெள்ளைக்காரனோட சாமர்த்தியத்தைச் சொல்ல வாறேன். அந்தநாளிலே வெள்ளைக்காரத் துரைங்க, பெரிய ஐ. சி. எஸ். ஆபீசருங்க, இல்லையானு ஹைகோர்ட் ஜட்ஜுங்க போன்றவங்கதான் ஊட்டிக்கு வருவாங்க. இப்போது இது 'டூரிஸ்ட் ஸெண்டர்' ஆகிப் போச்சு. இந்த நாளிலே ராணுவ நிறுவனங்கள் எல்லாமே எங்கெங்கே இருக்கின்றன என்பதை அரசியல் நோக்கத்திலே அம்பலமாக்கி விடறாங்க. எதிராளிக்கு இது ரொம்பவும் சௌகரியம்தானே?''

''ஒரு விதத்தில் நீங்க சொல்கிறதும் நியாயம்தான் மாமா! ஆனால் ஜனநாயகத்திலே முழுக்க முழுக்க நீங்க எதிர்பார்க்கிறாப் போலே நடக்க முடியாது. நாட்டைப் பாதுகாக்கத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் நல்லபடியா செய்திருக்காங்களான்னு தெரிஞ்சுகொள்கிற உரிமை குடியரசில் மக்களுக்கு உண்டு. அப்படி இல்லை என்றால் அதற்குப் பொறுப்பானவங்களைப் பதவியிலேயிருந்து நீக்கவும் வேறே தகுதியான ஆளை அந்த இடத்திலே போடவும் அவங்களுக்கு அதிகாரம் உண்டு.''

''அதுவும் நியாயமாகத்தான் தோணுது'' என்ற சபாபதி, 'மக்கள் உரிமைகள் பெரிதா, ராணுவ ரகசியங்கள் பெரிதா? இரண்டுக்கும் பொதுவாக இடையில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவன் எப்படி நடந்து கொள்வது?' என்று தீர்மானிக்க முடியாதவராகத் திணறி மீசையைத் தடவிவிட்டபடி மெல்ல நிமிர்ந்தார். 'ஜனநாயகத் தலைவனாயிருக்கிறவன் பாடு ரொம்பத் திண்டாட்டம்தான்' என்று அவருக்குப் புரிந்தது. அதை வாய்விட்டுக் கூறவும் செய்தார். தொடர்ந்து, ''நாலா பக்கமும் தலைக்குத் தலை தோணினதை யெல்லாம் பேசிக்கிட்டிருப்பாங்க; கூடவே தான் கூறுவது தான் ரொம்ப நியாயமானதுன்னு ஒவ்வொருத்தனும் சாதிப்பான். தலைவனுக்கு எரிச்சல் பற்றிக்கிட்டு வரும். பொறுமை இழந்து கொஞ்சம் சூடாகப் பதில் சொன்னாலோ 'மக்கள் அபிப்பிராயத்தை மதிக்காதவன், எதிர்த்தரப்பு வாதத்துக்குச் செவிமடுக்காதவன்; அவன் ஜனநாயகத் தலைவனாயிருக்க லாயக்கற்றவன்' என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் கிளம்பும்!'' என்றார்.

''தலைவன் சூடாகப் பதில் சொல்லலாம், மாமா! தப்பில்லே! ஆனால் கருத்தோடு பேசணும். 'எனக்கு எல்லாம் தெரியும்; நீ வாயை மூடிக்கிட்டுக்கிட'ங்கிற மாதிரி திமிரா விட்டெறிஞ்சு பேசினால்தான் தலைவனுக்கு ஆபத்து!''


''எத்தனை பேருக்கு எத்தனைவிதமா பதில் சொல்லிக்கிட்டிருக்கிறது? அதென்னவோ எனக்குப் பிரதம மந்திரி பதவி தரேன்னு வெற்றிலைபாக்கு பழம் வைச்சு அழைச்சாக்கூட டெல்லி பக்கம் தலை வைச்சுப் படுக்க மாட்டேன்! தண்டா புடிச்ச வேலை. அதைவிட இந்த மாதிரி ஒரு 'டீ எஸ்டேட்' நமக்குச் சொந்தமா இருந்துச்சுன்னா போதும்; 'ஹாய்யா' கால் மேலே கால் போட்டுக்கிட்டு ராஜா மாதிரி உட்கார்ந்துக்கிட்டிருக்கலாம்!''

''மாமா!'' என்று சற்றுக் கடுமையாக அழைத்தான் தங்கப்பன். ''இந்த நாடு ஏன் கெட்டுக் குட்டிச்சுவராகப் போய்க்கிட்டிருக்கிறது தெரியுமா? உங்களை மாதிரி 'ஹாய்யா' உட்கார்ந்துக்கிட்டிருக்கலாம்னு நினைக்கிறவங்களாலேதான்!''

''என்ன தம்பி, என் மேலேயே பாயறே!'' என்றார் அவர் திடுக்கிட்டு.

அவர்கள் சம்பாஷணையை, குறிப்பாக அத்தானுடைய வாதங்களை யெல்லாம் வார்த்தை விடாமல் விழுங்கிக்கொண்டிருந்த செல்லம் 'களுக்' கென்று சிரித்தாள்.

''என் பிரெண்டு ஒருத்தன்; பி.காமிலே எனக்கு ஸீனியர். இப்போ உத்தியோகம் பார்க்கிறான். சனிக்கிழமை அரை நாள் வேலை செய்யறது அவனுக்குச் சிரமமா யிருக்குதாம், சொல்றான்! பிரிட்டனிலே எல்லாரும் ஐந்து நாள் தான் வேலை செய்யறாங்க; நாம் இங்கே அரை நாள் அதிகமா மாரடிக்க வேண்டியிருக்குதுன்னு அலுத்துக்கறான்! அந்த நாட்டிலே எவ்வளவு முன்னேற்றம் அடைஞ்ச பிறகு ஐந்து நாள் வேலைத் திட்டம் கொண்டாந்திருக்காங்க என்கிறதை இவன் யோசிக்கிறதில்லை. அத்தனை முன்னேற்றம் அடைந்த நாட்டிலே ஐந்து நாள் வேலை செய்தால் நாம இங்கே வாரத்தில் பத்து நாள் உழைக்கணும்! ஆனால் அந்த ஐந்து நாளிலே அவன் எத்தனை மணி நேரம் வேலை செய்யறான் என்கிறதைக் கணக்கிலே எடுத்துக்கிட்டா இவனைக் காட்டிலும் பிரிட்டனிலே வாரத்தில் இரண்டு மணி நேரம் கூடவே வேலை செய்யறாங்க என்கிறது புரியும்! இதையெல்லாம் பார்க்கிறப்போ எனக்கு என்ன தோணுது தெரியுமா? நம்ம நாட்டிலேயும் ஒரு பெரிய யுத்தம் வரணும். வந்து



அனாயாசமாய்ச் சவாரி செய்ய உகந்தது பி.எஸ்.ஏ. **BSA**

பிரபலமிக்க பி. எஸ். ஏ. — இலேசானது, உறுதியானது, துரிதமாகச் செல்ல வல்லது—அது திரும்பவும் வந்துள்ளது. உற்சாகமான இளைஞர்கள் அனாயாசமாக சைக்கிள் ஓட்டும் மகிழ்ச்சியை மீண்டும் பெற, பி.எஸ்.ஏ. இப்போது இந்தியாவிலேயே தயாராகிறது. அமைப்பு அழகுக்கும் அயராத சேவைக்கும் உலகப் புகழ்பெற்றது பி.எஸ்.ஏ. உலகில் இப்பகுதியில் சிறந்த சைக்கிள்களைத் தயாரித்து வருபவர்களால் இப்போது பி. எஸ். ஏ. சைக்கிள் அதன் உயர்ந்த தரத்திற்கேற்பத் தயாரிக்கப்படுகிறது.

சிறந்த சைக்கிள் வேண்டுமா ?
பி.எஸ்.ஏ.வைத் தேர்ந்தெடுங்கள்



பி.எஸ்.ஏ. உங்கள் மனைக்குரிய உயர்ந்த சைக்கிள்

தயாரிப்போர்: டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா, அம்பத்தூர், மதராஸ் 53.
உரிமையாளர்கள்: ட்யூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், மதராஸ்.

JWT-TIC-BSA-2565

ஜெர்மனியும் ஜப்பானும் ருஷ்யாவும் பிரிட்டனும் அடைந்த துன்பத்தையெல்லாம் நாமும் அனுபவிக்கணும். தூண்டில் புழுவாகத் துடிக்கிற மாதிரி கஷ்டப்பட்டால்தான் நமக்கும் சுரணை பிடிக்கும். உழைப்பின் பெருமையையும் அப்போதுதான் உணருவோம். அடியோடே உருத் தெரியாமல் அழிஞ்சு போன தேசங்களெல்லாம் எப்படி மாயா ஜாலம் போல் மாறிக்கிட்டு வருது: நாம இங்கே எத்தனை மணி நேரம் வேலை செய்யறதுன்னு தர்க்கம் பண்ணிக்கிட்டிருக்கோம்!''

தங்கப்பன் ஏதோ ஆவேசம் வந்தவன் போலப் பேசினன். ரயிலில் இருந்த பல பிரயாணிகளின் தலைகள் அவனைப் பார்க்கத் திரும்பின.

''என்ன தம்பி, ஏதோ பேச்சுக்குச் சொல்லப் போன பெரிசா 'லெக்சர்' அடிக்க ஆரம்பிச்சுட்டே?'' என்றார் சபாபதி.

''அதுக்கில்லே, மாமா! இந்த விஷயத்திலே நான் ரொம்ப 'ஸ்ட்ராங்கா ஃபீல்' பண்ணறேன். நம்ம தொழிலாளர்கள், ஊழியர்கள் சார்பிலே பேசறவங்களெல்லாம் அரசியல் கண்ணோட்டத்திலே உரிமையைப் பற்றி மட்டும் பேசறாங்க. கடமையைக் கற்றுத் தரத் தவறிடறாங்க. நாம் எப்படி எந்த ஜன்மத்திலே முன்னேறுகிறது, மாமா?''

''இந்தாம்மா, செல்லம்! 'அத்தான் அழுத்தலா உட்கார்ந்துக்கிட்டு வராரு, தாராளமா பேசலே'ன்னு நீதானே கொஞ்சம் முன்னாடி குறைப்பட்டுக்கிட்டே? நல்லா கேட்டுக்க!'' என்றார் சபாபதி.

அத்தானைப் பற்றிப் பெருமைப்படச் செல்லத்துக்கு இருந்த ஒரு மனம் போதவில்லை!

அத்தியாயம் 12

"இதென்ன கோழைத்தனம்?"

மகேசுவரியின் இடது கரத்தின் ஆள் காட்டி விரலில் சாவிக் கொத்து ஒன்று மாட்டப்பட்டிருந்தது. சத்தியபுரி வீட்டின் முன், பின் பக்கக் கதவுப்பூட்டுகள்; உள்ளேயிருந்த நான்கு இரும்பு பீரோக்கள்; உக்கிராண அறை, சமையலறை ஆகியவற்றின் பூட்டுகள்; சென்னை ஜாகையில் உள்ள இரண்டொரு அலமாரிகள்; உதகைக்குக் கொண்டு வந்திருந்த நான்கைந்து பெரிய பெட்டிகள் ஆகிய எல்லாவற்றின் சாவிகளுமாய்ச் சுமார் இருபது அல்லது இருபத்தைந்து அதில் கோக்கப்பட்டிருந்தன. கனத்த அந்தச் சாவிக் கொத்தின் மீது விரல்கள் மூடியும் திறந்தும் தாள ஒலி எழுப்ப, அந்த ஓசையின் சுகத்திலே கிறங்கியது போல் தலை ஒரு பக்கமாகச் சாய்ந்து ஒடிய அதனைத் தாங்கிய வலது கரத்தின் மீது கன்னம் பதிந்திருந்தது. சாவிக் கொத்தின் தாள லயத்திலே ஈடுபட்டு அவள் 'அக்கடா' வென்று அந்தச் சாய்வு நாற்காலியிலே விழுந்து கிடந்தாள். ஒவ்வொரு முறையும் சாவிக் கொத்தின் மீது விரல்கள் அழுந்தும் போதும் அந்த இரும்பின் உறுதி அதனை ஸ்பரிசித்த நரம்புகள் வழியே மின் அலைகளைப் போல் பாய்ந்து இதயத்தை அடைந்து அதனை மேலும் தெம்புடன் இயங்கச் செய்வது போல் அவளுக்குத் தோன்றியது! கண்களை மூடியதும் மூடாததுமாக அரை மயக்க நிலையிலே இருந்தவளுக்கு அதே அறையில் ஜன்னலோரமாகக் கட்டிலில் படுத்திருந்த உஷா தூக்கத்திலேயே ஏதோ மெல்ல முனகுவதும் விசும்புவதுமாக இருந்தது கேட்கவில்லை.

உஷாவின் இடது காலில் பாதத்தையும் கணுக்காலையும் மறைத்துக் கனமான கட்டுப் போட்டிருந்தது. கால் அசையாமல் இருக்க வேண்டும் என்பதற்காக அதனைத் தூளியிட்டதுபோல் உயரே தூக்கி வைத்துக் கட்டிலின் மேல் சட்டத்திலிருந்து தொங்க விட்டிருந்தார்கள்.

'குழவி போல் வீங்கியிருக்கிறதே' என்று தான் பதறித் துடித்த பிறகு உஷாவைப் படுக்க வைத்த சிறிது நேரத்துக்கெல்லாம் தீனதயாளு வந்ததும், அப்புறம் அவர் போன் செய்ய டாக்டர் வந்து சேர்ந்ததும், அவர் ஆலோசனைக்கிணங்க உஷா ஆஸ்பத்திரிக்குக் காரில் உடனடியாக அழைத்துச் செல்லப்பட்டதும், அங்கே எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த பின்னர் கணுக்காலில் சிறிய எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பதாக முடிவானதும், கட்டுகள் போடப்பட்டதும் எல்லாம் ஏதோ கனவில் நிகழ்ந்தவை போலத்தானிருந்தன மகேசுவரிக்கு. அவற்றை நம்புவதே சிரமமாக இருந்தது. 'உஷாவுக்கா இப்படியெல்லாம் ஆயிற்று? உஷாவுக்குக்கூட இவ்விதம் துன்பம் நேரக் கூடுமா?' நிஜமாகவே அப்படி நடக்கக் கூடும், நடந்திருக்கிறது என்பதற்குப் பிரத்தியட்ச சாட்சியாக உஷாவே தன்



''எதற்குடாப்பா என் மூக்குக் கண்ணாடியைக் கேட்கிறாய்?''

''மாடியிலிருந்து உன் மூக்குக் கண்ணாடியால் புவிசுர்ப்புதானம் நிகழ்வதை அம்பிக்குக் காட்ட!''

எதிரில் கட்டுகளுடன் படுத்திருப்பதைப் பார்த்ததும் நம்புவதைத் தவிர வேறு வழி புலப்படவில்லை மகேசுவரிக்கு. ரொம்ப நேரத்துக்குப் பிறகு இப்போதுதான் கொஞ்சம் கண்ணயர ஆரம்பித்திருந்தாள் உஷா. காயம் பட்டிருப்பதாகத் தெரிந்த கணத்திலிருந்து அவளைப் பிரியாதிருந்த மகேசுவரியும் முதல் தடவையாக அவள் பக்கத்திலிருந்து விலகிச் சற்று எட்டப் போய் நாற்காலியில் ஒய்வாக அமர்ந்தாள். தீனதயாளு மீண்டும் ஏதோ அலுவலாக வெளியே சென்றிருந்தார்.

இப்போது திடீரென்று பீதியுடன் வீறிட்டு அலறியபடி விழித்துக்கொண்டாள் உஷா. தூக்கிவாரிப் போட்டது மகேசுவரிக்கு. சொகுசாகக் கால் நீட்டி உட்கார்ந்திருந்த அவளுக்குத் தன்னுடைய இரட்டை நாடியான சரீரத்தைத் தூக்கிக் கொண்டு நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிச் சட்டென்று எழுந்து வருவதென்பது எளிதான காரியமாயில்லை. இருப்பினும் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் இடுப்பில் சாவிக் கொத்தைச் சொருகியவாறே விரைந்து கட்டிலை நெருங்கினாள். அவளுக்கு முன்பாகவே அவள் குரல் உஷாவை நாடி வந்து விட்டது, சமாதானப்படுத்தும் வகையில். ''ஏனம்மா ஏனம்மா!'' என்று பச்சைக் குழந்தையைத் தேற்றுவது போல் கூறியவள், கட்டில் விளிம்பில் அமர்ந்து நெற்றியைத் தடவிக் கொடுத்தவாறே, ''பயப்படாதே, கண்ணு! ஒண்ணுமில்லே, நான் இங்கேதான் உன் கிட்டத்திலேயேதான் இருக்கேன்'' என்றாள்.

மூடியிருந்த உஷாவின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியது. தவித்துப் போனாள் மகேசுவரி. ''ஏதாவது சொப்பனம் கண்டு பயந்துட்டியா கண்ணு? இல்லேன்னு காலேத்தான் ரொம்பவும் வலிக்குதா? டாக்டருக்குப் போன் செய்யவா?'' என்று நடுங்கும் குரலில் கேட்டாள்.

''வேண்டாம்!'' — மெல்ல உதடுகளை அசைத்துக் கூறினாள் உஷா. ''அப்படியொன்றும் ரொம்ப வலி இல்லே'' என்று முணுமுணுத்தவள் பனிச்சென்று மகேசுவரியின் இரு உள்ளங் கைகளாலும் தன் முகத்தை மூடி மறைத்துக் கொண்டு, ''அத்தை! நான் நொண்டியாகப் போய் விடுவேனு அத்தை?'' என்று உரக்கக் கேட்டுக் கதறினாள்.

உஷா ஏதோ கனவுதான் கண்டிருக்கிறாள் என்பது மகேசுவரிக்கு விளங்கி விட்டது. ''சேச்சே! அதெல்லாம் ஒண்ணுமில்லே, கண்ணம்மா! கவலேயே படாதே! டாக்டர் உறுதியாகச் சொல்லியிருக்கார்.''

''நொண்டின்னு ஒரு காலேயே பறி கொடுத்துட்டுக் கட்கத்திலே கம்பை இடுக்கிக்கிட்டு நடந்தால்தானு? ஊனம் விழுந்திருச்சுன்னு என்ன பண்ணறது?''

''உன் வாயாலே அந்த வார்த்தைகளை யெல்லாம் சொல்லாதே உஷா!'' என்றாள் மகேசுவரி நாத் தழுதழுக்க. ''என் செல்லத்துக்கு, சொர்ண விக்கிரகத்துக்கு, அழகுச் சிலேக்கு அப்படி ஏதேனும் நேர்ந்து போச்சன்னு நானே என் கையாலேயே அந்த டாக்டருக்கு விஷம் வைச்சுடுவேன்!''

''அவரை ஏன் சாக அடிக்கணும்? விஷத்தை என்னிடம் இப்பவே கொடு! என்னல் ஊனம் விழுந்த காலோடே உயிர் வாழ முடியாது!''

அவசரம் அவசரமாகத் தன் வாயைப் பொத்திய கரத்தை விலக்கித் தள்ளிவிட்டு, ''அத்தை! எனக்குப் பயமாயிருக்கிறது அத்தை!'' என்று கூறி உஷா விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள். அதைத் தொடர்ந்து மகேசுவரியும் அடக்க மாட்டாமல் 'கோ' வென்று கதறி அழுது தீர்த்தாள்.

அந்த ரகளையில் தீனதயாளுவின் கார் வாசலில் வந்து நின்றதையோ, அவர் அழுகுரல் பெரிதாக ஒலிப்பதைக் கேட்டுப் பிரமித்து ஒரு கணம் தயங்கியதையோ பிறகு ஒரு தீர்மானத்துடன் அவர் வேகமாக உள்ளே வந்ததையோ அவர்கள் கவனிக்கவேயில்லே!

''சீச்சீ! இதென்ன கோழைத்தனம்?'' என்று அதட்டினார் தீனதயாளு.

(தொடரும்)



திருமுருக கிருபானந்த வாரியார்

33. விழலுக்கு இறைத்த நீர்

சகோதர பாவத்துடன் சூரபன்மனுக்குத் தருமத்தை எடுத்துக் கூறுகிறார் வீரவாகுதேவர் :

தாதை யாகியோன் காசிபன்
ஆங்கவன் தனயன்
ஆத லால்உனக் கமரரைச்
சிறைசெய்வ தரனே
வேத மார்க்கமும் பிழைத்தனை
சிறுபொருள் விழைந்தாய்
நீதி யால்உல களிப்பதே
அரசர்தம் நெறியே

உயிரினங்கள் அத்தனை பெருக்கும் காசிபர்தான் பிதா. காசிபருக்குப் பதின்மூன்று மனைவிகள். அதிதியின் வயிற்றிலே முப்பத்து முக்கோடி தேவர்களும் பிறந்தனர். திதி என்பவளின் வயிற்றில் அறுபத்தாறு கோடி அரக்கர்கள் பிறந்தார்கள். மதி என்பவள் மனிதர்களைப் பெற்றாள். சுரபி என்பவள் பசுக்களைப் பெற்றாள். குரோதவசை என்பவள் கழுதை, கடம்பை, ஒட்டகம் முதலிய விலங்குகளைப் பெற்றாள். வினதை என்பவள் காற்று, இடி, மின்னல், அருணன், கருடன், கூகை, பருந்து முதலியவற்றைப் பெற்றாள். மாதங்கி என்பவள் வயிற்றில் யானை முதலியன பிறந்தன. தாம்பிரை என்பவள் ஊர்க் குருவி, காடை, கௌதாரி முதலியவற்றைப் பெற்றாள். கதை என்பவள் பாம்பு முதலியவற்றைப் பெற்றாள். அரிட்டை என்பவள் ஓணான், உடும்பு முதலியவற்றைப் பெற்றெடுத்தாள். இப்படியாக, காசிபராலும் அந்தப் பதின்மூன்று பெண்களாலும் இந்த உலகம் உண்டாயிற்று. அதாவது சகல புவனங்களிலும் உள்ள எல்லா ஜீவராசிகளும் சக்திகளும் தவத்தினின்றே தோன்றின என்பது இதன் பொருள். தவம் நல்ல பொருளைச் சார்ந்திருப்பின் அதனின்று நல்லது பிறக்கும்; தீய பொருளைச் சார்ந்திருப்பின் தீயது பிறக்கும். தீபத்தைப் போல நல்லது - அல்லது இரண்டின்மீதும் சமமாகப் பிரகாசிப்பதே தவம். தவம் என்பது மன ஒருமைப்பாட்டின் முதிர்ச்சி. மனத்தை நல்ல இலட்சியம், தீய இலட்சியம் இரண்டின் மீதும் ஒரு

மூகப்படுத்தலாம் அல்லவா? காசிபரும், அவர் மணந்த பெண்களும் ஸ்தூலமானவர் மட்டுமல்ல; தத்துவச் சின்னங்களாகவும் அமைந்தவர்கள். நல்லவை மட்டுமே இறைவன் படைப்பு. தீயவை சாத்தானின் படைப்பு என்று கிறிஸ்துவ சமயம் போல் கூறாமல் நன்மை, தீமை எல்லாம் ஒரே பரம்பொருளிடமிருந்து உண்டாவின என்ற நம் மதக் கருத்தையே காசிபரிடமிருந்து உயிர்க் குலம் அனைத்தும் பிறந்ததாகக் கூறுகிறோம். இதை சூரனுக்கு நினைவூட்டுகிறார் வீரவாகு தேவர்.

"சூரபன்மனே! உனக்குத் தந்தை காசிபர். தேவர்களும் அவருடைய புதல்வர்கள்தான். எனவே, தேவர்கள் உனக்கு மூத்த சகோதரர்கள். அவர்களை நீ சிறை வைப்பது நியாயமா, தர்மமா? நீ வேத நெறியை விட்டு விட்டாய். செம்மையான நெறியை நீ கைக்கொள்ளவில்லை. அற்பப் பதவியைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறாய். மன்னனுக்கு என்று நீதி நெறி உண்டு. அந்த நெறியில் நிற்பதுதான் அரசனுக்கு அழகு. அந்த ராஜ தர்மத்தை நீ மேற்கொள்ள வேண்டாமா? குற்றமற்றவர்களைச் சிறையில் வைத்திருக்கலாமா? முன் காலத்தில் அசுரர்களுக்குத் தேவர்கள் துன்பம் செய்திருக்கிறார்கள் என்பதற்குப் பிரதியாக அவர்களைச் சிறை வைப்பதாயிருந்தாலும் அதற்கும் ஓர் எல்லை இருக்க வேண்டாமா?

"ஒருவன் கொலை செய்தால் அந்தப் பாபம் அவன் ஒருவனைத்தான் பற்றும்; அவன் குடும்பத்தினர் எல்லோரையும் பற்றாது. ஆனால் குடும்பத்தைப் பற்றுகின்ற பாபம் ஒன்று உண்டு. பரம சாதுக்களுக்கும்,' மிகவும் உத்தமமான பெரியவர்களுக்கும் எவன் ஒருவன் தீங்கு செய்கிறானோ, மகான்களுக்கு எவன் கெடுதல் எண்ணுகிறானோ அவன் தன் அழிவுக்கு மட்டுமின்றித் தன் சுற்றத்தாருடைய அழிவுக்கும் காரணமாவான். அதுமட்டுமல்ல, பிறவி எழுந்தோறும் எழுந்தோறும் அந்தப் பாபம் அவனைத் தொடரும்.

"சூரபன்மா! நீ எத்தனை சாதுக்களுக்கும், மகரிஷிகளுக்கும் தீங்கு செய்தாய்? நீ இப்போதேனும் திருந்தினால் முருகன் அருள் பெற்று உய்வாய். திருந்தாவிடில் கூண்டோடு அழிந்து விடுவாய். உனக்கு அறிவுரை சொல்ல யாரும் இல்லை. நான் சொல்கிற நல்லுரையையேனும் மனத்தில் வாங்கிக் கொள். போனதெல்லாம் போகட்டும். நீ இப்பொழுதேனும் தேவர்களைச் சிறையிலிருந்து விட்டு உய்ய வேண்டும் என்பதற்காக உனக்கு நீதி நெறியை இதமாகச் சொல்லச் சொன்னார் முருகப் பெருமான். இன்னமும் நீ பிடிவாதமாக இருந்தால் முருகப் பெருமான் உன்னைக் குலத்தோடு அழித்து விடுவார். இது உறுதி" என்று வீரவாகு தேவர் கூறினார்.

அவர் கூறியதைக் கேட்ட சூரபன்மனின் கண்கள் தீப்பொறி கக்கின. ஆத்திரத்துடன் அட்டகாசம் செய்தான். வீரவாகு தேவரை நோக்கி, "நீ தூதனாக இருப்பதால் உன்னை விட்டு விடுகிறேன். மாதரையும், தூதரையும் கொல்லக் கூடாது. நீ சொன்ன மொழிகளைச் சிவபெருமான் என்னிடம் வந்து சொல்லியிருந்தால் கௌரவமாக இருந்திருக்கும்; நாராயணர் வந்து சொல்லியிருந்தாலும் பாதகமில்லை. ஆயிரத்தெட்டு அண்டங்களையும் வென்று ஏகச் சக்கராதிபதியாய் விளங்கும் எனக்குப் பல் முளைக்காத சின்னஞ் சிறு குழந்தை புத்தி சொல்லியனுப்ப, அதனை ஏவலாளாகிய நீ எடுத்தியம்புவதா? இதைவிட அவமானம் என்ன வேண்டும்? தூதனே! சிறையில் அடைத்து வைத்திருக்கும் தேவர்களை ஒருகாலும் விடுதலை செய்ய மாட்டேன். அதுமட்டும் அல்ல; எனக்குப் பயந்து எங்கோ ஓடி ஒளிந்து கொண்டிருக்கிற இந்திரனையும் பிடித்துச் சிறை செய்யவிருக்கிறேன். என் அருமைச் சோதரன் தாரகனைக் கொன்றவன் சிறுபிள்ளை என்பதாலேயே, 'பச்சிளங் குழந்தையுடனா போர் செய்வது?' என்று கட்டுப்படுத்திக்கொண்டேன். மற்றபடி எனக்கு உன் முருகனிடம் அச்சமேதும் கிடையாது. அவனுடைய குழந்தைப் பேச்சுக்கு இந்த சூரன் செவி சாய்க்க மாட்டான். என் போக்கை யாரும் மாற்ற முடியாது" என்று கர்ஜித்தான்.

"மேலை ஆயிரத்தெட்டெனும்
அண்டமும் வென்றே
ஏறு கின்றதோர் தனியிறை
யாகிய எனக்குக்
கோல வாலெயி றின்னமுந்
தோன்றிலாக் குதலைப்
பால னேகொலாம் இனையன
புத்திகள் பகர்வான்!"

"என் ஆளுகைக்குட்பட்ட ஆயிரத்தெட்டு அண்டங்களிலே, ஆயிரத்தெட்டு நாராயணர்கள் எனக்கு அடங்கி வேலை செய்கிறார்கள். ஓர் அண்டத்திற்கு ஒரு பிரம்மா வீதம் ஆயிரத்தெட்டு பிரம்மாக்கள் என் ஏவலைச்

செய்கிறார்கள். ஓர் அண்டத்திற்கு ஓர் இந்திரன் வீதம் ஆயிரத்தெட்டு இந்திரர்கள் என் உத்தரவுக்குக் காத்து நிற்கிறார்கள். என்னிடம் தோற்றுப் போய், எனக்கு 'ஜய விஜயீபவ' கூறு கிறார்கள். அப்படியிருக்க ஏன் வீண் பேச்சு? சிறு குழந்தையின் பேச்சைக் கேட்டு இங்கே வந்த உன்னை ஒரு பேதை யாகக் கருதி உனக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தேன். பிழைத்துப் போ, ஓடு'' என்றான்.

சூரபன்மனின் மறுமொழியைக் கேட்ட வீரவாகு தேவருக்கு ஆத்தி ரம் பொங்கியது. ஆயினும் சூரபன் மனுக்காக இரக்கப்பட்டார். 'அவன் விளங்காமல் பேசுகிறான். நான் வந்தது அவனுக்கு விளங்க வைக்கத்தானே? அவன் விளங்காமல் கூச்சல் போட் டால் நாமும் எதிர்க் கூச்சல் போடு வதா?' என்று எண்ணினார். மீண்டும் நல்ல வார்த்தை கூறினார்.

முருகப் பெருமான் சிறுவராயிருப்பி னும் சக்தியில் மிகப் பெரியவர் என்று சூரனுக்கு விளக்குமுகமாக, அரியும் அயனும் அடிமுடி தேடியும் காண முடியாத அரன்மகன் அவர் என்பதைக் கூறினார் வீரவாகு.

மண் அளந்திடும் மாயனும்
வனசமே லவனும்
எண்ணரும் பகல் தேடியுங்
காண்கிலா திருந்த
பண்ணவன் நுதல் விழியிடைப்
பரஞ்சுடர் உருவாய்
உண்ணிறைந்த பேரருளினால்
மதலையாய் உதித்தான்

சிவஜோதியின் அடி, முடி தேடுகை யில் மேலே போனவர் அன்ன வடி வெடுத்த அயன். கீழே சென்றவர் வராக வடிவு கொண்ட விஷ்ணு. வராகம் எங்கே வாழும்? காட்டில். காட்டுப் பன்றி என்றே சொல்கிறோம் அல்லவா? அன்னம் வாழ்வது தாமரை யில். இங்கோ தாமரையில் வாழ்கின்ற அன்னம் சிவனாரின் சடை என்ற காட் டைத் தேடியது. வராகமோ வெளில் பரமசிவனின் பாதமாகிய தாமரையைத் தேடியது. இயற்கைக்கு மாறாக நடந்த தால் இரண்டாலும் பரம்பொருளை அடைய முடியவில்லை. சூரனும் தன் னுடன் பிறந்தவரே தேவர் என்ற இயற்கை உறவை மறந்து சென்றான். எனவே பிரம்ம விஷ்ணு காண இயலாத பரமசிவத்தின் மறு உருவமான முருகன், இயற்கையை மீறும் அரக்கனை அழிப் பான் என்பதை வீரவாகு கூறாமல் கூறினார்.

முன்ன வர்க்குமுன் னாகுவோர்
தமக்கு முற்பட்டுத்
தன்னை நேரிலாத ஈசனும்
தனிப் பெயர் தாங்கி
இன்னுயிர்க் குயிராய் அரு
வுருவமாய் எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும்
பரமனே அவன்காண்''

சிவபெருமான் வேறு; கந்தன் வேறு என்று நினைத்ததுதான் சூரபன்மன் செய்த பெரும் பிழை. சிவபக்தனெனத் தன்னைச் சொல்லிக்கொண்ட சூரனுக்கு வீரவாகு இதனை எடுத்துக் காட்டினார்.

''ஈசனே அவன் ஆடலால்
மதலை ஆயினன்காண்
ஆசிலா அவன் அறுமுகத்
துண்மையால் அறிநீ
பேசில் ஆங்கவன் பரனொடு
பேதகன் அல்லன்
தேசுலா வகன் மணியிடைக்
கதிர்வரு திறம்போல்''

''சூரபன்ம! ஆறு முகம் கொண்ட சங்கரரே திருவிளையாடல் காரணமாக ஷண்முகராக வந்திருக்கிறார். மாணிக்க மணியிலிருந்து ஒளி வரும். அந்த ஒளி வேறு; மணி வேறு அல்ல. சிவன் என்னும் மாணிக்கக் கல்லிலிருந்து வீசும் ஒளி கந்தன்.

''சூரபன்ம! ஆயிரத்தெட்டு அண்டங் களின் அதிபதி என்பதால் தருக்குற் றுப் பேசுகிறாய். ஆனால் அனந்த சக்தி பெற்ற பரம்பொருளின் சிருஷ்டி முழு தும் உன் ஆளுகைக்கு வந்துவிடவில்லை என உணர்வாயாக. பிருதிவி முதலிய ஒவ்வொரு பூதத்துக்கும் பலகோடி அண்டங்கள் உள்ளன. அதிலே உன் ஆளுகைக்கு உட்பட்டது ஆயிரத்தெட்டு. அவ்வளவே! பிரபஞ்சத்தில் ஒரு கடுகு மாத்திரத்தை ஆளுகின்ற உனக்கு இவ்வளவு பெருமை எனில் எல்லாப் புவனங்களையும் அண்டங்களையும் ஆக்கி ஆளுகின்ற எம்பெருமானின் பெருமை எப்படி இருக்கும்? அவரது சக்தி எப்படி யிருக்கும்? அதை உன்னால் எதிர்க்க இயலுமா? ஆயினும் எம்பெருமானுக்கு சக்தி இருப்பது மட்டுமின்றிக் கருணை யும் உள்ளது. கந்தன் கருணை உனக்குக் கடுகளவு ஏற்பட்டாலும் அகில உலகங் களுக்கும் தலைவனாவதைவிடப் பெரும் பேறும் ஆற்றலும் பெறுவாய்'' என உபதேசித்தார்.

இந்தக் கருத்தைக் குமரகுருபரரும் சொல்லுகிறார்:

பெரும்புவி யூரேம்பிரானருள் மேவிலொரு
துரும்பும் படைத்தழிக் கும்
அகிலாண்டத் தொகுதியையே

"பிரபஞ்சம் எங்கும் நிறைந்து அருள் செய்கின்ற குமரவேளுக்கு எங்கும் திருமுகங்கள்; எங்கும் திருக்கண்கள்; எங்கும் திருச்செவிகள்; எங்கும் திருக்கரங்கள்; எங்கும் திருவடிகள்; எங்கும் திருமேனி. அடியார்கள் எங்கெங்கு கண்ணீர் விடுகிறார்களோ அங்கெல்லாம் தேடிச் சென்று அவரது முகம் அருள் புரிகிறது.

எங்கணும் பணி வதனங்கள்
எங்கணும் விழிகள்
எங்கணும் திருக் கேள்விகள்
எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக் கழலடி
எங்கணும் வடிவம்
எங்கணும் செறிந்தருள்
செயும் அறுமுகத் திறைக்கே

"சூரபன்மனே! ஆண்டவனைப் பற்றி உனக்குத் தெரியாது. கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது. ஆதலால் அதற்கு சூரியன் தெரியாது. சூரியனைக் கோட்டானுக்குத் தெரியவில்லை என்பதால் சூரியன் இல்லை என்று சொல்லிவிட முடியுமா?" என்றார் வீரவாகு.

சூரனின் சாம்ராஜ்யத்தில் இயமனுக்கு வேலை இல்லை. அங்கே, நோய் இல்லை; வறுமை இல்லை எனில் அசுர சைனியங்கள் எப்படிப் பெருகி யிருக்கும்? இவை யாவற்றுக்கும் சூரனின் தவமே காரணம். ஆனால் எம்பெருமான் எதிர்த்து வந்தால் இவ்வனைத்தும் அழிவு பட்டுவிடும் என வீரவாகு அறிவுறுத்தினார். ஆகாயத்தைத் தொடுகின்ற உயரத்துக்கு எழுந்துள்ள புழுதி மலை மீது யுகாந்த காலத்தில் சண்ட மாருதம் வீசினால் புழுதி இருக்கும் இடம் தெரியுமா? அந்தப் புழுதிபோல் அசுரர் இருந்த இடம் தெரியாமல் சிதறிப் போய் விடுவர் என்று கூறினார் வீரவாகு.

ஒரு கோடி காகங்கள் சேர்ந்து மாநாடு நடத்தினாலும் ஒரு சின்னஞ்சிறு கல்லை எறிந்தால் அவை அனைத்தும் பறந்து ஓடும் அல்லவா?

காகமா னவைகோடி கூடினும்
குனுமோரு
கல்லின்முன் னெதிர்நிற்குமோ ?

அவ்வாறே ஆயிரம் கோடி அசுரர்களாகிய காகங்களுக்கு முருகப் பெருமானின் வேல் ஒரு கல்லாக வரும் என்று வீரவாகு தேவர் கூறினார்.

முதலையும் மூர்க்கனும் கொண்டதை விட மாட்டார்கள். சூரபன்மனின் சொல் மூர்க்கத்தனமாகவே இருந்தது. வீரவாகு கூறிய மொழிகளைக் கேட்டு சூரபன்மன் திருந்தவில்லை. அவரது நல்லுபதேசம் விழலுக்கு இறைத்த நீராகவே வீணாயிற்று. முன்னிலும் பெருஞ் சினம் கொண்டான் சூரன். "உயிரை விட்டாலும் விடுவேனே யன்றித் தேவர்களைச் சிறையினின்றும் விடுதலை செய்ய மாட்டேன்" என்றான். அதைக் கேட்ட வீரவாகு தேவர், "அப்படியானால் நீ ஐயனின் வேலால் அழிந்து படுவாய்" என்றார்.

தூதாக வந்த அநுமனைக் கொன்றுவிடச் சொன்ன இராவணனிடம், 'தூதரைக் கொல்லுதல் நீதியும் அல்ல; நெறியும் அல்ல' என்று கூறித் தடுத்தார் விபீஷணர். ஆனால் சூரபன்மன் பிறர் எடுத்துரைக்க இடம் வைக்காமலே, தூதரைக் கொல்லுதல் கூடாது என்பதை உணர்ந்தவன். எனவே வீரவாகு தேவரைக் கொல்ல ஆணை பிறப்பிக்கவில்லை. அருகிலிருந்த வீரர்களில் ஆயிரவரை நோக்கி, "இவனையும் பிடித்து, இவன் காக்க வந்த தேவருடன் சிறையில் அடையுங்கள்" என்று உத்தர விட்டான்.

வீரர்கள் வீரவாகு தேவரைப் பிடிப்பதற்குச் சூழ்ந்து கொண்டார்கள். தனியொருவரான அவரே அந்த ஆயிரம் வீரர்களின் சிகைகளையும் ஒரு கையால் பிடித்துச் சூரபன்மனின் அவைக்களத்திலேயே அடித்துக் கொன்றார்; மலைகளைப் பெயர்த்தெறிந்து நகரையே நிர்மூலமாக்கினார். சூரனின் எதிரிலேயே இறந்தவரின் உடலங்களை எறிந்து அங்கிருந்து கிளம்பினார்.

அவர் அகன்றதும் அவர் அமர்ந்திருந்த சிங்காதனமும் மாயமாய் மறைந்தது. **(தொடரும்)**





இன்றைய நாகரிகம் இன்றைய_நாகரிகம் இன்றைய நாகரிகம் இன்றைய நாகரி







ன்றைய நாகரிகம் இன்றைய நாகரிகம் இன்றைய நாகரிகம் இன்றைய நாகரிகம்

கூடைக் கொண்டையில் பல ரகங்கள் உள்ளன. அவற்றில் கல்லூரி மாணவிகள் பெரிதும் விரும்புகின்ற ஒரு விதக் கொண்டையை குமாரி ஜயா கோகுலமணி மேலே உள்ள படத்தில் போட்டுக் கொண்டிருக்கிறார். இத்தகைய கொண்டையை நம் விருப்பம்போல் தேவையான அளவுக்கு உயரமாகவும் தூக்கலாகவும் அமைத்துக் கொள்ளலாம். அவரவர் முகத்துக்கும் கழுத்து அமைப்புக்கும் ஏற்றவாறு இதை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வகிட்டை நீளமாக எடுக்க வேண்டிய அவசியமில்லை. சிறிதளவு வகிடு எடுக்கலாம் அல்லது வகிடு இல்லாமலும் பின்புறமாகத் தூக்கி வாரிக் கொள்ளலாம். பின்புறம் உச்சிக்கருகே சிறிதளவு கேசத்தை எடுத்து பாக் பிரஷ் (Back Brush) செய்து கொள்ளவும். அதைச் சுருட்டி, உச்சிக்கருகே பின்களைப் பொருத்தித் தூக்கலாக அமைத்துக் கொள்ளவும். பின்னர் முன் கேசத்தைப் பின்புறமாக வாரி, சுருட்டி வைத்திருக்கும் சுருளை மூடியவாறு கீழே கொணர வேண்டும். தகுந்தவாறு பின்களைப் பொருத்த வேண்டும். படம் 1ல் காண்பது போல் கூடை அமைந்து விடும். இதன் பின், படம் 2ல் உள்ளதுபோல் கூடையை மூடியபின் உள்ள கேசத்தைக் கறுப்புக் கயிற்றினால் கட்டி இலேசாகச் சுருட்டி, ஊசிகளைப் பொருத்த வேண்டும். இப்பொழுது நடுக் கொண்டையும் தயாராகி விட்டது. இனி மீதமுள்ள கேசத்தை மூன்று பிரிவாகப் பிரித்து, படம் 3ல் உள்ளது போல் ஒன்றன்பின் ஒன்றாக இலேசாக முறுக்கிச் சுற்றிவிட வேண்டும். முதலில் நடுப் பிரிவை எடுத்துக் கொள்ளுங்கள். இதன் பின் மற்ற இரண்டு பிரிவுகளையும் சுற்றி விடுங்கள்.

கூடையும், கொண்டையும் பெரிதாக வர வேண்டும் என விரும்பினால் நைலான் அல்லது சாதாரண சவுரியையும் 'பாட்' (Pad)டையும் உபயோகிக்கலாம். அவரவர் விருப்பம்போல் அலங்கார அணிகளையும் கொண்டை ஊசிகளையும் பூக்களையும் பொருத்தமாக அணிந்து கொள்ளலாம். —*சரஸ்வதி ராம்நாத்*

படம்: ஸ்டில்லோகிராப் ஸ்டூடியோ

நங்கையர் மேனி நலம்பெற்று மிளிர...

கோகுல் **ஸான்டால்** டாய்லெட் பவுடர்

•

கோகுல் **ஸான்டல்வுட்** டாய்லெட் பவுடர்

•

கோகுல் **ப்யூடி பவுடர்**

•

கோகுல் **டர்மரால் சோப்**



டி. எஸ். ஆர் & கோ

மதராஸ்
&
கும்பகோணம்



CRITERION-TSR-366



- படித்த மனைவி -

பணக்கார வாலிபனுகிய சங்கர், பெற்றோர்களுக்குத் தெரியாமல் அநாதைப் பெண்ணைச் சந்தர்ப்ப வசத்தினுல் மணந்து கொள்கிறன். அநாதையாளுலும் கௌரி படித்த பெண். இருந்தும் என்ன? சங்கரின் தந்தைக்கு அவளைக் கண்டாலே ஆகவில்லை. மகனையும் மருமகளையும் வெறுத்து ஒதுக்கி விட்டார். அவர் தாம் வேலை பார்க்கும் தொழிலதிபரின் மகளைத் தம் மகனுக்கு மணம் முடிக்க விரும்பியதுதான் காரணம். ஒன்றும் இல்லாத காரணத்துக்கு அந்தப் பெரிய மனிதர் மகனையும் மருமகளையும் பாடாய்ப் படுத்தி வைக்கிறர். இடைவேளைக்கு அப்புறம்கூட அவர் திருந்தவில்லை. கடைசிக் காட்சியில், எல்லாம் சுபமாய் முடிய வேண்டுமே என்று அவர் திருந்தி விடுகிறர்!

எஸ். எஸ். ராஜேந்திரன் நடிப்பில் குறைசொல்ல இடமில்லை. விஜயகுமாரிதான் "படித்த மனைவி". படாதபாடும் படுகிறர். கண்ணீர் விட்டு, கதறிக் கடைசியில் பிரிந்த குடும்பத்தைச் சேர்த்தும் வைக்கிறர் அவர். நல்ல நடிப்பு.

சங்கரின் தகப்பனுராக வரும் எஸ். வி. ரங்கா ராவுக்கு நடிக்கச் சொல்லித் தர வேண்டுமா என்ன? நன்றும் நடிக்கிறர்.

எம். ஆர். ராதா, எம். ஆர். ஆர். வாசு இருவரும் தோன்றும் கட்டங்களிலெல்லாம் ஒரே சிரிப்பாய் இருக்கிறது. படத்தில் வரும் பாடல்களில் ஒன்றுகூட நன்று யில்லையே !

படித்த மனைவி என்பதால் பகட்டும் படாடோபமும் மிகுந்து குடும்பப் பாங்குடன் நடக்கத் தெரியாதவளா யிருப்பாள் என்ற பரவலான அபிப்பிராயத்தைத் தகர்த்தெறிய முற்படுகிறது கதை. நல்ல கருத்துத் தான் அடிப்படையில். ஆனல் நல்லபடியாகத் திரைக் கதையில் கையாளப்படாதது வருந்தத்தக்கது.

'படிக்காத மேதை'யைத் தயாரித்து நல்ல பெயர் வாங்கிக் கொண்ட பாலா மூவிஸாரிடம் மக்கள் 'படித்த மனைவி'யில் இன்னும் அதிகமான திறமையையே எதிர்பார்ப்பார்கள்.

பம்பாயில் நாடக விழா

பம்பாயில் உள்ள மாதுங்கா நாடக சங்கம் சென்றமாத இறுதியில் தன்னுடைய வெள்ளி விழாக் கொண்டாட்டங்களையொட்டி நான்கு புதிய நாடகங்களை நடித்துக் காட்டியது.

விழாவின் முதல் நாடகமாகத் திரு கோமதி சுவாமிநாதன் எழுதிய 'ஆசைக்கு அளவில்லை' என்ற புதிய நகைச்சுவை நாடகத்தை முதல் தடவையாக இந்தக் குழு மேடை ஏற்றியது. இந்த அரங்கேற்றத்துக்காக வந்திருந்த நாடக ஆசிரியருக்குச் சங்க நிர்வாகிகள் மகாராஷ்டிர உள்துறை மந்திரி திரு தேசாயைக் கொண்டு பொன்னடை அணிவித்துக் கௌரவித்தார்கள்.



இரண்டாம் நாள் 'எது விதி?' என்ற சோக உணர்ச்சி நிறைந்த கனமான நாடகத்தையும், மூன்றும் நாள் 'ஜேம் அலக்நிரஞ்சன்' என்ற துப்பறியும் நாடகத்தையும், கடைசி தினத்தில் 'பக்த தியாகராஜர்' இசை நாடகத்தையும் இந்தக் குழு நடித்தது.

திரு எஸ்.ஆர். கஸ்தூரி, தியாகராஜராகத் தோன்றி முதல் கீர்த்தனையைப் பாடியபோதே நாடகத்தில் பிடிப்புத் தோன்றி விட்டது. நான்கு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த இந்த நாடகத்தைப் பொதுமக்கள் ஷண்முகானந்த சபாவின் ஏர் கண்டிஷன் வசதிக்காக மாத்திரம் உட்கார்ந்து ரசிக்கவில்லை. பக்திரசம் மிகுந்த நல்ல இசைக்காகவே நேரத்தை மறந்திருந்தார்கள்; மற்ற சில சில்லறைக் குறைகளையும் மன்னித்தார்கள்.

விழாவின் கடைசி நாள் நாடகத்துக்குப் பம்பாய் நகரின் முதல் தென்னிந்திய மேயர் திரு மாதவன் தலைமை வகித்து நடிகர்களைப் பாராட்டினர்.

சென்னையில் ஒரு நாடகக் குழு நகரத்தின் பல பகுதிகளிலும் தங்களுடைய ஒரே நாடகத்தைப் புதிய புதிய பார்வையாளர் கூட்டத்துக்கு நடித்துக் காட்ட வாய்ப்பு உண்டு; வசதி உண்டு. மெருகு ஏற்றிக் கொள்ளவும் இடம் உண்டு. ஆனல் பம்பாய் போன்ற நகரங்களிலோ பார்வையாளர்கள் நிரந்தரமாக ஒரே பகுதியினர்தான். என்னதான் சிரமம் எடுத்துக் கொண்டு உழைத்துத் தயாரித்த நாடகமானுலும் அதை இந்தக் காரணத்தினுல் ஒரு தடவைக்கு மேல் போட முடிவதில்லை. அல்லது இரண்டு மூன்று வருட இடைவெளி விட்டுப் போட வேண்டியிருக்கிறது. இதனுல்தான் அவர்கள் ஒவ்வொரு தடவையும் புதிதாக நாடகங்களைத் தயாரிக்க முற்படுகிறார்கள். முதல் தடவையில் காணப்படும் குறைபாடுகளைச் சீர் செய்து கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்காமலேயே போய் விடுகிறது. இதற்காக மாதுங்கா நாடக சங்கம் அயர்ந்து சோர்ந்து போவதில்லை. ஆர்வம் இருந்தால் ஆகாதது உண்டா?

உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.





கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது. ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.

இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2, சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022. பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன்—கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாத கால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது.



SP/1/P/7/65

பாப்பா மலர்

உருகிய உள்ளங்கள்


சாமா




1. தாயார் இரண்டு சாக்லெட் வாங்கி, "ராஜு! உனக்கு ஒன்றும், ராணிக்கு ஒன்றும் எடுத்துக் கொள்ளுங்கள்" என்பாள். ராஜுவே இரண்டையும் தின்று விடுவான்.



2. அவன்தான் அப்படி யென்றால் ராணியின் குணமும் அப்படித்தான். இரண்டு தின்பண்டங்கள் கொடுத்தால் ராஜுவுக்குக் கொடுக்காமல் அவள் தானே தின்றுவிடுவாள்.



3. ஒருநாள் வெய்யில் 42 டிகிரி காய்ந்தது. ஊரில் ஐஸ்கிரீம் கிடைப்பதே அரிதாகப் போயிற்று. ராஜு கடற்கரைக்குச் சென்றான். ரொம்பச் சிரமப்பட்டு இரண்டு ஐஸ்கிரீம் வாங்கினான்.



4. ஒன்றை அவன் தின்றான். அது 'ஜில்' என்று இனிப்பாக இருந்தது. மற்றொன்றைத் தன் தங்கை ராணிக்குக் கொடுக்க ஆசைப்பட்டு அதை எடுத்துக் கொண்டு வீடு நோக்கி ஓடினான். அது வரையில் அந்தப் பாழாய்ப் போன ஐஸ்கிரீம் இருக்குமா?





5.6. ஐஸ்கிரீம் உருகி வெறும் குச்சிதானிருந்தது. வீடு நெருங்கியதும் ராஜு அசடு வழிந்தான். அதே மாதிரி ராணியும் அவனுக்காகத் தான் வாங்கிய ஐஸ்கிரீம் உருகிவிடக் கையில் வெறும் குச்சியுடன் நின்றாள். இதைப் பார்த்த தாயார், "ஒரே ஒரு நாளைக்கு உங்க மனசு ஒத்துப் போயிருக்கு. அன்னிக்குப் போய் இந்த ஐஸ்கிரீம் உருகணுமா?" என்றாள்.



நீங்களும் அழகாக விளங்கலாம்

லாக்டோ-காலமைன் உபயோகித்தால்

ஏனெனில் அது ஒரு சாதாரண அழகு சாதனம் மட்டுமல்ல, சருமத்திலுள்ள குறைகளை நீக்கி ஒளியுடன் மிளிரச் செய்கிறது.


சருமத்திற்கு இதத்தைச் செய்யும் "காலமைன்" "விச்-ஹேஸல்" (பனிப்பிரதேசங்களில் வளரும் ஓர் வகை மரத்தின் திரவம்) ஆகிய உயர்தர மூலப் பொருள்கள் "லாக்டோ-காலமைனி"ல் சேர்க்கப்பட்டிருப்பதால் உங்கள் சருமம் இயற்கைப் பொலிவுடன் பளபளக்க உதவுகிறது. சருமத்தில் உள்ள குறைபாடுகளை அகற்றி சுத்தப்படுத்துகிறது. லாக்டோ-காலமைன் அவற்றை அடியோடு மறைத்தும் விடுகிறது. பவுடர் பூச்சுக்கு முன்பு உபயோகிக்க இது மிகச் சிறந்தது. சருமத்துடன் ஒன்றிப்போவதுடன் சருமத்தை பட்டுப்போல மழமழப்பாக்கி பிரகாசிக்கச் செய்கிறது. வெய்யிலினால் பாதிக்கப்பட்ட சருமத்திற்கு இதம் அளிக்கிறது. சருமத்தில் உள்ள குறைபாடுகளை மறைத்துப் போக்கிக் குணம் அளிக்கும் அழகு சாதனம் லாக்டோ-காலமைன் ஒன்றுதான். எண்ணெய் பசையற்றது. மெல்லியது. தினசரி உபயோகத்துக்கு நேர்த்தியானது.



குரூக்ஸ்

இயற்கை அழகு பொலிய வகை செய்கிறது **லாக்டோ-காலமைன்**

லாக்டோ-காலமைனில் இதர வகைகள்: கிரீம், (ஆடை) டால்க் (பவுடர்)



படிமக் கலை

வெ. கோபாலன்

இந்திய நளினக் கலைகளுள் சிற்ப, படிமக் கலைகளே மிகத் தொன்மையானவை.

மொஹெஞ்ஜதாரோ நாகரீகம் எனப்படும் கிறிஸ்துவ சகாப்தத்துக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வாழ்க்கை நிலையிலேயே படிமக் கலை தொட்டில் விளையாட்டு புரிந்து கொண்டிருந்ததெனப் புதைபொருள் ஆராய்ச்சிகள் புலப்படுத்தியிருக்கின்றன. மொஹெஞ்ஜதாரோவில் ஒரு நடன நங்கையின் அழகுப் படிமம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்தியப் படிமக் கலையின் வரலாற்றுத் தலைவி அந்த நடன நங்கைதான். இன்றைக்கு ஏறத்தாழ நாலாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஹரப்பா நாகரிகத்திலும் படிமக் கலை பாங்கான இடம் பெற்றிருந்தது.

வட இந்தியாவைப் பொறுத்த வரையிலும் கி. பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டளவில் படிமக் கலை களை கட்டத் தொடங்கி விட்டது. குஷானர், குப்தர், பாலர், சேனர் போன்ற ராஜீயப் பிரிவினர்கள் நேபாள, திபெத்திய கலைஞர்களுடன் கலை உறவு கொண்டு படிமக் கலையைக் கண்ணெனப் போற்றி வளர்த்திருக்கின்றனர்.

தென்னாட்டிலும் கிறிஸ்துவ சகாப்தத்துக்கு முன்னரே செம்பிலும், வெண்கலத்திலும் விக்கிரகங்கள் வார்க்கும் கலை நன்கு பரவியிருந்தது. சாளுக்கியர், பல்லவர், சோழர், பாண்டியர், விஜயநகர வேந்தர்கள் ஆகிய சாம்ராஜ்ய பூபதிகளே தென்னாட்டுப் படிமக் கலைக்கு ஆதரவளித்துக் காலமும் ஞாலமும் போற்றும் இணையற்ற அக்கலைச் செல்வங்கள் மலரக் காரணமானவர்கள்.

விக்கிரகங்கள் வார்த்தல் 'மதூச்சிஷ்ட விதானம்' எனப்படும். மதூச்சிஷ்டவிதானம் என்பதற்குப் படிமத்தின் மாதிரி வடிவைக் கொண்ட கூட்டினுள், உருக்கிய உலோகத்தை ஊற்றுவது என்று பொருள். விக்கிரகங்கள் வார்ப்பது இரு வகைப்படும். அவை கஷீரா — கூடுமுறை, சுஹுஷு - கூம்பு முறை என்பவை. சாதாரணமாக வீடுகளில் நித்திய பூஜைகளுக்கான விக்கிரகங்கள் கூம்பு முறையிலேயே தயாரிக்கப்பட்டன. இவ்விரண்டு முறைகளையும் பற்றிய செய்தி சோழர் கல்வெட்டு ஒன்றில் காணக் கிடக்கிறது. சோழ மன்னர் ஒருவர் தமது உபயமாக ஆலயமொன்றுக்குச் சண்டிகேசுவரப் பிரசாத தேவர் படிமமொன்றைக் கூம்பு முறையிலும், ரிஷப வாகனம் ஒன்றைக் கூடு முறையிலும் செய்வித்து அளித்ததாக அக்கல்வெட்டு அறிவிக்கிறது.



விக்கிரகங்கள் வார்க்கும் மதூச்சிஷ்ட விதான முறையைப் பற்றிச் சில்ப சாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ''படிமத்தின் மாதிரி மெழுகு வடிவுக்கு நன்கு களிமண் பூசக் கொடுத்து உலரச் செய்த பிறகு, ஸ்தபதி மெழுகை உருகச் செய்து கூட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும்; பிறகு வேண்டிய உலோகத்தைத் திரவ வடிவில் கூட்டில் செலுத்தி, உலோகம் உறைந்ததும் கூட்டை உடைத்துப் படிமத்தை நன்கு நீரில் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளல் வேண்டும்'' என்று கூறுகிறது சில்ப சாஸ்திரத்தின் 'மானஸாரா'.

படிமங்களை வார்க்கும் ஸ்தபதிகள் எனும் கலைஞர்கள் படிமக்கலை சாஸ்திரங்களைத் தியான சுலோகங்களாக மனப்பாடம் செய்து வைத்திருந்தனர். அவ்வகை தியான சுலோகங்களில் ஒன்றான அபில சித்தார்த்த சிந்தாமணியில் படிமம் வார்க்கும் முறை முழுவதும் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது :












உருவாக்கப்பட வேண்டிய விக்கிரகத்தின் மாதிரி வடிவம் மெழுகினால் 'நவதாள' அளவுமுறைப்படி அமைக்கப்பட வேண்டும். மெழுகு வடிவம் அழகான அமைப்புடன், கண்கள் உதடு போன்ற அங்கங்கள் கவர்ச்சியுடனும், கரங்கள் இயற்கையாகவும் உடை, ஆயுத ஆபரணங்களுடன் இருக்க வேண்டும்.

மாதிரி மெழுகு பிம்பத்தின்மீது இளகிய களி மண் பூச்சு கொடுக்க வேண்டும்; களிமண் கலவையுடன் மரத் துகள்களையும், துண்டு துண்டான நூல்களையும், உப்புக் கரைசலையும் சேர்த்துக் கொண்டு பூச்சுக் கொடுக்கக் கூடிய நிலையில் கலவையை வைத்துக்கொள்ள வேண்டும். மெழுகு வடிவத்தின் மீது இரண்டு மணி இடைவெளியில், மூன்று முறை பூச்சு வேலை நடைபெற வேண்டும். ஒவ்வொரு முறையும் நிழலிலேயே உலரச் செய்ய வேண்டும்.

விக்கிரகம் உருவாக்கப்பட உபயோகிக்க விருக்கும் செம்பு, தாமிரம், வெள்ளி, தங்க உலோகங்களின் எடை 'மாதிரி வடிவ'த்தின் மெழுகின் எடையை அனுசரித்து நிர்ணயிக்கப்பட வேண்டும்; தாமிரமும், செப்பும் மெழுகின் எடையைப் போன்று எட்டு மடங்கு இருக்கலாம். வெள்ளி பன்னிரண்டு மடங்கும், தங்கம் பதினாறு பங்கும் இருக்கலாம்.

விக்கிரகம் செய்யப்பட வேண்டிய உலோகத்தைத் திரவ நிலையில் வைத்துக் கொண்டு, களி மண் பூச்சால் ஆன கூட்டை உஷ்ணப்படுத்தி, துவாரக் குழல்வழியே மெழுகை அதிலிருந்து வெளியேற்ற வேண்டும். பிறகு, நல்ல உஷ்ண நிலையிலுள்ள உலோக திரவத்தைக் கூட்டினுள் துவாரக் குழல் வழியே செலுத்த வேண்டும். திரவம் குளிர்ந்து, உலோகம் உறைந்ததும் கூட்டை உடைத்து, மாதிரி மெழுகு பிம்பத்தைப் போன்றே அமைந்துள்ள விக்கிரகத்தை எடுக்க வேண்டும்.










உலகெங்கும் இணையற்ற கலை எனப் பெயர் பெற்றுள்ள தென்னாட்டுப் படிமங்களைச் செய்யும் அற்புதக் கலை இதுவே.

படிமஅமைப்புக்குரிய 'தாள' அளவை பற்றிச் சில்ப சாஸ்திரத்தில் நிரம்பச் சொல்லப்பட்டிருக்கிறது. தாளம் என்பது ஒரு 'சாணை'ப் போன்று ஒரு குறிப்பிட்ட அளவு. விக்கிரகங்களை உருவாக்குவதற்கு முன்பு அவற்றின் அளவுகளை மிகத் துல்லியமாக நிர்ணயித்துக் கொண்டு மாதிரி மெழுகு வடிவைச் செய்வதாலேயே அசல் பிரதிமை பூரண அழகோடு உருவாகும். விக்கிரக அமைப்பைத் தெளிவாக்கிக் கொள்ள ஐந்து 'ஸ்தானம்' அல்லது நிலைகள் உள்ளன. ரிஜு, அர்த்தரிஜு, சாஜி, அர்த்தாக்ஷி, பிஹித்திகா என்னும் மேற்குறிப்பிட்ட ஸ்தானங்களின் மூலம் விக்கிரகத்தின் முற்பக்க அமைப்பையும், பக்கவாட்டுத் தோற்றத்தையும், மூன்றில் ஒரு பாக அமைப்பையும் கணித்து நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். விக்கிரகத்தின் மத்தியக் கோடு (பிரஹ்ம சூத்ரம்) ஆகிய கோடுகளை ஐவகைக் கோணங்களிலிருந்தும் பார்த்தறிய வேண்டும். மேலும், மஸ்தக சூத்ரம், நாஸாக்ர சூத்ரம், அதரோஷ்டத சூத்ரம், ஹிகா சூத்ரம், வக்ஷஸ்தல சூத்ரம், நாபி சூத்ரம், காஞ்சிபாத சூத்ரம், ஊரு சூத்ரம், ஞானவத சூத்ரம், குல்பாந்த சூத்ரம், பஹுமி சூத்ரம் போன்ற படிமத்தின் அங்கங்களை நிர்ணயிக்கும் கோடுகளின் மாறுபாடு இல்லாத சரியான நிலை படிமம் வெற்றிகரமாக உருவாக்கப்பட மிக மிக முக்கியமான முறைகளாகும். படிமக்கலையில் இங்ஙனம் வடிவக் கணிதம் மிக முக்கியமானதாகும்.

சிற்பத்திலும், படிமத்திலும் பல்வேறு வடிவங்களுக்கும் தனித்தனியான தோரணை, பாவனை,



முத்திரைகள் உண்டு. கரங்களின் அமைப்பு, விழிகளின் பார்வை, உடலின் அசைவு, கால்களின் நிலை ஆகியவைகள் நடனக் கோலங்களின் பல பாவங்களைக் குறிக்கும். படிமக் கலையின் இதே நளினம் சிற்பத்திலும், ஓவியங்களிலும்கூடக் காணப்படுகிறது. விஷ்ணுதர்மோத்திரர் "நிருத்தம் சித்ரம் பரம் சித்ரம் மடம்" என்று அழகாகச் சொல்வது போல் சிற்பமும், ஓவியமும் நடனக் கலையின் மற்றோர் விதமே. வார்த்தைகளை உபயோகிக்காமலேயே நயனத்தின் கருத்தை பாவங்களிலும், தோரணைகளிலும், முத்திரைகளிலுமே விளக்கிவிடுவது அக்கலையின் சிறப்பு. நாட்டிய ஸ்தானங்களிலிருந்து பல முத்திரைகளையும், தோரணைகளையும் படிமக் கலை ஏற்றுக் கொண்டுள்ளது. 'ஸ்தானம்' எனப்படும் முக பாவ தோரணைகளையும், 'கரணம்' எனப்படும் நடன லயத்தையும், நடனமாடும்போது உடலின் நளின தோற்றத்தைக் குறிக்கும் 'அங்கஹாரங்'களையும் மட்டுமின்றி, ஹஸ்த லட்சணம் எனப்படும் கரங்களின் இயற்கையும் எழிலுமான தோற்றத்தையும் சிற்ப, படிமங்களில் காணலாம்.

படிமங்களில் கரங்களின் அமைப்பு முக்கியமானவை. கரங்கள் குறிப்பிட்ட செயலை விளக்கும்போது அதற்குரிய முத்திரை எனப்படுகிறது. உதாரணமாக, உபதேசிக்கும் தோரணையில் உள்ள தட்சிணாமூர்த்தியின் கரத்தின் தோரணை வியாக்கியான முத்திரை அல்லது சின் முத்திரை எனப்படும். படிமங்களின் 'ஹஸ்தங்'களின் தோரணைகளுள் பெரும்பான்மையானவையாகக் காணப்படுவது அபயமுத்திரை—புகலிடம் அளிக்கும் தோரணையே. எனினும் வேறு பலப்பல ஹஸ்த லட்சணங்களையும் கலை ஆர்வமுள்ளோர் அலசி ஆராய்ந்தறிந்து ஆனந்திக்கலாம்.

நிற்கும் கோலத்தில் உள்ள படிமங்களில் சற்றும் வளைவின்றி வெகு நேராக நிமிர்ந்து நிற்கும் வடிவம் சமபாதா எனவும், ஓர் உணர்ச்சியில் சற்று வளைந்து காணப்படுவது அபங்கம் எனவும், மேலும் வளைந்த தோற்றம் கொண்டது திரிபங்கம் எனவும் கூறப்படும். மற்றும் பல தோரணைகளும் உண்டு.

அமர்ந்த திருக்கோலத்தில் உள்ள படிமங்களுக்குப் பல்வேறு ஆசனங்கள் உரியவை. அவை சுகாசனம், அர்த்தயோகாசனம், பத்மாசனம், வீராசனம், உத்குடிகாசனம் எனப் பலவகைப்படும். யோகாசனம் என்னும் தவத்துக்குரிய தோரணை யோக தட்சிணாமூர்த்தி, யோக நரசிம்மர் படிமங்களில் காணலாம்.

மும்மூர்த்திகளான பிரம்மா, சிவன், விஷ்ணு என்னும் மூர்த்தங்களைக் கலைஞர்கள் பக்தியுடன் படிமங்களாக வார்த்துப் போற்றியிருக்கின்றனர். பிரம்மா வடிவங்கள் குப்தர் கல்களில் மட்டுமே காணப்படுகின்றன. சிவனுக்குச் சிறப்புப் படிமங்களில் பல வடிவங்கள் உண்டு. அவற்றுள் உமாமகேசுவரர், சோமாஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, நடராஜர், பைரவர், கல்யாணசுந்தரர் ஆகிய இவ்வியத் திருமேனிகள் பிரபலமானவை. விஷ்ணு படிமங்கள் மூவகைப்படும். சயனம் (பள்ளி கொண்ட பெருமான்) ஸ்தானம் (நின்ற திருக்கோலம்), ஆஸனம் (அமர்ந்தகோலம்) என்ற மூவகைகளில் விஷ்ணு சித்திரிக்கப்பட்டிருக்கிறார். விஷ்ணுவின் தசாவதாரங்களில் பலவும் படிமங்களில் வழங்கப்பட்டுள்ளன.

தேவி படிமங்களுள் பார்வதியின் படிமங்கள் நின்றவாறும், அமர்ந்தவாறும், இரு கரங்களுடனும், சில நாற் கரங்களுடனும், காளி, மகா காளி, சாமுண்டி, சண்டி, துர்க்கா என்றவாறு பல வடிவங்களிலும் சித்திரிக்கப்பட்டுள்ளன.

இளமை எழில் கொழிக்கும் படிமங்களில் விநாயகர் படிமங்கள் குறிப்பிடத்தக்கவை. வள்ளி, தெய்வயானையுடன் வேலேந்திய சுப்ரமண்யர் படிமங்கள் பல உள்ளன. ஹரி ஹர புத்ரர் சாஸ்தாவுக்கும், நவக்கிரகங்களுக்கும், அஷ்டதிக் பாலகர்களுக்கும் தென்னாட்டுப் படிமங்களில் உரியஇடமுண்டு.

சமயக் குரவர்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் படிமங்களில் வடிக்கப்பட்டுள்ளனர். ஆலயத்தில் இறைவனுக்குரிய உற்சவ கால வாகனங்களும் படிமத்தில் வார்க்கப்பட்டிருக்கின்றன. இறைவனது அணிமணிகளைப் பாதுகாக்க அழகிய நிடமான் பெட்டிகளும் படிமத்தில் செய்யப்பட்டிருக்கின்றன.

இயற்கையான அமைப்பும், ஜீவத் துடிப்பும் எழிற் கவர்ச்சியும் மிக்க தென்னாட்டுப் படிமங்கள் விதம் விதமான ஆடை ஆபரணங்களையும் பூண்டு இணையற்ற லாவண்யக் கோலங்களாகத் திகழ்கின்றன. தென்னாட்டுப் படிமங்களின் காலத்தைப் பற்றி ஆராய்கையில் அவை அணிந்துள்ள ஆபரணங்கள், ஆடை அலங்காரங்களின் மாறுபட்ட நாகரிகம் பெரிதும் உதவுகிறது. உதாரணமாக, சோழர் ஜடா மகுடங்களில் சந்திரப் பிரபை பிரதானமாகத் திகழும். சிவபெருமானின் ஜடாமகுடங்களில் சந்திரப் பிரபையைப் போன்றே கங்கையையும் சித்திரிப்பது பிற்கால நாகரிகமாக ஆயிற்று.

கிரீட மகுடம் என்னும் அழகிய முடியணி விஷ்ணுவுக்கு உரியது. கிரீட மகுடம் உள்ள வடிவங்களைப் பல்லவர் சிற்பங்களில் காணலாம். சோழர்களும் அவ்வணியைச் சற்று மாற்றித் தழுவினர்.

கரந்த மகுடம் என்னும் அணி தேவிக்கு உரியது. பல்லவர் சிற்பங்களில் கரந்த மகுடத்தை விசேஷமாகக் காணலாம். இப்படியாகக் கேசபந்தம், தம்மிலா, சிரஸ் சக்கரம் என்று தலையணிகள் பலப்பல விதங்களில் பல்வேறு மூர்த்தங்களுக்கும் ஏற்ப அமைந்துள்ளன.

காதணிகளைப் பொறுத்தவரையில் பல்லவர் முற்காலச் சோழர் காலத்துப் படிமங்களில் அதிகமான கவர்ச்சி மிக்க அணிகள் காணப்படவில்லை. அணிகள் இல்லாத காது அமைப்பே அப்போதைய நாகரிகமாக இருந்திருத்தல் வேண்டும். பிற்காலத்தில் மகர (மீன்) வடிவில் அமைந்த காதணிகள் அறிமுகமாயின. ஒரு காதில் மலர் போன்ற அணியையும், மற்றொரு காதில் மகராபரணத்தையும் சூடிய படிமங்கள் பிற்காலச் சோழர் — விஜயநகரப் படிமங்களின் தனிச் சிறப்பாகும்.

காதில் அணியும் குண்டலங்களிலேயே சிம்ம குண்டலம், பத்ம குண்டலம் என்று நுணுக்கமான வேறுபாடுகளுடன் கூடிய பல்வேறு ரகங்களை ஆய்ந்தறிந்து அதன்மூலம் அந்தப் படிமம் உருவாக்கப்பட்ட காலத்தை நிர்ணயிக்க முயலுவர் அறிஞர்கள்.

யக்ஞோபவீதம் என்னும் மிக முக்கியமான மார்பு அணி ஹிந்துப் படிமங்களின் சிறப்பு மிக்க அணியாகும். வஸ்த்ர யக்ஞோபவீதம், கிருஷ்ணஜினம் ஆகிய அணிகள் பிரும்மா, தட்சிணாமூர்த்தி ஆகியோர்க்குரிய தனி அணி. பல்லவர் யக்ஞோபவீதங்கள் தடிமனாக "ரிப்பன்" போன்று வளைந்து வலது தோளில் விழும் தோரணையில் இருக்கும். கபாலயக்ஞோபவீதம் என்னும் அணி சோழர் படைத்த காளி, சாமுண்டி, பிரும்மா, பைரவர் படிமங்களில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்கந்தமாலா என்பது ஒரு வகைத் தோள் அணி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட படிமங்களிலேயே இவ்வணி பிரபலமாயிருக்கிறது. விஜயநகரப் படிமங்களில் ஸ்கந்தமாலா ஒரு சிறந்த அம்சம்.

காந்தி என்னும் ஆபரணம் தற்காலத்தின் 'நெக்லஸை'ப் போன்ற இறுகிய கழுத்தணி. இன்னும் கரத்திற்குரிய ஆபரணங்களில் அனந்தா, மகரகேயூரம் போன்றவற்றைப்பற்றியும், உதரபந்தம் என்னும் இடையணி குறித்தும், இடுப்புக்குக் கீழே அணியப்படும் பலவித அணிகள் குறித்தும், பிரியங்கு பாதா என்ற சிவனுக்குரிய பாத அணி பற்றியும் படிமக் கலைஞர்கள் நன்கு அறிந்து வைத்திருக்க வேண்டும்.

படிமங்களுக்கான ஆடை வகைகளுள் தேவியின் ஆடையமைப்பில் ஒரு தலைப்பு பாதம்வரையில் தாழ்ந்தும், மற்றொரு தலைப்பு தோளில் சாய்ந்து பின்புறம் விழும் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகைப் படிமங்கள் பத்தாம் நூற்றாண்டளவில் வடிக்கப்பட்டன. தேவியின் ஆடை கொசுவம் புடவை எனப்படுகிறது. தெய்வீகப் பெண்டிர்களின் ஆடையமைப்பு தென்னிந்திய ஹிந்து குடும்பத்து மணமான பெண்களின் வழக்கமான ஆடையைப் போன்றே அமைக்கப்பட்டுள்ளது. சோழர் படிமங்களில் ஆடையமைப்பு மிக நளினமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. தீபலக்ஷ்மி படிமங்களிலும், திருப்பதி வேங்கடாசலபதி ஆலயத்திலுள்ள கிருஷ்ண தேவராயருடன் இருக்கும் இரு பட்டமகிஷிகள் படிமத்திலும் ஆடை அமைப்பு மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டிருக்கின்றது. குலோத்துங்கன், ராஜ ராஜ சோழன் ஆகியோர் படிமங்களில் ஆடையமைப்பு ராஜ பரம்பரை நாகரிகத்தில் உள்ளன. சண்டிகேசுவரர், ஞானசம்பந்தர் போன்ற அடியார் படிமங்களில் ஆடையமைப்பு எளிமையானதாகவே உள்ளன.

குசபந்தா என்னும் மார்பக ஆடை பெண் வடிவங்களுக்கு மட்டும் உரித்தானது. பல்லவர் சிற்பங்களில் குசபந்தத்தைக் காண முடியாது. லக்ஷ்மி, ஸ்ரீதேவி போன்ற சோழர் படிமங்களில் குசபந்தம் காணப்படுகிறது. பார்வதி படிமங்களில் குசபந்தம்



ஒன்றுகூட இல்லை; ஆனால் தேவியின் அம்சமான மகிஷாசுரமர்த்தினி படிமமொன்றில் மார்பக ஆடை நாகத்தால் அணிவிக்கப்பட்டு நாக குசபந்தா எனப்படுகிறது.


தென்னாட்டுத் தெய்வீகப் படிமங்கள் ஒவ்வொன்றுக்கும் தனிச் சிறப்புமிக்க ஆயுதங்கள் உள்ளன. அவற்றின் பெயர்களெல்லாம் அத்துறையில் நிபுணர்களுக்கு மட்டுமேயன்றி ஏனையோருக்கு நினைவிலிருத்திக் கொள்ள முடியாது. எனினும் சிவன், விஷ்ணு, மகிஷாசுரமர்த்தினி, ராமர், சுப்பிரமணியர் ஆகிய படிமங்கள் அவ்வவற்றுக்குரிய பிரத்தியேகமான ஆயுதங்களை உடையவை என்பது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் அமராவதி மற்றும் நாகை புத்தப் படிமங்களில் கூட முடியில் தீச்சுடர் போன்ற உஷ்நிஷா என்னும் ஆயுத அணி உள்ளதென்பதை அறிந்தால் பலருக்கும் வியப்பாயிருக்கும்.

தொன்மையான தென்னாட்டுப் படிமங்கள் இன்று சர்வதேசக் கலை அரங்கில் தனிச் சிறப்பும் பெரு மதிப்பும் பெற்று மிளிர்கின்றன. எனினும் இன்று இக் கலையைத் தொழிலாகக் கொண்டுள்ளவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்தத் தெய்வீகக் கலை நலிந்து விடாதிருக்கக் குடந்தைக்கருகில் உள்ள சுவாமிமலையில் ஒரு கலாசாலை ஏற்படுத்தப்பட்டு, நல்ல பலன்கள் எதிர்பார்க்கப்படுகிறது. காஞ்சி காமகோடிப் பெரியவர்கள் வருடந்தோறும் சில்ப ஆகம ஸதஸ்கள் நடத்தி இக் கலைக்குப் புத்துயிரூட்டி வருவதோடு, இவ்வாண்டு சிற்பப் பயிற்சிக் கல்லூரியும் தொடங்கியுள்ளதும் இக்கலைக்கு நல்ல எதிர்காலம் உதயமாவதைத்தெரிவிக்கின்றன.


துப்பறிவதில் நிபுணரான சந்துரு ரேணுகாவை யும் டாக்டர் சுதர்ஷையும் கேள்விகளால் துளைத்து மாலதியைப் பற்றிப் பல விஷயங்களை அறிந்து கொள்ளுகிறார்..
உங்கள் சகோதரி யின் புகைப் படம் ஏதாவது இருக் கிறதா?
இருக்கிறதே. சினிமா உலக வாசி யான அவளது புகைப் படத்துக்கும் பஞ்சமா, என்ன?
11
அவள் எங்கே?
கதை: கௌசிகன்:
சித்திரம்: ரமணி:
சகோதரி என்பதற்கு ஒற்றுமை இருக்கிறது. கௌரவமான அமைதி யோடு கூடிய அழகி ரேணுகா. அவளோ....ம்...
எங்கள் சங்கடமான நிலை உங்களுக்குப் புரிந்திருக்கு மென நம்புகிறேன்.
புரிந்தது. சங்கடம் இருப்பதால் தானே சந் துருவின் உதவியை நாடி வந்திருக்கிறீர்கள்.
என் தங்கை காணாமல் போய் விட்டாள் என்று நான் போலீசில் ரிப்போர்ட் செய்ய முடியாது. அவள் என் வீட்டிற்குக் கொண்டு வரப் பட்டு இங்கு இருந்தாள் என் பதையோ, அவளுக்கு டாக்டர் சுரேந் திரநாத் சிகிச்சை அளித்தார் என்பதையோ கூட இப்போது எங்களால் நிரூபிக்க முடியாது. இப்படியொரு நிலையில் உங் -கள் உதவியையும் யோசனையையும் நாடுவதே சிறந்தது என்று நான் இங்கு வந்திருக்கி றேன்..
எங்களுக்கு எதுவும் தோன்றவில்லை மிஸ்டர் சந்துரு.
ஆனால் போலீஸார் கைப்பற்றி யது மாலதியின் உடல் இல்லை. உயிரற்ற, தலையற்ற அந்தப் பெண் இறந்தது கொலை செய் யப் பட்டும் அல்ல. ஆனால் நானே அது என் தங்கையின் உடல் என்று அவர்களிடம் அடையாளங்களை அடித்துக் கூறியுள் ளேன்.


நீங்கள் சவக்கிடங்கில் பார்த்த அந்த உடல் எப்படி இருந்தது?
மாலதியைவிடக் கொஞ்சம் குட்டை, கொஞ்சம் இளமையும் கூட. அவள் அத்தனை சிவப்பில்லை. ஆனால் இடது தோள்பட்டையில் மாலதிக்கு உள்ளது போலவே ஒரு பெரிய தழும்பு.
இந்த அங்க அடையாளங்களினால் எதுவிதப் பயனுமில்லையே. உண்மையில் மாலதியைக் கொன்று வந்தாலல்லவா உடல் மாறாட்டம் என்பதை நிரூபிக்க முடியும்?
மாலதியை உங்கள் நண்பர் எப்படியும் கண்டுபிடித்துக் கொடுப்பார் என்ற நம்பிக்கையோடுதான் நாங்கள் வந்திருக்கிறோம் மிஸ்டர் சேகர்.
அந்த உடலை இன்னும் போலீசார் உங்களிடம் ஒப்படைக்கவில்லையல்லவா?
இல்லை. ஊர் பெயர் தெரியாத ஏதோ ஒரு சடலத்துக்கு ஈமச் சடங்குகள் செய்யும் அந்த நாடகம் வேறு பாக்கி இருக்கிறது.
அந்த நாடகம் நடக்காதிருக்கும் வரை டாக்டரின் மகளுடைய உயிருக்கு அபாயமில்லை. குமார் குற்றவாளியல்ல என்று நிரூபிப்பதற்கு அந்த உடல் அவசியம் தேவை. ஆகவே கடைசிச் சடங்குகள் நடைபெறுவதை எத்தனை தாமதப் படுத்துகிறீர்களோ அத்தனையும் நமக்கு நல்லது...
போலீசாரும் கூட அந்த உடலை அத்தனை சுலபத்தில் நம்மிடம் ஒப்படைத்து விடமாட்டார்கள். பிரேதப் பரிசோதனையில் அவர்களுக்கு என் அசட்டு மகளின் அவசரத்திடம் சில உண்மைகளை விளக்கியிருக்கும். அதனால் தான் அவர்கள் முறைப்படி சோதனைக்குப் பிறகு உடலை ரோஜாவிடம் ஒப்படைக்காமல் மௌனம் சாதிக்கிறார்கள்.
நாங்கள் தலையைத் தேடிக் கொண்டிருக்கிறோம். அது கிடைத்த பிறகுதான் ஒரு முடிவுக்கு வர முடியும் என்கிறார்கள்.
அவர்கள் தலையை மட்டும் தேடிக் கொண்டிருக்கவில்லை. முழுப் பெண்ணையுமே தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.
குவாரா ஓடை அல்லது ஓம் நதியில் குமார் அந்தத் தலையை வீசியிருக்க வேண்டும் என்றும் அவர்கள் சந்தேகம் கொள்ளலாம். நீர்மூழ்கித் தொழிலில் வல்லவர்களிடம் அந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம். உடல்தான் நீரில் மிதக்கும். தலை மட்டுமா மூழ்கி விடுமாம். உண்மைதானா?
உண்மைதான்.
தொடரும்.

அன்னையைப் போன்ற அழகொளி படைத்தவள்.



ஸங்கீதம்

அத்தியாயம் இருபத்தைந்து

மனிதனின் மதிப்பு

வாய்க்குச் சுவையான உணவுகளை வயிற்றுக்குத் திருப்தியாக உண்டுவிட்டு வராந்தாவுக்கு வந்த சபேசனை, ''கம் ஆன், ஜானி! மிஸியம்மா உத்தரவுப்படி அதோ அந்த ரூமை உனக்குன்னு க்ளீன் பண்ணி வைச்சிருக்கிறேன். போய்ப் படுத்துக்கோ. நைட்லே எதனாச்சும் வேணுமின்னு என்னை எழுப்பு. இங்கேதான் படுத்துக் கிட்டிருப்பேன்'' என்று பட்லர் சொன்னதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தவனாய் அந்த அறைக்குள் சென்றான்.

வராந்தாவையொட்டி ஹாலுக்கு இடது புறமாக அமைந்திருந்த ஒரு சிறிய அறை அது. இதற்கு முன் அவ்வறை எதற்காகப் பயன்பட்டிருக்கும் என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை. ஏதேனும் தட்டு முட்டுச் சாமான்கள் போட்டு வெறுமனே சாத்தி வைத்திருக்கலாம். ஆனால் இப்போது துப்புரவாகக் காணப்பட்டது. அறையின் நடுவே ஓர் அகலமான நீள பெஞ்சு. அதன் மேல் ஒரு ஜமுக்காளமும் தலையணையும் வைக்கப்பட்டிருந்தன. பக்கத்தில் அழகிய மேசை விளக்கொன்றும் இருந்தது.

'நான் படுத்துத் தூங்குவதற்கா இவ்வளவு வசதியான அறை?' என்ற வியப்புடன் சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்த அவனுக்குப் பிரமிப்பே ஏற்பட்டுவிட்டது. ஏதோ ஒரு பெரிய அரண்மனை வாசம் கிடைத்து விட்டாற் போன்ற மகிழ்ச்சிச் சிலிர்ப்படைந்து நின்ற அவன் மனத்தில், ஜலண்டு மைதானத்து மன்றோ சிலை, மாதவன் நாயர் டீக்கடையருகிலிருக்கும் அரச மரத்தடி, கன்னியம்மாளின் கலகலத்த வீடு, அதன் புறக்கடை வைக்கோற்போர், தம்பையா வீட்டின் வெடிப்புற்ற திண்ணை ஆகியவையெல்லாம் ஒருகணம் தோன்றி மறைந்தன.

'இனி ரெண்டு மூணு வாரங்களுக்கு நீ கவலைப்பட வேண்டியதில்லை, தம்பி! மிஸிகிட்டே சொல்லி ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். இங்கே வந்து நிம்மதியா படுத்

ஸ்ஜக சிற்பியன்



துத் தூங்கிப்பிட்டுப் போகலாம். உனக்கு சந்தோசம்தானே?' சற்று முன் சபேசன் சாப்பிட்டுவிட்டு வரும்போது நச்சி தன் வழக்கமான கோணல் சிரிப்புடன் இரகசியமாக இப்படிச் சொன்ன சொற்கள் மறுபடியும் அவனுடைய செவிகளில் ஒலிப்பதுபோல் இருந்தன.

'இந்தப் பரங்கிக்காரியின் வீட்டுக்கு அவன் என்னை அழைத்து வந்ததன் காரணம் இப்போது அல்லவா தெரிகிறது! எனக்குப் படுக்க இடம் வாங்கிக் கொடுப்பதற்காக அவன் அவளிடம் என்னென்ன அண்டப்புளுகு, ஆகாசப் புளுகெல்லாம் அளந்து கொட்டினுன்! அவனுக்குத்தான் என்மீது எவ்வளவு அன்பு! எத்தனை கரிசனம்!'

இன்று காலை கன்னியம்மாள் செய்த ரகளையினுல் மனம் மருண்டு போய்க் கிடந்த சபேசன், இனி நச்சி வந்து தன்னைப் பார்க்கவோ, தனக்கு உதவி செய்யவோ மாட்டான் என்றே உறுதியாக எண்ணியிருந்தான். மேலும், தன்மீது ஏற்பட்ட வெறுப்பையும் கோபத்தையும் காட்டவே அவன் தனது தாயை அடித்து நொறுக்கிவிட்டுப் போயிருக்கிறுன் என்றும் நினைத்திருந்தான். ஆனுல் நச்சியோ அவனை அந்த ஹோட்டலண்டைச் சந்தித்து இங்கே அழைத்து வந்ததிலிருந்து இந்நேரம் வரையில் அவ்விஷயமாக அவனிடம் எதுவுமே கேட்கவில்லை; சொல்லவும் இல்லை. இது தவிர, தன் தாயின் கெடுபிடிக்குப் பிறகு அவன் இவனைத் தம்பையா வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய் அங்கு படுத்துக் கொள்ள அநுமதி பெற்றுக் கொடுத்திருந்தும், அவ்விடத்திலே இவன் படுக்காமல் மீண்டும் தன் வீட்டு வைக்கோற் போரண்டை வந்து படுத்ததற்குரிய காரணத்தையும் இவனிடம் அவன் கேட்கவில்லை. ஒருகால், தம்பையாவிடமோ வேதாவிடமோ அது பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம். அல்லது அவனே அவ்விவரத்தை ஊகித்துக் கொண்டுமிருக்கலாம். ஆனுல் அதையும் அவன் காட்டிக் கொள்ளவேயில்லை. ஒன்றும் நடக்காதமாதிரி, எப்போதும் போலவே இருக்கிறுன்.

'என்ன விந்தையான மனிதன் இவன்! இத்தனை நாட்கள் இவனுடன் பழகியும் என்னுல் இவனை இன்னமும் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லையே !'

சன்னல் வழியாகக் கூடத்து அறைப் பக்கம் தன் பார்வையைச் செலுத்தினுன் சபேசன். அங்கே ஒரு சோபாவில் தனியாகச் சாய்ந்து சிகரெட் குடித்தவாறு யோசனையில் ஆழ்ந்திருந்தான் நச்சி. தெருவில் ரோஸ்லின் யாருடனே ஆங்கிலத்தில் பேசிச் சிரிக்கும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

பெஞ்சுமேல் ஜமுக்காளத்தை விரித்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்த சபேசன், "இன்னு மிஸி ! யாரு அந்தத் துரை? இவ்வளவு நேரம் அவன்கூட உனக்கு இன்னு பேச்சு?" என்ற நச்சியின் கடுகடுப்பான குரல் கேட்டுச் சட்டென்று நிமிர்ந்தான்.

"ரொம்ப நேரம் உன்னை வெய்ட் பண்ண



கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் டேண்டல் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவீதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய்துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினால் பற்களைத்துலக்கும் முறையால், இது வரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு.

கால்கேட்டின் கீடித்திருக்கும், நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனாலேயேப்பல் துலக்க விரும்புகிறார்கள்.

பரிசுத்தத்திற்கும், வாயின் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினால் பல்துலக்குங்கள்.

நீங்கள் பற்பொடியை விரும்பினால், இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒருடப்பி பலமாதங்களுக்கு வரும்.



... உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டேண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

DCG. 36.TAM.

வைச்சுட்டேனு டார்லிங்? எக்ஸ்கியூஸ் மீ!'' என்று கொஞ்சலாகக் கூறியவாறு ரோஸி வந்து நச்சியின் அருகில் அமர்வது தெரிந்தது.

''கேட்டதுக்குப் பதில் சொல்லு! யாரு அந்தத் துரை?'' என்று மீண்டும் சினம் பொங்க வினவினான் நச்சி.

''என்ன டீயர்! எதுக்கு இப்படி ஸ்கோல்ட் பண்ணனிக்கிறே? அவர் பக்கத்து வீட்டு அங்கிள். பெரம்பூர்லே வொர்க் பண்றார். நீ அவரைப் பார்த்ததில்லேயா?''

''இன்னா சொன்னே? அவன் உனக்கு மாமனா?''

''வோன் அங்கிள் இல்லே; சும்மா அப்படிக் கூப்பிடறது.''

''ஓகோ! ஊர்லே இருக்கிற துரைப் பசங்களெல்லாம் உனக்கு மாமன்மாரு தானா?''

''மிஸ்டர் நாச், நீ ராங் வேயிலே போறே! அந்தத் துரை ரொம்ப நல்லா ஹண்டிங் பண்ணுவாரு! அவர்கிட்டே டு ஆர் த்ரீ கன்ஸ் இருக்குது!''

''வேட்டை ஆடுவானா? இன்னா வேட்டை? கோழி வேட்டையா?''

''ஓ..... என்ன மேன்! 'ஐரனி'யா பேசறே போலிருக்குது? எனக்கு இதெல்லாம் புடிக்காது.''

நச்சி அவள் முகத்தை 'உர்'ரென்று பார்த்துக்கொண்டு அடித்தொண்டையில் கேட்டான்: ''ஏய், ரோஸி! நிசத்தைச் சொல்லு; அந்தத் துரை உன்னை எங்கே கூப்பிட்டான்? டான்ஸுக்கா, பிக்சருக்கா?''

''நோ, நோ, மிஸ்டர் நாச்! நான் சொல்றேன் கேட்டுக்கோ. அந்த அங்கிள் ஒரு கொயர் மாஸ்டர். 'ஜாஸ்'லே ஸ்பெஷலிஸ்ட். நியூவா வந்திருக்கிற ஒரு ஸாங்கை ஹம்மிங் பண்ணிக் காட்டினாரு. ரொம்ப நல்லா இருந்துச்சு. அதுக்கு நான் சும்மா 'ஹிப்'பாலே ஒரு மூவிங் கொடுத்துப் பார்த்தேன். தட்ஸ் ஆல்.''

''அய்ங்..... மாட்டிக்கிட்டியா? அவன் பாட்டுப் பாடினான்; நீ தெரு மேலே நின்னு டான்ஸ் ஆடினே, அப்படித்தானே?''

''லய், லய்! மிஸ்டர் நாச்! யூ ஆர் ஏ பர்வர்டட் ஜீனியஸ்! நீ எல்லாத்துக்கும் கெட்டிக்காரத்தனமா தப்புக் கண்டு பிடிக்கிறே! உனக்கு மூளை வக்கரிச்சுப் போச்சு! எனக்கு மன்சு ரொம்பக் கஷ்டப்படுது டீயர்!''

''அந்தக் கமாலெல்லாம் வேணாம். அவனுக்கும் உனக்கும் கனெக்ஷன் இல்லேன்னா, அவன் ஏன் உன்கிட்டே வந்து பாடிக் காட்டணும்? நீ அதுக்கு இடுப்பை அசைச்சு ஆடிக் காட்டணும்? இந்த மாதிரி குல்மால்தனமெல்லாம் என்கிட்டே வைச்சுக்காதேன்னு எத்தினி தபா சொல்லியிருக்கிறேன்? இனிமே இப்படிச் செய்வியா? செய்வியா?''

கும் கும்மென்று ரோஸியின் முதுகில் இரண்டு குத்துக்கள் விழுந்தன. கழுத்துப் பிடரியிலும் ஓர் அறை பளீரிட்டது.

''மம்மி, மம்மி! இந்த ரோக் – ஃபெல்லோ என்னை பீட் பண்றான்! ஸ்லாப் பண்றான்!'' என்று கீச்சுக் குரலில் அலறிக்கொண்டே எழுந்து ஓடிய ரோஸி சற்றுத் தொலைவில் விறைப்பாக நின்றுகொண்டு அவனை வெறித்துப் பார்த்து, ''யூ ஷேம்லஸ் கிரீச்சர்! பிளாக் மங்கி!'' என்று பற்களைக் கடித்துக்கொண்டு அழுத்தம் திருத்தமாகக் கூவினாள்.

''பேசினே, கூனை நிமித்திப்பிடுவேன்'' என்றவாறு எழுந்து மீண்டும் உட்கார்ந்தான் நச்சி.

அப்போதுதான் பக்கத்து அறையிலிருந்து வெகு சாவதானமாக வெளியே வந்த கிழவி மிஸி அவ்விருவரையும் மாறி மாறிப் பார்த்து விட்டு, ''ஏ, பாய்! தெருமேலே போய் ஒரு மணிலா சுருட்டு வாங்கியா மேன்!'' என்று உத்தரவிட்டவாறு அமைதியாகத் தன் அறைக்குத் திரும்பினாள்.

இவ்வளவையும் சன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருந்த சபேசனுக்கு ஒரே குலை நடுக்கமாகி விட்டது. அவன் கனவிலும் எதிர்பார்க்காத நிகழ்ச்சியல்லவா இது? அவனால் அங்கு இருக்கவே முடியவில்லை. எழுந்து ஓடிவிடலாமா என்று பரபரத்தான். அப்படிப் போகவும் அவனுக்குப் பயமாயிருந்தது. அறையின் ஒரு மூலையில் போய் ஒடுங்கி நின்றுகொண்டான்.

அரை மணி நேரம் கரைந்திருக்கும். திடீரென்று செவிக்குச் சுவையான ஐரோப்பிய வாத்திய இசை இழைந்து ஒலித்ததைக் கேட்டு வியப்புற்றவனாய், சன்னல் ஓரமாக வந்து மெல்ல உள்ளே எட்டிப் பார்த்தான். அவனுடைய கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. ஆமாம்; ஹாலின் ஒரு மூலையில் கிராமபோனிலிருந்து எழுந்த இனிய இசைக்கேற்ப நச்சியும் ரோஸியும் குஷியாக டான்ஸ் ஆடிக்கொண்டிருந்தார்கள்!

ஆச்சரியத்தால் பிரமித்துப் போன சபேசன் வாய்க்குள்ளாகவே சிரித்துக் கொண்டு சன்னலை ஒருக்களித்துச்

சாத்தி விட்டுப் படுக்கையில் படுத்தான். அழகிய பூ வேலைப்பாடுகளுடன் விளங்கிய தலையணையில் தலையைச் சாய்த்ததுமே அவன் மனத் திரையில் வேதாவின் எழில் வதனம் மின்னலைப் போல் ஒரு கணம் தோன்றி மறைந்தது. அதைத் தொடர்ந்து அன்றொரு நாள் இரவு அவள் அவனுக்குத் தலையணை எடுத்து வந்து கொடுத்து விட்டுப் போன நினைவும் எழுந்தது.

'என்னைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?'

அந்தத் துக்ககரமான கடைசி இரவன்று வைக்கோற் போரின்மேல் அவள் ஒயிலாகச் சாய்ந்தவாறு அவனிடம் கேட்ட இந்தப் புதிரான கேள்வியையும் இப்போது அவன் எண்ணிப் பார்த்தான். அவனையறியாமலே அவனது கண்கள் கலங்கின. தலையணையை எடுத்துக் கீழே போட்டு விட்டு வெறும் பலகையில் தலை வைத்துப் படுத்துக்கொண்டான்.

உள்ளே கிராமபோன் இசை ஓய்ந்து, நச்சியும் ரோஸியும் பேசும் குரல் கேட்டது. சபேசன் அந்தப் பேச்சைச் செவிமடுத்தான்.

''ஒரு விஷயம் சொல்ல மறந்துவிட்டேனே, கண்ணு! எங்க புரொடியூஸனுக்கு அர்ஜண்டா ரெண்டு பாட்டுப் போட்டுக் கொடுக்கணும்னு முந்தி சொன்னேன் இல்லையா? அதுக்கு மோர் மார்க்கெட்டிலே கொஞ்சம் மெட்டீரியல்ஸ் வாங்க வேண்டியிருக்குது.......''

''அது என்ன மேன், மெட்டீரியல்ஸ்?''

''பழைய பாட்டுப் பொஸ்தகங்கள் வாங்கணும், டீயர்!''

''நியூவா ஸாங் கம்போஸ் பண்றதுக்கு ஓல்டு புக்ஸ் எதுக்கு டார்லிங்?''

''அடங்க, இஸ்கி! இது தெரியாதா உனக்கு? சினிமாவுக்குப் பாட்டு கவனம் பண்றதுன்னா இன்னான்னு நெனைச்சுக்கிட்டு இருக்கிறே? பழைய பாட்டுக்களைத் தலைக்கு வாலா மாத்திப் போட்டு, முன்னாலும் பின்னாலும் ரெண்டு 'ஹொய், ஹொய்' ஹம்மிங் சேர்த்துட வேண்டியது; அவ்வளவு தான். வேலை மெனக்கெட்டுப் புதுச் சாவா எழுதிக்கிட்டு இருப்பாங்க? அப்படி எழுதறவனுங்களுக்கெல்லாம் அங்கே இடம் இல்லே, மிஸி! நான் தான் முந்தியே சொல்லியிருக்கிறேனே? எங்க டமில் சினிமா ஃபீல்டிலே எல்லாத்துக்கும் அங்கே இங்கே பீராயற வேலைதான்!''

கைகொட்டி நகைத்த ரோஸி, ''ஆமாம்; இப்ப அதுக்கு நீ இன்னா சொல்றே, நச்?'' என்றாள்.

''ஒண்ணுமில்லே, மிஸி! எங்க முதலாளி ஊர்லே இல்லே. என் கையிலேயும் பணம் இல்லே. ஐ வாண்ட் ஒரு ஃபிஃப்டீன் ருப்பீஸ்.''

''ஓ,.... நீ எப்போ பார்த்தாலும் 'மணி' கேட்கிறதுக்குத்தான் இங்கே வர்றே, மேன்!''

''நோ நோ, மிஸி! கோய்ச்சுக்காதே. மிஸ் — அண்டர்ஸ்டாண்ட் பண்ணிக்காதே. பணம் இன்னா பணம். பிசாத்து! அது டுடே வரும்; டுமாரோ போயிடும்; நீ கெடைப்பியா? உன்னை நான் எவ்வளவு டீப்பா லவ் பண்றேன் தெரியுமா? ஐ லவ் யூ டீயர்!''

''இதெல்லாம் ஓல்டு ஸ்டோரி. நீ என்னை ஏமாத்தறே. பிளஃப் பண்றே.''

''அப்படீன்னா சரி; நான் போறேன்!''

சில விநாடிகள் அமைதி. ''கோபிச்சுக்காதே டார்லிங்! இந்தா ஃபிஃப்டீன் ருப்பீஸ்! இப்ப ஹாப்பிதானே?''

இருவரும் குஷியாகச் சிரிக்கும் சப்தம். மீண்டும் கிராமபோனில் இசை முழங்கும் ஓசை.

ஏதோ ஒரு புதிய உலகத்தில் தான் இருப்பது போன்ற பிரமையுடன் படுத்துக் கொண்டிருந்த சபேசன் அந்த இன்னிசையைக் கேட்டுக் கொண்டே தூங்கிப் போனான்.

நான்கு நாட்கள் கடந்து மறைந்தன. சபேசனின் சென்னை நகர வாழ்க்கையில் அந்த நான்கு நாட்களும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை என்று தான் சொல்ல வேண்டும். விடியற்காலையில் எழுந்து பட்லரிடம் சொல்லிக்கொண்டு வெளியில் புறப்பட வேண்டியது; நகரில் உள்ள அச்சகங்களைத் தேடி அலைந்து ஜல்லி கொள் முதல் செய்து விற்பனை பண்ண வேண்டியது; கண்ணில் தென்படும் ஹோட்டலில் புகுந்து வயிறாரச் சாப்பிட வேண்டியது; இருட்டியதும் ரோஸியின் வீட்டுக்குத் திரும்பித் தனக்கு அளிக்கப் பட்ட அறையில் படுத்துச் சுகமாகத் தூங்க வேண்டியது.

இப்படி எவ்விதக் கவலையுமின்றி இனிதாக அந்நான்கு நாட்களையும் கடத்திய அவன், ஐந்தாம் நாள் முன்னிரவு எட்டு மணி வாக்கில் ரோஸியின் வீட்டுக்கு வந்து வழக்கம்போல் பட்லரைப் பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்து விட்டுத் தன் அறைக்குப்



விஷயம் அறிந்தவர்களை எப்பொழுதும் ப்ருக் பாண்ட் தேயிலையையே விரும்பச் செய்வது எது?

தேனீர் அருந்தும் வகையிலே அநேகமாய் எல்லோரையும் திருப்தி செய்வது கடினம் என்பதை,ப்ருக் பாண்ட் கம்பெனியார் வெகு காலத்திற்கு முன்பே அறிந்து கொண்டனர். அதாவது, கலை, நறுமணம், சத்து ஆகியவை மிகச் சரியாயிருக்க வேண்டும். இதனாலேயே ப்ருக் பாண்ட் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைகளைக் கலவை செய்யும் கலையை பூரண ஒழுங்கிற்குக் கொண்டு வருகின்றனர்.

உங்களுக்கு, முழுத் திருப்தி அளிக்கக்கூடிய கலவை தயாரிக்கவென்றே ப்ருக் பாண்டின் தேயிலை ருசி கண்டு தரம் காண்பவர்கள் பிரதி தினம் 600 வகை தேயிலைகளை ருசி பார்க்க நேரிடுகிறது. பிறகே நல்ல டிகாக்ஷனுக்காகச் சிலவற்றையும் நறுமணத்திற்காக மற்றவைகளையும் தேர்ந்தெடுக்கின்றனர். இவை எல்லாம் சேர்ந்ததே நீங்கள் விரும்பும் சுவையளிக்கின்ற கலவையாகிறது.

ஏனெனில், ப்ருக் பாண்ட் தேயிலை நிபுணர்கள் அபூர்வத் திறமையுடனும் அனுபவத்துடனுமாக தேயிலைக் கலவை செய்கின்றனர். இதன் மூலம் நீங்கள் விரும்பும் ப்ருக் பாண்ட் கலவையில் எப்பொழுதும் விசேஷமான நறுமணமும் பிரத்தியேகமான சுவையும் தப்பாதிருப்பது நிச்சயம். தவிர,ப்ருக் பாண்ட் என்றால் புத்தம் புதியது, சுத்தமிருக்கிறது என்பது பொருள். காரணம், அந்தக் கலவை சுகாதார முறையில், காற்று உட்புகாத பாக்கெட்டுகளில் அடைக்கப்பட்டு நன்கு பாதுகாக்கப்படுகிறது.

உங்களைத் திருப்தி செய்வது எவ்வளவு கடினம்! என்றாலும், ப்ருக் பாண்டைத் தவிர உங்களை நன்கறிந்தவர்கள் வேறெவருமில்லை! வாழ்க்கையிலுள்ள நல்ல பொருள்களை அனுபவிக்கும் உங்களைப்போன்றவர்களுக்கென்றே ப்ருக் பாண்ட், தேயிலைகளைக் கலவை செய்கின்றனர்.



JWT/BB 2317

★ வட்டி

★ விஷயத்தில்

★ அக்கறையுண்டா?

யார்தான் அக்கறைப்பட மாட்டார்கள்?......உண்மையில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான அக்கறை உள்ளது ... எங்களது அக்கறையோ உங்களுக்கு அளிக்கும் வட்டியைப் பற்றியதேயாகும் ... இதில்தான் எங்கள் அவகாசம் அனைத்தையும் நாங்கள் செலவிடுகிறோம்... ஆம் ... உங்கள் வட்டியை அதிகரித்து வழங்குவதில்தான் ... எனவே உங்கள் சேமிப்புகளின் மீது எமது புதிய வட்டி விகிதங்கள் எப்படி உங்கள் நல்ல நலனுக்கு உதவுகின்றன என்பதைக் காணுங்கள்.

...இதற்கும் இதற்கு மேலும்	ஆனால் ... இதற்கு குறைவு	விகிதம்
91 தினங்கள்	6 மாதங்கள்	5 % வருடத்திற்கு
6 மாதங்கள்	1 வருடம்	5½% ,,
1 வருடம்	2 வருடங்கள்	6 % ,,
2 வருடங்கள்	3 வருடங்கள்	6¼% ,,
3 வருடங்கள்	5 வருடங்கள்	6½% ,,
5 வருடங்கள்	7 வருடங்கள்	7 % ,,
7 வருடங்கள்	9 வருடங்கள்	7¼% ,,
9 வருடங்கள்		7½% ,,

ஓர் ஆண்டுக்கும் அதற்கு மேற்பட்டும் வட்டி அரையாண்டுக்கு ஒரு முறை வழங்கப்படும். எனவே உங்கள் பணத்தை எங்கு சேமிப்பது என்பது உங்களுக்குத் தெரியும். ஏன் எனில் உங்கள் நலனையே உண்மையில் நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம் ... மேற்கொண்டு விவரங்களுக்கு இன்றே விசாரிக்கவும்.

தி சென்ட்ரல் பாங்க்

ஆப் இந்தியா லிமிடெட்

(ஸ்தாபிதம் 1911)

பதிவுக் காரியாலயம்: மஹாத்மா காந்தி ரோடு, பம்பாய்-1

F. C. கூப்பர், ஜெனரல் மானேஜர்

போய்க் கதவைச் சாத்திக்கொண்டு, அன்றைய ஜல்லி விற்பனை வரவு செலவுக் கணக்குகளையெல்லாம் எழுத உட்கார்ந்தான்.

'இரவு நேரங்களில் இந்தக் கணக்கு எழுதும் வேலையைக் கொஞ்ச நாட்களுக்குச் செய்யாமல் இருந்தால் நல்லது போலிருக்கிறதே' என்று தனக்குள் முணுமுணுத்தவாறு தன் கையிலிருந்த பேனாவை ஒரு விநாடி கூர்ந்து பார்த்தான். அது வேதா அவனுக்கு அன்புப் பரிசாக அளித்தது. அந்தப் பேனாவை எடுத்து எழுதும்போதெல்லாம் அவளுடைய அழகிய முகம் கண்ணெதிரே தோன்றி இனம் புரியாத ஓர் இன்ப வேதனையில் அவனை ஆழ்த்தியது. சில சமயம் அவனது சுக நித்திரைக்குக் குந்தகம் விளைவிப்பதாகவும் அது இருந்தது. இதனாலேயே அவன் அவ்வாறு முனகிக்கொண்டான். ஆனால் அவளைப்பற்றிய நினைவைத் தவிர்க்கும்போதெல்லாம் அந்த இடத்தில் அவனுடைய தாய் தந்தையைப் பற்றிய கவலை வந்து சூழ்ந்து கொள்கிறதே! அது இதைவிடப் பெரும் துன்பத்தை அவனுக்கு அளித்தது. ஆகவே, முழுக்க முழுக்கத் துன்பத்தையே தரும் அந்த நினைவை நீக்கித் துன்பத்திலும் ஏதோ ஒருவகை இன்பம் நல்கும் வேதாவின் நினைவில் தன் மனத்தை லயிக்க விடலானான்.

''என்ன மிஸ்டர் போயட்! லாங் கம்போஸ் பண்றியா?'' என்ற ரோஸியின் குரல் கேட்டுச் சட்டென்று எழுந்து நின்ற சபேசன், ''இல்லே, மேடம்!'' என்றான் நாணக் குரலில்.

அறைக்கு வெளியே வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்த அவள், ''அஞ்சு நாளுக்கு மேலே ஆய்ப் போச்சு; உன்னோட ஃபிரண்ட் மிஸ்டர் நாச் இந்தப் பக்கமே வரலேயே? நீ அவரை 'மீட்' பண்ணலியா?'' என்று உள்ளார்ந்த ஏக்கத்துடன் வினவினாள்.

''இல்லே, மேடம்! நான் அவரைப் பார்க்கவில்லே'' என்று உண்மையைச் சொன்னான் சபேசன்.

சன்னலருகில் வந்து அவனை ஒரு கணம் கூர்ந்து நோக்கிய ரோஸி, ''ஆமாம்; உன்னை நான் எங்கோ பார்த்த மாதிரி இருக்குதே?'' என்று இழுத்தாள்.

சபேசன் இதைக் கேட்டுத் திடுக்குற்றான். என்ன பதில் சொல்வதென்றே அவனுக்குத் தெரியவில்லே.

''எஸ், நௌ ஐ ரிமெம்பர்ட்! அண்ணைக்கு ஒரு நாள் ரிப்பன் பில்டிங்கண்டை நானும் மிஸ்டர் நாச்சும் பேசிக்கிட்டு இருந்தப்ப அதை 'நோட்' பண்ணிக்கிட்டிருந்தவன் இல்லேயா நீ?'' என்று முகத்தைச் சுளித்த ரோஸி, ''உனக்கு என்ன வொர்க் மேன்? கெரோஸின் ஆயில் சேல் பண்ற வேலேயா?'' என்றாள்.

சபேசனுக்குப் பொய் பேசிப் பழக்கமில்லே. அது அவனது தொட்டிற் பழக்கம். ''ஆமாம், மேடம்! ஆனால்...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

''ஆல் ரைட்! யூ டோண்ட் வொர்ரி!'' என்று அலட்சியமாகச் சொன்ன ரோஸி நேரே சமையலறையை நோக்கிச் சென்றாள்.

சற்றைக்கெல்லாம் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சபேசனின் அறைக்கு வந்த பட்லர், ''இன்னா, ஜானி! தூங்கப் போறியா? கொஞ்சம் பிளீஸ் பண்ணி இப்படி எழுந்திருச்சு வர்றியா?'' என்றான் கேலிப் புன்னகையுடன்.

''ஏன் அண்ணே?....'' என்று குழறிக் கேட்டான் சபேசன்.

''எக்ஸ்கியூஸ் பண்ணிக்கோ, ஜானி! இந்த ரூமிலே 'டாக்'கைக் கட்டிப் போடணும்; மிஸியம்மா சொன்னாங்க! நீ போய் பேக்-சைட் வராந்தாவிலே படுத்துக்கோ. அதுவும் நல்ல கன்வீனன்டான இடம்தான்.''

''சரி, அண்ணே!'' என்று கம்மிய குரலில் இழுத்த சபேசன் அங்கிருந்து பின்புற வராந்தாவை நோக்கி நடந்தான்.

அந்த இடம் ஒரே குப்பையும் கூளமுமாக இருண்டு கிடந்தது. சுவர் ஓரம் ஜமுக்காளத்தை விரித்துப் போட்டுச் சுருண்டு படுத்துக்கொண்டான். வெகு நேரம் வரையில் அவனுக்குத் தூக்கமே வரவில்லே. 'அந்த மன்றோ சிலை அடி வட்டத் தளத்தைவிட இந்த இடம் எவ்வளவோ மேல்' என்ற எண்ணம் எழுந்த பிறகுதான் தூக்கம் அவன் கண்களைத் தழுவியது. (தொடரும்)

கம்யூனிஸ்ட் யார்?

காலஞ்சென்ற பிரபல ஹாலிவுட் நடிகர் ஏரால்பிளின், தனது சுயசரிதையில் சொல்லியிருப்பது மிகவும் சுவையானது.

இருபத்தைந்து வயதில் ஒருவன் கம்யூனிஸ்டாக இல்லையென்றால் அவனுக்கு இருதயம் இல்லையென்று அர்த்தம். ஐம்பது வயதில் ஒருவன் கம்யூனிஸ விரோதியாக இல்லையென்றால் அவனுக்கு மூளை இல்லையென்று அர்த்தம்.

-பி.சி.ஜீ.



வெளுக்கும் துணிகளெல்லாம் வெண்மை மயம், துப்புரவான தூய்மை மயம்: வெல்வது ஸர்ப் சலவையின் எல்லைமீறிய வல்லமை! கரைகடந்த நுரைவளம்! கேட்பானேன். சேலை, சிற்றுடை முதல் சிறுவரின் ஆடைவரை ... எதற்கும் நிகரிலாத வெண்மை, சிகரமான தூய்மை! கைப்பட வீட்டிலே துணி வெளுக்க ஒரே வழி: கைகண்ட ஸர்ப்!

ஸர்ப் சலவை: வெள்ளைவெளேர் சலவை

இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

SU. 38-140 TM

சந்தேகம்

டி. ராமமூர்த்தி

நாலைந்து பக்கத்து வீட்டுக்குப் புதுசாக யாரோ குடிவந்தார்கள். வந்துவிட்டுப் போகட்டுமே; நமக்கு என்ன அக்கறை? நகர வாசத்தைப் பற்றிச் சொல்றதில்லையா, பக்கத்து வீட்டிலே யார் இருக்கிறார்கள் என்பதுகூட நகரத்தில் உள்ளவர்களுக்குத் தெரியாது என்று.

நான் நகரத்திலே பிறந்து வளர்ந்தவன் இல்லை. சமீபத்தில்தான் நகரத்துக்கு வந்தேன். சமீபம் என்றால் என்ன, பத்து வருஷங்களுக்கு முன்னே! பத்து வருஷமாய்க் குழாய்த் தண்ணீரை அண்டாவிலிருந்து மொண்டு தலையிலே கொட்டிக் கொண்டு குளித்து, காற்று வாங்க வேண்டுமென்றால் வீட்டை விட்டு வெளியே போய் வந்தும் இன்னும் நான் நகர வாழ்க்கையில் சரியாக ஊறவில்லை!

கிராமத்திலே பக்கத்து வீடுகளில் கல்யாணம் என்றால் உக்கிராணம் உள்ளே என் பொறுப்பிலே விட்டு விடுவார்கள். கல்யாணத்துக்கு போவானேன்; மாவடு சீசன்லே





பக்கத்து வீட்டு மரத்திலே இருந்து மாவடு உலுக்கறதுண்டு. நான் வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு மாமரத்து மேலே ஏறுவேன். பக்கத்து வீட்டு சாமா வாசலிலே புதுசா ஓர் அறை கட்டினானே, கதவுக்கும் ஜன்னலுக்கும் வர்ணம் அடிக்க ஒரு டப்பா பெயின்டை வாங்கி வைத்திருந்தான். பெயின்ட் அடிக்க ஆளைத் தேடினான். 'இதுக்கு என்னடா ஆளு?' என்று கேட்டுவிட்டு ஒரு நாள் நானே அந்தக் கதவுக்கும் ஜன்னலுக்கும் பெயின்ட் அடித்து விட்டேன்!

கிராமத்தை விட்டு இங்கே வந்த பிறகு அடுத்த வீட்டுக்காரர்களுடன் நானும் அதிகம் ஈஷிக்கொள்ளாமல் சற்று ஒதுங்கியேதான் இருக்கிறேன்; ''இது யாரோ நாட்டுப்புறம் போல இருக்கிறது! தன் ஜோலியைப் பார்த்துக் கொண்டு போகாமல் ஊரார் விஷயத்தில் எல்லாம் தலையிடுகிறது!'' என்று சொல்வார்களோ, அல்லது நினைத்துக் கொள்வார்களோ என்கிற பயத்தினால்தான்!

பக்கத்து வீட்டில் இப்போது வந்தவர்களுக்கு முன்னால் இருந்தவர் ஓர் அதிகாரி. பார்த்தாலே தெரியும் அவர் அதிகாரி என்று. யாராவது கும்பிட்டால் பதிலுக்குத் தலையை மட்டும் அழுத்தலாக ஆட்டுவார்!

ஒருநாள்தான் அவருடன் பேசும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அன்று ஞாயிற்

ஞாயிற்றுக்கிழமை. காலை எட்டு மணி இருக்கும். அவர் மகன் அவர்கள் வீட்டு மொட்டை மாடியில் அவர்கள் ரேடியோவுக்கு 'ஏரியல்' கட்டிக்கொண்டிருந்தான். அதிகாரி வெளியே வந்து நின்று பார்த்தார்.

''என்னடா இது?'' என்றார்.

''ஏரியல் போடறேம்ப்பா!''

''உள்ளேதான் போட்டிருக்கேடா!''

''அது இண்டோர் ஏரியல்தானே? அவுட்டோர் ஏரியல் போட்டா இன்னும் நன்றாகக் கேட்குமே.''

''உம்...என்னடா இது அங்கியும் இங்கியும் ஏறிண்டு? கையைக் காலை முறிச்சுக்கப் போறியே!''

பக்கத்து வீட்டுக்கும் என் வீட்டுக்கும் நடுவில் நாலரை அடி உயரத்தில் ஒரு குட்டி மதில் சுவர். நான் அதன் ஓரத்தில் நின்று பையன் மாடியில் ஏரியல் கட்டுவதைப் பார்த்துக் கொண்டிருந்ததால் அதிகாரி என் பக்கம் திரும்பியபோது ''அவுட்டோர் ஏரியல் போட்டா ரிஸப்ஷன் இன்னும் நன்றாகத்தான் இருக்கும்'' என்றேன்.

அந்த அதிகாரி என்னைப் பார்த்ததும் பாராததுமாகத் தலையை ஆட்டினார்.

''எஸ். எஸ். தட்ஸ் ஐநோ! பட்ஸ்...'' என்று வெள்ளைக்காரத் துரை மாதிரி நாலு வார்த்தைகள் சொல்லிவிட்டு உள்ளே வேகமாகப் போய் விட்டார்.

கொஞ்ச நாளைக்குப் பிறகு ஒரு தினம் நடு ராத்திரியில் பக்கத்து வீட்டில் பேச்சுக் குரலும் நடமாட்டமும் கேட்கவும் எழுந்து ஜன்னல் வழியாகப் பார்த்தேன். பக்கத்து வீட்டில் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தன. அதிகாரியின் மனைவியும் மகளும், மகனும் வாசல் போர்டிகோவில் நின்றிருந்தனர்.

''இந்தப் பாதி ராத்திரியில் நான் போய் டாக்டரைக் கூப்பிட்டால் வருவாரா?'' என்று தன் அம்மாவைப் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தான் மகன்.

''நானும் வேணா உன்னோடு கூட வரட்டுமா?'' என்று கேட்டாள் அந்த அம்மாள்.

''நான்மட்டும் இங்கே எப்படித் தனியாக இருக்கிறது?'' என்று ஆட்சேபித்தாள் அதிகாரியின் மகள்.

யாருக்கோ உடம்பு சரியில்லை என்று தோன்றியதால் நான் வெளியே சென்று மதில் சுவர் ஓரம் போய், ''என்ன அம்பி?'' என்று குரல் கொடுத்தேன்.

பையன் அம்மாவைப் பார்த்தான். அந்த அம்மாள் ''சொல்லேண்டா!'' என்றாள்.

''பாட்டிக்கு உடம்பு சரியில்லை. ஆஸ்துமா மேல் மூச்சு வாங்கிண்டு கஷ்டப்படறா. டாக்டர் யாரையாவது அழைச்சுண்டு வரலாம்னு இந்த நேரத்திலே கூப்பிட்டா வருவாளான்னு பார்க்கிறேன். அப்பா ஊரிலே இல்லே, காம்ப் போயிருக்கார். நான்...''

''எங்க டாக்டர் இருக்கார். நான் கூப்பிட்டா வருவார். வா என்னோடே; போய் அழைச்சிண்டு வருவோம்'' என்றேன்.

பையன் என்னோடு வந்தான்.

நான்கு நாளைக்குப் பிறகு காலையில் பல் தேய்க்கக் கொல்லைப்புறம் போனபோது பக்கத்து வீட்டுக் கொல்லையில் அந்த அதிகாரியைப் பார்த்தேன்.

''அன்னிக்கி ராத்திரி தாயாருக்கு ஸீரியஸாப் போச்சாம். டாக்டரை அழைச்சிண்டு வந்தீங்களாம். ரொம்ப தாங்க்ஸ்!'' என்றார்.

''ஓ, என்ன பிரமாதம்?'' என்றேன்.

''நோ, நோ! பாதி ராத்திரி... உங்களுக்கு எவ்வளவு சிரமம்! வாட்ஸ் இஸ் இட்ஸ்!'' என்றார். 'நான் அதிகாரி; நான் சொல்வது தான் சரி! என்ன பிரமாதம் என்று நீங்கள் சொன்னால் நான் ஒத்துக் கொள்ள முடியுமா?' என்பது போல் சொல்லிவிட்டு, குளியல் அறைக்குள் போய்விட்டார்.

அப்புறம் அவருடன் பேசச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. அவர் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போன பின் புதுசாக வந்திருப்பவர் எப்போதும் என் கண்ணிலேயே பட்டுக் கொண்டிருக்கிறார். அவர் வீட்டுக்குள் இருக்கும் நேரத்தை விட வெளியே இருக்கும் நேரம்தான் அதிகம். ஜன்னலால் பார்த்தால் அவர் தென்படுவார்; கொல்லைப் பக்கம் போனாலும் அவர் தம் வீட்டுக் கொல்லையில் இருப்பார். வாசல் பக்கம் போனால், அவரும் தம் வீட்டு வாசலில் இருப்பார்.

சிலரைப் பார்த்தால் முன்பு எங்கேயோ பார்த்த மாதிரியே இருக்கும். இவரும் அப்படித்தான் இருந்தார். நல்ல வாட்டசாட்டமான உடம்பு. தலையில் கட்டுக் குடுமி. அந்தக் குடுமியின் முடிச்சுக்கு மேலே மயிர் எப்போதும் ஒரு கேள்விக் குறி மாதிரி தூக்கிக் கொண்டிருக்கும். முகத்தில் இரண்டு கன்னங்களும் மாம்பழக் கதுப்புக்களைப் போல் இருந்தன. அதில் இடது பக்கம், வெற்றிலை அந்தப் பக்கம் அடக்கி யிருந்ததால் இன்னொரு பக்கத்தை விடச் சற்று உப்பலாக இருந்தது. அதே போல் அவர் மார்பும் ஒரு பக்கத்தை விட இன்னொரு பக்கம் தடிப்பாக இருந்தது. அர்த்தநாரீசுவரர் மாதிரி. அவர் குரலும் சரீரத்துக்கு ஏற்றாற் போல் இராமல் பெண்ணின் குரலைப் போல் கீச்சென்று இருந்தது. அவர் பேசும்போது அவர்தான் பேசுகிறாரா, அல்லது அவர் பின்னால் ஒளிந்து யாராவது பேசுகிறார்களா என்று பலமுறை சந்தேகம் வந்துவிடும்.

முன்பு இருந்த அதிகாரியைப் போல் இவரிடம் ஜோரா ஒன்றும் இல்லை. பேச்சுக்காக இவர் அலைந்தார். குடி வந்த அன்றே என்னைக் கொல்லைப்புறத்தில் பார்த்ததும், ''என்ன ஹரிஹி; நீங்க இந்த வீட்டிலே ரொம்ப நாளாய் இருக்கியளோ?'' என்று குசலம் விசாரித்தார்.

''உம்; ஆச்சு அஞ்சாறு வருஷங்கள்...நீங்க வெளியூரிலேருந்து வருகிறாப்பலே இருக்கு?''

''வெளியூரா? நோ, நோ! இருபது வருஷங்களாறது இங்கே வந்து. இருபது வருஷங்களிலே இருபது வீடும் மாத்தியாச்சு!''

''அப்படியா?''

''ஆமாம்! ஏங்கிறியளா?'' என்று வீட்டுப் பக்கம் பார்த்துப் பின் குரலைத் தாழ்த்தி, ''நம்படை இருக்காளே; அவளுக்கு எந்த வீடும் சரிப்படறதில்லே. அதான் தெரியாதா இந்தப் பொம்மனாட்டிகள் சமாசாரம்?'' என்றார்.


கர்ப்பிணிகளுக்கு
அதிகப்படி கால்ஷிய ஊட்டம் தேவை
கல்ஸாணா-டி இதை அளிக்கிறது
Kalzana
Kalzana
கல்ஸாணா-டி
வைட்டமின் சத்து நிறைந்த
கால்ஷியம் மாத்திரைகள்



மேன்மையான தயாரிப்பு. நாள்பட உழைக்கும். விலையிலும் சிக்கனமானது! டுவின் டஸ்கர் பாப்ளின் பார்வைக்குப் பகட்டானது. உழைப்பில் நீடித்தது. எவ்வளவு சலவை செய்தாலும் அதன் நெசவின் நேர்த்தியை இழக்காதது.

டுவின் டஸ்கர் பாப்ளின் இரண்டு வகைகளில் கிடைக்கிறது.

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட், மதுரை

உயர்ந்த ரக நூல்களுக்கு உலகப் பிரசித்தி பெற்றது

மானேஜிங் ஏஜண்டுகள் : ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

ஹார்வி

டுவின் டஸ்கர்

பாப்ளின் - டிரில் - கேம்பிரிக்

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்

இந்தச் சமயத்தில் அவர் 'நம்படவ' என்று குறிப்பிட்ட அம்மாள் சமையல் அறைக்குள்ளிருந்து வந்தாள். தப்பான காரியம் பண்ணிவிட்ட நாய், எஜமான் அதட்டியதும் ஒடுங்கிப் பதுங்குமே அதே மாதிரி இந்த மனிதர் சட்டென்று தலையைத் தாழ்த்திக் கொண்டு அவசரமாக உள்ளே போனார்.

''மாமா! பக்கத்து வீட்டுக்குப் புதுசாக் குடி வந்திருக்காளே பார்த்தியோ?''

கல்லூரிப் படிப்புக்காக எங்கள் வீட்டில் இருக்கும் என் மருமான் அன்று மாலை கேட்டான்.

''பார்த்தேனே அவரை! அவர் பேர் என்ன?''

''சந்தோஷம்.''

''சந்தோஷமா? சே, சே! கட்டுக் குடுமியும் தானுமாய், நெற்றியிலே மூணு பட்டை விபூதியோட நந்திகேசுவரர் மாதிரி இருந்தார் மனுஷன்! சந்தோஷமாவது சந்தோஷம்! கிறிஸ்துவர்கள்தானே சந்தோஷம்னு பேர் வச்சுப்பா?''

''அவர் பேர் சந்தோஷம் இல்லே! அவர் பேர் எனக்கும் தெரியாது. சந்தோஷம்னு எதுக்காகச் சொன்னேன்னு, அவர் பேசற போது எதுக்கெடுத்தாலும், சந்தோஷம், சந்தோஷம்னு சொல்றார்.''

''சீச்சீ! இந்த மாதிரி மனுஷாளுக்குப் பேர் வைக்காதீங்கோன்னு எத்தனை தரம் சொல்றது? ஆமாம், அவர் எதுக்காக இப்படி எதுக்கெடுத்தாலும் சந்தோஷப்படுகிறார்?''

''தெரியல்லே! 'அம்பீ! உன் பேர் என்ன?' என்றார். சொன்னேன். 'பேஷ்! ரொம்ப சந்தோஷம்'னார். என்ன படிக்கிறேன்னு கேட்டார். பி. எஸ் ஸி.ன்னு சொன்னேன். 'பலே, ரொம்ப சந்தோஷம்!'னார். இப்படி எதுக்கெடுத்தாலும் சந்தோஷப்படறார்!''

''சந்தோஷப்படறது நல்லதுதானே; சில பேர் எதுக்கெடுத்தாலும் மூக்காலே அழுவாளே, அந்த மாதிரி அழாமே!''

'சந்தோஷம்' (அவர் பெயரை நானும் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை!) அநேகமாகத் தினமும் நான் காலையில் வெளியே புறப்படும்போதுதான் தாமும் பஸ் ஏறக் கிளம்பினார். எதைப் பற்றியும் ஓயாமல் பேசினார். பிறத்தியார் விஷயத்தில் தலையிடுகிறோம்; நம் விஷயத்தைப் பிறத்தியாரிடம் சொல்கிறோம் என்பதெல்லாம் அவரிடம் கிடையாது.

''லிமிடெட் ஃபாமிலி எனக்கு. ஒரு பெண், ஒரு பிள்ளை'' என்றார் ஒரு தினம்.

''தேவலையே! குடும்பக் கட்டுப்பாடு போஸ்டர்களில் போடுகிற மாதிரி மாடல் குடும்பமாக இருக்கே!'' என்றேன்.

''முன்பெல்லாம் மாடல் குடும்பம் மூன்று குழந்தைகளாக இருந்தது. இப்போது இரண்டாகக் குறைச்சுட்டான்கள்! கவனித்தீர்களா?''

''ஆமாம்.''

''அதே மாதிரிதான் என் குடும்பமும் குறைஞ்சு போச்சு!''

''ஏன்; மூத்த பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி அனுப்பிச்சுட்டீங்களோ?''



''சாதத்தில் இருக்கும் கல்லையும் நெல்லையும் பொறுக்கிக் கொண்டிருங்கள். சாம்பார், ரசம், கறி செய்து முடித்து விடுகிறேன்!''

''மூத்தவனும் பையன்தான். வீட்டை விட்டுத் துரத்தி விட்டேன்.''

''அடடே! ஏன்?''

''பின்னே, வீட்டுலே இருந்தா குறியாக இருக்கணும். ஊரைச் சுத்திண்டு தறிதலையா ஆயிட்டான். ஒழுங்கா, யோக்கியனாயிருந்தா இங்கே இரு. இல்லேன்னு போயிடுன்னேன். போயிட்டான்.''

''எங்கே?''

''எங்கே போறான்; இங்கேதான் எங்கேயாவது இருப்பான்; எங்கேயாவது வேலை ஏதாவது தேடிண்டு, எங்கேயாவது தின்னுண்டு......''

எனக்கு அவர் காரியம் சரியானதாகப் படவில்லை. சின்ன வயசில் பையன் ஏதோ தவறுதலாக நடந்து கொள்ளலாம். நல்ல தனமாகச் சொல்லித் திருத்தக் கூடாதா என்று தோன்றிற்று.

''பெண்ணுக்குக் கல்யாணத்தைப் பண்ணிப்பிடணும். அது ஆயிட்டா அப்புறம் எனக்குக் கவலை இல்லே. பெண்ணைத்தான் நீங்கள் பார்த்திருக்கியளே. சுமாராத்தான் இருக்கா அவ அம்மா மாதிரி. அவ அம்மாவை நான் பண்ணிண்டாப்பிலே அவளை யாராவது பண்ணிக்கணும்! நாலஞ்சுபேர் வந்து பாத்தா. பெண் சுவாரஸ்யப்படலேன்னு போயிட்டா'' என்றார் ஒரு தினம்.

ஆனால் ஒரு ஞாயிற்றுக்கிழமை அன்று காலை எட்டு மணிக்கு இன்னும் யாரோ ஸ்ரீ 'சந்தோஷத்'தின் பெண்ணைப் பார்க்க வந்தார்கள். அவரே ஸ்டேஷனிலிருந்து அவர்களை டாக்ஸியில் அழைத்து வந்தார். ஒரு மணி நேரத்துக்குப் பின் அவர்கள் திரும்பிப் போனார்கள்.

நான் கொல்லைப்புறம் போன போது, சந்தோஷத்தை அவர் வீட்டுக் கொல்லையில் அவரைப் பந்தல் அடியில் பார்த்தேன். காய் பறித்துக் கொண்டிருந்தார். காயாவது காய்! கறுப்பாகச் சடை சடையாகப் பூச்சி பிடித்திருந்தது செடி முழுதும். வீட்டுக்கு வந்த புதுசில், அவரே சவுக்கும் மூங்கிலும் வாங்கி, வேஷ்டியை வரிந்து கட்டிக் கொண்டு பந்தல் போட்டார் ஒரு லீவு நாள் அன்று.



முதலும் வட்டியும்

அவர் ஒரு சிறந்த இசை விற்பன்னர். அன்று அவருக்கு வயது சுமார் ஒன்பதுதான் இருக்கும். உருவம் சிறியதுதான். ஆனால் குரல் மட்டும் ஆறு அல்லது ஆறரைக் கட்டையில் அனாயாசமாகச் சஞ்சரிக்கும். நினைத்த சங்கதி நினைக்காத சங்கதியெல்லாம் சரளமாகப் புரண்டு ஒலிக்கும். இத்தனைக்கும் ராக ஞானமோ சுர ஞானமோ கிடையாது. அனைத்துமே கேள்விஞானம்தான்.

பள்ளிப் படிப்பை ஆரம்பக் கட்டத்திலேயே நிறுத்தி விட்டதால் நாள் முழுதும் வீட்டிலும் சுற்று வட்டாரத்திலும் ஒலித்துக் கொண்டிருந்த பல பக்திப் பண்களைக் கேட்கப் பையனுக்கு நிறைய வாய்ப்பு இருந்தது.

அந்த ஆண்டில் பக்கத்து ஊரில் வைகாசிமாதத் திருவிழாவைப் பார்க்க, வழக்கம்போல் தந்தையார் மகனையும் அழைத்துப்போயிருந்தார். பையனுக்குச் சாரீர வளம் ஜாஸ்தி என்று கேள்விப்பட்டிருந்த கோவில் தர்மகர்த்தா எதிர்பாராதவகையில் பையனைப் பலர் கூடியிருந்த சபையில் பாடச் சொல்லிவிட்டார். பையனும் ஆர்வத்துடனும் துடிதுடிப்புடனும் பல சங்கீத நாதஸ்வர வித்துவான்கள் முன் கூச்சமோ சங்கோசமோ இல்லாமல் தனக்குத் தெரிந்த பாட்டுக்களைப் பாடிப் பல 'சபாஷ்'களைப் பெற்றுவிட்டான்.

தர்மகர்த்தா பாராட்டுதலோடு நிற்காமல் சன்மானப் பணமாக ஐந்து ரூபாயையும் கொடுத்தார். அந்த ஐந்துரூபாய் அதீத ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அப்புறம் வெகு நாட்கள் வரை சிறு பிராயத்தில் தந்தை தின்பண்டம் வாங்கச் சில்லறைக் காசு கொடுக்க மறுத்த போதெல்லாம், 'என் கச்சேரிப் பணத்தைக் கொடுங்களப்பா' என்று உரிமையுடன் முரண்டு செய்த பையன், இன்று எத்தனையோ மேடை கண்ட புகழ்பெற்ற பாடகராக விளங்குவதோடல்லாமல் ஓர் இசைக் கல்லூரிக்கே முதல்வராகப் பணியாற்றுகிறார். அவர் யார் தெரியுமா? அவர்தான் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்.

ஆதாரம் :

தமிழ் இசைக் கட்டுரைகள்.

கொடி படரத் தொடங்கியதுமே பூச்சி இறங்கி விட்டது. காய்களே இல்லை. இருந்த ஒன்றிரண்டும் பூச்சி நிறைந்து, வளைந்தும் சுருங்கியும் வதங்கியும் இருந்தன.

"யாரோ வந்தாப்பலே இருக்கே பெண் பார்க்க ?"

"ஆமாம். கல்யாணம் செட்டில் ஆயிடுத்து. அவரைக்காய் பறிக்கிறேன். இந்த அவரை இருக்கே......"

"கல்யாணம் செட்டில் ஆயிடுத்தா ? வெரி குட்! பையன் யாரு ?"

"அவா பெங்களூரிலே இருக்கிறவா. பையன் பி. இ. பாஸ் பண்ணியிருக்கான். இந்தக்காய் சொன்னேனே, இதுக்கு யானைக் காது அவரைன்னு பேரு. ஒரு காய் நம்ப கை அகலம் இருக்கும்."

"முகூர்த்தம் வச்சாச்சா? எப்போ?"

"முகூர்த்தமா?..... வந்து. அது இன்னமே தான் பார்க்கணும். வந்து, பூச்சி வந்துடுத்தோன்னோ, அதான் கொடி சரியாப் படரல்லே. காயும் நிறைய இல்லே. இருந்தாலும், காய் என்ன ருசி தெரியுமா?" என்று அவர் தம் கையிலிருந்த ஒரு பிடி அவரைக்காயைக் காட்டினார்.

நான் பேச்சை வளர்த்தவில்லை.


இந்த 'சந்தோஷ'த்துக்கு, அழகில்லை என்று வந்தவர்கள் எல்லாம் தட்டிக் கழித்த பெண்ணுக்கு நல்ல வரனைக் கிடைத்ததே என்று சந்தோஷம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பூச்சி பிடித்த அவரைக்காய் நாலு, கொல்லையில் காய்த்து விட்டதே என்று பெருமையும் சந்தோஷமுமோ பிடிபட வில்லை !

முன்பு பக்கத்து வீட்டில் இருந்தவர் யாருடனும் பேச மாட்டார். இவரோ, பக்கத்து வீட்டுக்காரரைக் கூப்பிட்டு இழுத்து வைத்துக் கொண்டு பேசுகிறார். தம் பெருமையையும் மகிழ்ச்சியையும் நம்முடன் பகிர்ந்து கொள்ளப் பார்க்கிறார். ஆனால், அவருக்குப் பெருமையாகவும் சந்தோஷத்தைக் கொடுப்பதாகவும் இருப்பவை நமக்கு ஒன்றும் பிரமாதமாக இல்லை.

அவர் வீட்டிலிருந்து கல்யாணக் கடிதம் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஒரு மாதம் ஆகியும் வரவில்லை.

ஒரு ஞாயிற்றுக் கிழமை காலை, டாக்டர் வீட்டுக்குப் போவதற்காக மின்சார ரயிலில் ஏறி உட்கார்ந்தேன். ரயிலில் ஏகக் கூட்டம். எல்லோரும் கிண்டியில் நடக்கும் குதிரைப் பந்தயத்துக்குப் போகிறவர்கள் என்பது அவர்கள் கையிலிருந்த ரேஸ் புத்தகத்திலிருந்து தெரிந்தது. கிண்டி வந்ததும் நான் எதிர்பார்த்தபடியே அவர்கள் திபு திபு என்று இறங்கினார்கள்.

டாக்டரைப் பார்த்து விட்டு நான் பத்து மணிக்குத் திரும்பி ரயில் ஏறினேன். கிண்டியில், ஏறும் கூட்டமும் அதிகமாகத்தான் இருந்தது. ஸ்ரீமான் 'சந்தோஷம்' அவர்களும் அங்கு ஏறினார். என்னைப் பார்த்ததும் அசட்டுச் சிரிப்புடன் என் எதிரில் வந்து உட்கார்ந்தார். அவர் கையிலும் ஒரு ரேஸ் புஸ்தகம் இருந்தது.


நீம்
பற்பசை
NEEM
TOOTH PASTE
வேம்பின
நற்குணங்களும்
மற்றும் :.பஞுரைட
உள்பட நவீன
மருந்துகளின் பலன்களும்
ஒன்றுய் அமைந்த
டூத் பேஸ்ட
இது ஒன்றே
சுத்தப்படுத்தும்
நுரையை நிறையத் தருகிறது.
இதன் பயனுக பற்கள் வெள்ளை
வெளேரெனப் பிரகாசிக்கின்றன.
மூச்சுக் காற்றிலும் இனியதோர்
புதுமணம் வீசுகிறது.
தி
கல்கத்தா கெமிகல் கம்பெனி லிட்.
CNC-3A TM

"உங்களுக்கு இந்தப் பைத்தியம் கிடையாதோ?" என்னைப் பார்த்துச் சிரித்தவாறு கேட்டார்.

"இல்லே! இது வரையில் இல்லே!"

"ஆமாம்; ரேஸ் மத்தியானம் இரண்டு மணிக்குத்தானே ஆரம்பம்? இப்போதே வந்து இங்கே கூட்டம் போடுவானேன்?"

"மத்தியானம் வந்தால் குதிரை மேல் டிக்கட் வாங்க நாலு ரூபாய். அந்த டிக்கட்டை வாங்க ரேஸ் கோர்சுக்குள் நுழைய நாலு ரூபாய் டிக்கெட்! இப்போது உள்ளே போக டிக்கட் கிடையாது. அதாவது பதினொரு மணி வரை. அது லாபம்தானே?"

"ஆமாம்; ஆனால் மத்தியானம் எப்படியும் மறுபடியும் வரவேண்டுமே?"

"வேண்டாமே! நான் வரமாட்டேன்."

"நீங்கள் டிக்கெட் வாங்கின குதிரைகள் ஜெயித்து விட்டால்?"

"உம்..... அப்போ பார்த்துக்கலாம்."

அவருக்கே தம்முடைய அதிர்ஷ்டத்தில் இருந்த நம்பிக்கை அவ்வளவுதான்! இதற்காகப் பொழுது விடிந்ததும், காப்பியைச் சாப்பிட்டதும் சாப்பிடாததுமாய் ஓடி யிருக்கிறார். புஸ்தகம் எப்போது வாங்கினாரோ? நேற்றே வாங்கி யிருப்பார். இரவெல்லாம் அதை ஆராய்ந்திருப்பார்.

எனக்கு அவர் மகள் கல்யாண விஷயம் நினைவுக்கு வந்தது.

"உங்கள் பெண் கல்யாணம் எப்போ?"

"கல்யாணமா? அந்த இடம் செட்டில் ஆகல்லே!" என்றார் அவர்.

"ஆகலியா? ஏன்?"

"வரதட்சிணைப் பணத்திலே தகராறு பண்ணி விட்டான்கள்! அது கூட, ஆயிரம் இல்லே, ஐந்நூறு இல்லே; இருநூத்தம்பது தான்! எனக்கு, இட் வாஸ் எ மாட்டர் ஆப் பிரின்சிபிள்! போடான்னுட்டேன்! நீங்க ஒரு நாள்கூட ரேஸ் பார்த்ததில்லேயா?"

"இல்லே!"

"ஒரு நாள் வாங்களேன், என்னோடே."

"நீங்கதான் உள்ளே போறதில்லேயே?"

"இல்லே, எப்பவானும் உள்ளே போவேன். போன வாரம்கூடப் போயிருந்தேன்."

"ஏதாவது வந்ததா?"

"முதல் அஞ்சு ரேசிலே பிளாங்கி. ஆறாவது ரேசிலே ஒரு குதிரை வந்தது."

குதிரை வந்தது என்ற போது அவர் முகத்தில் ஒரே ஆனந்தம்! அடக்க முடியாத சந்தோஷம்!

"எவ்வளவு வந்தது?"

"எட்டு ரூபா."


"எட்டு ரூபாயா? எட்டுன்னு, பெரிய எட்டா?"

"உம், சின்ன எட்டுதான். வெறும் எட்டு. பேவரிட் ஹார்ஸ்!"

எனக்கு நம்ப முடியவில்லை. நாலு ரூபாய் டிக்கட்டுக்குக் கிடைத்தது நாலே ரூபாய்! இதற்கா இவ்வளவு பிரயாசை; இவ்வளவு சந்தோஷம்?

இவருக்குப் போய்ச் சந்தோஷம் என்று பெயர் வைத்தானே என் மருமான்! அல்ப சந்தோஷம் என்றல்லவா இவருக்குப் பெயர் வைத்திருக்க வேண்டும்?

● ● ● ● ● ● குட்டிக் கதை ● ● ● ● ● ●



"இந்த உலகத்தில் இனி யாரும் எனக்கு இணையில்லை; என்னால் முடியாத காரியமும் இல்லை!" என்றான் ஒருவன்.

"யாரப்பா, நீ?" என்று அவனைக் கேட்டார் ஒரு பெரியவர்.

"என்னைத் தெரியவில்லையா? நான்தான் இந்த உலகத்தில் அஞ்ஞான இருளைப் போக்கிக்கொண்டிருக்கும் விஞ்ஞானி!" என்றான் அவன் அட்டகாசமாக.

"அப்படியா?" என்று தலையை ஆட்டிக்கொண்டே தமக்கு அருகிலிருந்த ரோஜாச் செடியிலிருந்து ஒரு மொட்டைப் பறித்து அவனிடம் கொடுத்து, "எங்கே, இதைக் கொஞ்சம் மலர வையப்பா, பார்ப்போம், உன் விஞ்ஞானத்தால்!" என்றார் பெரியவர் அமைதியாக.


"பூ! இதென்ன பிரமாதம்!" என்று அதை அலட்சியமாக வாங்கி முகர்ந்துகொண்டே தன் ரசாயன அறைக்குள் நுழைந்தான் அவன். அங்கே என்ன முயன்றும் அந்த மொட்டு அவன் எதிர்பார்த்தபடி அவ்வளவு இயற்கையாக மலரவில்லை. அதற்காகப் பொறுமை இழந்து அவனும் அதை விட்டுவிடவில்லை!


இந்த முயற்சியில் அன்றைய இரவும் கழிந்து மறுநாள் பொழுதும் விடிந்தது. செடிகளிலிருந்த மற்ற மொட்டுக்கள் அத்தனையும் வழக்கம்போல் மலர்ந்து மணம் பரப்பின. அந்த மணம் வந்த திசையை நோக்கித் தற்செயலாகத் திரும்பிய விஞ்ஞானி, "இத்தனை மொட்டுக்களையும் இவ்வளவு அழகாக இவற்றுக்கு அருகில்கூட வராமல் மலர வைத்தது யார்?" என்றான் வியப்புடன்.

பெரியவர் சிரித்தார்; "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டான் விஞ்ஞானி.

"உன்னைப் பார்த்துச் சிரிக்காமல் அழவா சொல்கிறாய்?" என்றார் பெரியவர்.

● ● ● ● ● ● விந்தன் ● ● ● ● ● ●





வேண்டாம், திருத்தம்!

ரஷ்ய நாட்டில், பதிவு அலுவலகம் ஒன்றில் ஓர் அழகி அவசரம் அவசரமாக நுழைந்தாள். அவளைத் தொடர்ந்து ஓர் ஆடவனும் சென்றான்.

அதிகாரியை அணுகி, ''இதென்ன சார், இப்படித் தப்பும் தவறுமாகப் பதிவு செய்து வைத்திருக்கிறீர்கள். நான் மணமானவள். கணவனை இழந்தவள் என்று குறித்திருக்கிறீர்களே? இதோ என்னுடைய கணவர் கல்போல உயிருடன் இருக்கிறாரே!'' என்று பொரிந்து தள்ளினாள்.

''பொறுத்துக் கொள்ளுங்கள் அம்மணி! ஏதோ தவறுதல் நேர்ந்து விட்டது. திருத்தி விட்டால் போயிற்று! அதற்காக இவ்வளவு பதற்றப்படுவானேன்?'' என்ற அதிகாரி தவற்றைத் திருத்தப் பேனாவை எடுக்கவில்லை; துப்பாக்கியை எடுத்து ஆடவனைக் குறி வைத்து விட்டார்.

அடுத்த கணமே அந்த அழகி, ''தவறு தவறாகவே இருந்து விட்டுப் போகட்டும். நீங்கள் இப்படி ஒரு திருத்தம் செய்ய வேண்டாம்!'' என்று தன் புருஷனை இழுத்துக் கொண்டு வெகு வேகமாக வெளியேறினாள்.



"பாட்டு நோட்டைக் கொண்டா, தியாகராஜர், சியாமா சாஸ்திரி கிருதிகளை எழுதித் தரேன்."

"அது வேண்டாம் சார்! சீர்காழி, டி. எம். எஸ், சுசீலா, ஜானகி, லதா, சீனிவாஸ், ரபியின் பாட்டையே எழுதிச் சொல்லிக் கொடுங்கோ, போதும்!"


சித்திரக் களஞ்சியம்



"பென்ஷன் பணத்திலே உனக்கு ஸ்நோ வாங்கித் தந்தேன். பவுடர் வாங்கித் தந்தேன். இன்னும் என்ன குறை?"

"ஹேர் டை வாங்கலியே?"





★ ஒருவர்:

நம்ம கஞ்சன் குப்புசாமிதான் இந்தப் பெட்ரோல் 'பங்கை' வாங்கியிருக்கானுமே!

★ மற்றொருவர்:

ஆமா; அதுதான் பார்த்தேன். இலவசமாகக் காற்றடிக்கப்படும் என்ற போர்டைக் காணவில்லை!

"வேடிக்கைதான்! பிரம்மசாரிகள் சங்கத்தார் கல்யாணத்துக்கு வாழ்த்தும் பரிசும் கொடுப்பானேன்? உங்களுக்கு 'டை' கொடுத்திருக்கிறார்களே!"

"எல்லாம் காரண காரியத்தோடுதான். கல்யாணம் என்பது கழுத்துக்குச் சுருக்கு என்பதை உணர்த்துவதற்காக இருக்கலாம்!"



கல்கத்தாவின் கல்கி பிரதிநிதி ஸ்ரீ G. R. ராமஸ்வாமி அவர்களின் சகோதரர் திரு G. R. **விஸ்வநாதன்** அவர்களுக்கும் ஸ்ரீரங்கம் ஸ்ரீ T. S. சுப்ரமணிய அய்யர் அவர்கள் குமாரி சௌ. அகிலாண்டத்துக்கும் சமீபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



பாதியது போதும்!



துமிலன்

அன்று அரசாங்க பஸ்கள் வந்து கொண்டிருந்த விதத்தைக் கண்டு பஸ் ஸ்டாப்பில் நின்றிருந்த மாதங்கியும் வசந்தனும் திகைத்துப் போயிருந்தனர். அவர்கள் தங்கள் கண்களை நம்ப முடியாமல், மேலே நன்ருகத் தேய்த்து விட்டுக் கொண்டு உற்றுக் கவனித்தார்கள். ஏனென்ருல், பஸ்களில் பிரயாணிகள் நிறைந்து வெளியே வழிந்துகொண்டிருக்கக் கூடிய அந்த நேரத்தில் அவற்றில் பாதி இடம் காலியாக இருந்தது.

''இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும்!'' என்ருள் மாதங்கி.

''ஒருவேளை புது பஸ் வண்டிகள் அதிகம் தயாரிக்கப்பட்டிருக்கும். அதிக வண்டிகள் விடுகிருர்களோ, என்னமோ!'' என்ருன் வசந்தன்.

''இராது. இருந்தால் அதைப் பற்றிப் பெருமையாகத் தம்பட்டம் போட்டுக்கொண்டிருப்பார்கள். ஒருவேளை நாளைக்குச் சட்டசபையில் யாராவது ஓர் அங்கத்தினர் பஸ்ஸில் இட நெருக்கடியைப் பற்றிக் கேள்விகள் கேட்கப் போகிருரோ என்னமோ?''

''அதற்கெல்லாம் சம்பந்தப்பட்ட மந்திரி பதில் சொல்லத் தயங்க மாட்டார். 'நானே பஸ்ஸில் ஏறிப் போனேன். அதில் ஐந்தாறு பிரயாணிகள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள்' என்று வாய் கூசாமல் சொல்லவரலாம்.''

''ஆமாம்! இப்படி பஸ்கள் பாதி காலியாக வந்தால் கியூ வரிசை என்பதே இல்லாமல் போய்விடுமே. நாம் நின்றுகொண்டிருக்கமுடியாதே. வருஷக் கணக்காக ஏற்பட்டு வந்த ஒரு பழக்கத்தைத் திமர் என்று எப்படி மாற்றுவது?'' என்று மாதங்கி மிகுந்த கவலையுடன் கூறினுள்.

''மாற்றுவதற்கு முதலில் சிரமப்படும்.''


''ஆகையினுலே இன்று ஏதோ பஸ்கள் காலியாய் வருகிறதென்பதற்காக நாம் ஏமாந்து போய் ஏறிப் போய்விடக் கூடாது. கூட்டமிருப்பது போலவும், நாம் கியூ வரிசையில் நிற்பதுபோலவும்தான் எண்ணிக்கொள்ள வேண்டும். நான் அப்படித்தான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆகையால்.....''

''நான் அந்த ரேடியோ டைரக்டர் கதையை முடிக்க வேண்டும் என்று சொல்லி நீர்களாக்கும்'' என்று வசந்தன் தானுகவே கேட்டு விட்டுக் கதையை மேலே தொடர்ந்து சொல்லலானுன்:

''ஒரே ஒரு ராஜ்யத்தின் அந்த ஒரே ஒரு ரேடியோ டைரக்டர் ஒரே ஒரு பெண் பாடியதைக் கேட்ட மாத்திரத்தில் சற்று மயக்கமடைந்தாரா? அப்போது அங்கே வந்த அவர் மனைவி 'நாள் முழுதும் தான் ஆபீஸில் ரேடியோவைக் கட்டிக் கொண்டு அழுதுவிட்டு வருகிறீர்களே? வீட்டில் வந்துகூட அது தானு?' என்று கடிந்துகொண்டே வந்தாள். அந்த வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் ரேடியோ டைரக்டரின் மயக்கம் தெளிந்து விட்டது. அவர் சிரித்துக் கொண்டே அவளைச் சமாதானப்படுத்தினுர்.

அன்று இரவு முழுவதும் அவர் கனவில் அந்த ரேடியோப் பாடகியின் கற்பனை உருவமே காட்சியளித்துக் கொண்டிருந்தது. அடிக்கடி அவள் பாட்டு வேறு காதில் விழுந்து அவர் மனத்தை என்னமோ செய்துகொண்டிருந்தது. மறுநாள் காரியாலயத்துக்குச் சென்றதும் புதிதாகப் பாடுபவர்களின் ஜாபிதாவைப் பார்த்து அந்தப் பெண்ணின் வீட்டு விலாசத்தைக் குறித்துக் கொண்டார். பிறகு எப்போது அஸ்தமிக்கப் போகிறது என்று பல்லைக் கடித்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தார்.

இரவு சுமார் ஏழு மணிக்கு அவர் பார்வதம் என்ற அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்ருர். அவள் ஒரு சந்திலுள்ள ஒரு சிறிய வீட்டில் குடியிருந்தாள். அவர் அவளைப் பார்த்தபோது அவளது உடலமைப்பு, தோற்றம் முதலியவற்ருல் அவரது மனம் பாதிக்கப்படவே இல்லை. அவள் ஒல்லியாய், உயரமாய், கறுப்பாய் இருந்தாள். மேடான நெற்றி, இரட்டைத் தவடை. ஆனுல் அவள் புன்னகை புரிந்த வண்ணமிருந்ததால் அவ்வளவு விகாரமாய்க் காணப்படவில்லை.



''நேற்று மாலை 6-7லிருந்து 6-26 வரையில் பாடிய குமாரி பார்வதம் என்பவர் நீங்கள் தானே?'' என்று டைரக்டர் விசாரித்தார்.

''ஆமாம்!'' என்றாள் பார்வதம்.

''நீங்களேதானே, சந்தேகப்பட வேண்டிய தில்லையே?'' என்று டைரக்டர் கேட்டார்.

''நானேதான். சந்தேகப்பட வேண்டியதே யில்லை'' என்று சிரித்துக்கொண்டே கூறினாள் அந்தப் பெண்.

''பாட்டு ரொம்ப நன்றாக இருந்தது'' என்று டைரக்டர் புகழ்ந்தபோது பெருமை யாலும் வெட்கத்தாலும் அவள் முகம் சிவந்து அழகாகத் தோன்றினாள்.

''நான் ஒரு பத்திரிகை நிருபர். தாங்கள் ரேடியோவில் பாட நேர்ந்ததைப் பற்றிய விவரங்களையெல்லாம் சொல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

''ஓ!'' என்று கூறி அவள் சொன்னாள்:

''நான் போன வருஷம்தான் பி. ஏ. பரீட்சை கொடுத்தேன். வேலை தேடிக்கொண் டிருக்கிறேன். அதற்கு நடுவில் ரேடியோவில் பாட வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. பால்யத்தில் சில வருஷங்கள் பாட்டுச் சொல் லிக்கொண்டேன். என் தந்தை திடீரென்று இறந்துவிட்டதால் நானும் என் தாயாரும் சாப்பிட்டுக் காலம் தள்ளச் சிரமப்பட்டோம். எங்கே பாட்டுச் சொல்லிக் கொள்வது? ஆனால் இலவசக் கச்சேரிகளை இப்படிக் கேட்டு வரு வேன். சங்கீத சம்பந்தமான புத்தகங்களை யும் படித்து வருவேன். நான் பரீட்சையில் அநேகமாக முதலாகத் தேறுவேன். ஆகை யால் உபகாரச் சம்பளம் பெற்றுப் படிப்பு மட்டும் படித்து வந்தேன்.

எல்லோரும் என் குரல் நன்றாக இருக்கிற தென்றும், பாட்டு உணர்ச்சி இருக்கிறதென் றும் சொல்லி வந்தார்கள். என்னுடன் படித்த பெண்கள் இரண்டு பேர் ரேடியோவில் பாடு கிறார்கள்'' என்று பார்வதம் சொன்னபோது, ''அவர்கள் யார்?'' என்று கேட்டார். ''ஜக் கம்மா என்கிறவள். அவள் ஒரு ஹை கோர்ட் ஜட்ஜின் பெண். இந்து பாலா என் கிறவள் அப்பா ஒரு லட்சாதிபதி'' என்றாள்.

''சரிதான். அப்புறம்?'' என்று டைரக்டர் மேலே விஷயத்தைச் சொல்லச் சொன்னார்.

''நான் ரேடியோவில் பாட விரும்புகிறேன் என்று ஒரு மனு எழுதிப் போட்டேன். பத்து நாளைக்கெல்லாம் ஓர் அச்சடித்த நமூனா தபா லில் வந்தது. அதில் யாரிடம் பாட்டுக் கற்றுக் கொண்டேன், எத்தனை வருஷங்கள் கற்றுக் கொண்டேன் என்ற விவரங்கள் கேட்டிருந் தது. அந்தக் கேள்விகளுக்கு நேரே கோடிழுத்து விட்டேன். எனக்குத் தெரிந்த முப்பது பாட்டுக்களின் ஜாபிதா அனுப்ப வேண்டுமென்றிருந்தார்கள். அதை எழுதி நமூனாவை அனுப்பி வைத்தேன். நான் இதற் குப் பதில் வருமென்று எதிர்பார்க்கவில்லை. ஆனால் நான்கு மாதங்கள் கழித்துப் பதில் வந்தது. 'பூர்வாங்கப் பரீட்சை'க்கு ஒருநாள் வரச் சொல்லி யிருந்தார்கள். ரேடியோ காரியாலயத்துக்குப் போனேன். அதற்கு 'ஆடிஷன்' என்று பெயர். அதற்கு வந்திருந் தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் எண் கொடுத்தார்கள். எனக்கு நான்காவது எண். ஒரு ரேடியோ காரியாலயச் சிப்பந்தி 'நான்கு' என்று கூப்பிட்டதும் என்னை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒருவர் தம் புராவை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந் தார். ''என்ன சுருதி?'' என்று விசாரித்தார். ''ஐந்தரை'' என்று சொன்னேன். உண்மை யில் எனக்கு ஐந்து கட்டை சுருதிதான். ஆனால் ரேடியோவில் தம்புரா சுருதி பாக்கி சுருதிகளை விடக் கொஞ்சம் குறைவாகவே இருக்கும் என்று கேள்விப்பட்டிருந்தேன். தம்புராக் காரர் சுருதி சேர்த்து வைத்துவிட்டுப் போய்ச் சில நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பி வந்தார். என்னை அழைத்துக் கொண்டு போனார். அங்கே என்னை ஒரு மைக்கின் முன் உட் காரச் சொன்னார். பிறகு நான்கு என்று என் எண்ணை மைக்கில் சொன்னார். எதற்காகத் தெரியுமா? பாட்டைப் பரீட்சிக்கப் போகிற வர்கள் பக்கத்தில் இன்னோர் அறையில் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் யார், யார் என்று நமக்குத் தெரியாது. பாடப் போகிறவர்கள் யார் என்றும் அவர் களுக்குத் தெரியாதாம். பாரபட்சமில்லாமல் பாட்டை எடை தூக்கிப் பார்த்து நியாயம் வழங்குவதற்காக இப்படி ஏற்பாடு செய் திருக்கிறார்களாம்.

தப்பியது



எழுபது வயதான அன்னி ஒயிட் என்ற அம்மையார் சினிமாவுக்குப் போய்விட்டு இரவு நேரம் கழித்துத் திரும்பிய போது வீட்டில் ஒரு காட்சியைக் கண்டு திடுக்கிட்டார். நான்கு திருடர்கள் அவருடைய சாமான்களைச் சூறையாடிக் கொண் டிருந்தனர். உடனே அந்த அம்மையார், ''அதோ அந்த இருதய நோய்க்கான மாத்திரைகள் உள்ள டப்பாவை இப்படிக் கொடுங்கள், சாப்பிட வேண்டும். இல்லையேல் இப் பொழுதே இருதய நோய் வலி ஏற்பட்டுச் செத்துப் போய் விடுவேன்!'' என்று துரிதப்படுத்தினார். திருடர்கள் அம் மையார் கேட்ட டப்பாவைக் கொடுத்துவிட்டுத் தங்களுக்கு வேண்டிய சாமான்களைச் சுருட்டிக் கொண்டு போனார்கள். பிறகு போலீஸில் எழுதிவைத்த அம்மையார், ''நல்ல காலம், நானும் என் கணவரும் சேமித்து வைத்த 170 டாலர் அந்த டப்பாவில்தான் இருந்தது'' என்றார்.

எப்படி ?

சுருதி போடுபவர் என்னைச் சொல்லி விட்டு, என்னைப் பார்த்துத் தலையை ஆட்டினார். அதற்குப் பாடலாம் என்று அர்த்தம். நான் ஒரு ராகத்தை ஆலாபனம் செய்து, கீர்த்தனையை நிரவல் செய்து ஸ்வரம் பாடிக் காண்பித்தேன். பிறகு சுருதி போடுபவர் போதும், எழுந்து போகலாம் என்று ஜாடை காண்பித்தார். நான் எழுந்து போனேன்.

பிறகு ஆறு மாதங்கள் கழித்து ஒரு நாள் ரேடியோ ஆபீஸிலிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் என்னை ஒரு 'சங்கீத பானல்' முன் ஆஜராகும்படி சொல்லி யிருந்தது. 'சங்கீத பானல்' என்றால் சங்கீதத் துறையில் பிரபலமான மூன்று நான்கு பேர்கொண்ட கோஷ்டி. 'ஆடிஷன்' திருப்திகரமாக இருந்தால்தான் இந்த இரண்டாவது பரீட்சைக்கு வரும்படி கூப்பிடுவார்களாம். முன் மாதிரியே சுருதி போடுபவருடன் ஒரு தனி அறையில் மைக் முன் உட்கார்ந்தேன். 'எட்டு' என்று சுருதி போடுபவர் சொன்னார். என் பரீட்சை எண் ஒன்பது ஆயிற்றே. தவறிப்போய்ச் சொல்லி விட்டாரென்று நினைத்தேன். ஆனால் அதைப் பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. அப்போது பாடிய மாதிரியே ஒரு ராகத்தை ஆலாபனம் செய்து அதில் ஒரு கீர்த்தனையை நிரவல் செய்து ஸ்வரங்கள் பாடிக் கொண்டிருந்தேன். நடுவில் மூச்சுவிட நிறுத்தியபோது 'சிம்மேந்திர மத்யமம்'' என்று அசரீரி கூறுவதுபோல் காதில் விழுந்தது. இன்னோர் அறையில் மறைந்துகொண்டு பரீட்சிக்கும் கோஷ்டியில் யாரோ நான் அதைப் பாடிக் காட்டவேண்டுமென்று அதன் பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ராகத்தைப் பாடினேன். பிறகு சுருதி போடுபவர் நான் பாடியது போதுமென்று ஜாடை காட்டினார். பிறகு வீட்டுக்குக் கிளம்பிவிட்டேன்.

நான்கு மாதங்கள் கழித்து ரேடியோவில் பாடுவதற்காக ஓர் ஒப்பந்த நமூனா வந்தது. அதில் கையெழுத்திட்டு அனுப்பினேன். அதில் குறிப்பிட்டிருந்த தேதியன்றுதான் பாடினேன்'' என்று பார்வதம் கூறி முடித்தாள்.

ரேடியோ டைரக்டர் சற்று யோசனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு ''சங்கீத பானலிலிருப்பவர்கள் யார் யாரை உங்களுக்குத் தெரியும்?'' என்று கேட்டார்.

''ஒருவரையும் தெரியாது!'' என்றாள்.

''அவர்களுக்குச் சிபாரிசு செய்யக் கூடியவர்கள் யாரைத் தெரியும்?''

''எனக்குச் சிபாரிசு செய்பவர்கள் யாருமில்லை. நான் ரேடியோவுக்கு மனுப்போட்டதைப் பற்றி அம்மாவுக்குக் கூடச் சொல்லவில்லை. பாடச் சொல்லிக் கடிதம் வந்த பிறகுதான் தெரிவித்தேன்'' என்றாள் பார்வதம்.

''நீங்கள் பானல் பரீட்சைக்குப் பாடப் போன தினமன்று இன்னும் யார் வந்திருந்தார்கள்?'' என்று டைரக்டர் கேட்டார்.

''பார்வதம் என்று என் பெயரேயுள்ள இன்னொரு பெண்ணும் வந்திருந்தாள். அவள் ஒரு பெரிய சங்கீத சபைத் தலைவரின் பெண். அவளுக்கு எட்டாவது நம்பர்'' என்று பார்வதம் சொன்னாள்.

''அவள் பாடுகிறாளாக்கும்?'' என்று டைரக்டர் விசாரித்தார்.

''இல்லை என்று கேள்விப்பட்டேன். அவளைப் பொறுக்கி எடுக்கவில்லையாம்!'' என்றாள்.

''ஒரே ஒரு சிறு விஷயம். அதை மட்டும் சொல்லிவிடுங்கள். அந்தப் பெண் உங்களோடு பேசினாளா?'' என்று கேட்டார்.

''இல்லை. தொண்டை சரியாக இல்லை போலிருக்கிறது. 'லொக், லொக், லொக்' என்று இலேசாக இருமிக் கொண்டிருந்தாள்.

''கொண்டிருந்தாள்என்றால்அடிக்கடியா?''

''ஆமாம், பயிற்சி செய்வது போல் இருந்தது. அதுவும் அந்த 'லொக்' கணக்காக மூன்று முறை இருந்தது. ....''

''அதைக் கேட்டுக் கேட்டு உங்கள் தொண்டையும் பாதிக்கப்பட்டிருக்குமே!'' என்று டைரக்டர் வேடிக்கையாகக் கேட்டார்.

''ஆமாம்! நீங்கள் சொன்னதும் ஞாபகம் வருகிறது. பாட ஆரம்பிக்கு முன்னர், தொண்டையைச் சரிப்படுத்திக் கொள்வதற்காகக் கனைத்துப் பார்த்துக் கொண்டேன். அப்போது 'லொக், லொக், லொக்' என்று இருமல் வந்தது'' என்றாள்.

இதுவரை கவலையுடனிருந்த டைரக்டர் முகத்தில் மகிழ்ச்சி தோன்றத் தொடங்கியது. ''விஷயம் புரிந்துவிட்டது. குமாஸ்தா தவறிப்போய் உங்களை அந்தப் பார்வதத்துக்குப் பதிலாக அனுப்பிவிட்டார். அவள் பரீட்சை எண்ணையும் சொல்லிவிட்டார். நீங்கள், 'லொக், லொக்' என்று மூன்று தரம் கனைத்ததை வைத்துக் கொண்டு சங்கீத பானலைச் சேர்ந்த ஒருவர் அந்தப் பார்வதம்தான் பாடுகிறாளென்று உங்களைத் தேர்ந்தெடுத்துப் பெரிய கிரேடும் கொடுத்துவிட்டார்'' என்று டைரக்டர் கூறினார்.

இதைக் கேட்டு ஏழைப் பெண் பார்வதம் ஆச்சரியப்பட்டாள்.

''அந்தப் பரீட்சகருக்கு அந்தப் பெண்ணின் எண் எப்படியோ தெரிய வந்திருக்கும். தவிர, மூன்றுதரம் லொக் சப்தம் கிளம்புவது அவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட சங்கேதமாக இருக்கும். ஆகையால் நீங்கள் தவறாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டீர்கள். இது என் உத்தியோகத்துக்குப் பலவிதங்களில் ஆபத்தை விளைவிக்கும்.''

''அட, கடவுளே!'' என்றாள் பார்வதம்.

''இவ்வளவு நன்றாக, சாஸ்திரோக்தமாக, கம்பீரமாகப் பாடுகிற பெண் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டாள் என்ற கேள்வி பிறக்கும். தங்கள் பாட்டைக் கேட்டவர்கள், பிறகு அதே மாதிரி எல்லோரும் பாட வேண்டும் என்று கிளர்ச்சி செய்வார்கள்! அதற்கு நான் எங்கே போவது? ரேடியோ ஸ்தாபனத்தின் நல்ல பெயர், கெட்ட பெயர் இரண்டுக்கும் நான் பொறுப்பே யன்றி, நல்ல பாடகர்களைப் பொறுக்கி எடுக்கவோ, அல்லது அவர்கள் முன்னேற வழி செய்வதற்கோ எனக்கு அதிகாரம் கிடையாது. நீ தவறாகப் பாடப் பொறுக்கி எடுத்துவிடப்பட்டது தெரிந்ததும்

சம்பந்தப்பட்ட பரீட்சகர் பைத்தியம் பிடித்துப் போயிருப்பார்'' என்றார்.

''இதுமாதிரியெல்லாம் நடப்பதுண்டா?'' என்று பார்வதம் விசாரித்தாள்.

''ஒரே ஒரு சம்பவம் சொல்கிறேன். ஒரு பிரபல மிருதங்க வித்வான். அவரது கிரேடை உயர்த்துவதற்காகத் திரை மறைவில் பரீட்சை நடந்தது. ஆனால் அவருக்கு உயரவில்லை. ஏனெனில் அவர் வாசிக்க வேண்டிய சமயத்தில் ஒரு கற்றுக்குட்டி வித்வான் வாசித்தார். பரீட்சகர்கள் அந்தப் பிரபல வித்வான்தான் வாசிக்கிறாராக்கும் என்று நினைத்துக் கொண்டு அந்தக் கற்றுக்குட்டியின் கிரேடை உயர்த்தி விட்டார்கள். பிறகு திருடனுக்குத் தேள் கொட்டியது போல் விழித்தார்கள். அது கிடக்கட்டும். தயவு செய்து நீ ஒன்று செய்ய வேண்டும்!'' என்று டைரக்டர் கேட்டுக் கொண்டார்.

''சொல்லுங்கள்!'' என்றாள் பார்வதம்.

''நீ நன்றாகப் பாடிச் சங்கீத உலகத்துக்குக் கெட்ட பேரை ஏற்படுத்திவிடக் கூடாது. தாங்கள் ஏமாற்றப்பட்டது தெரிந்த பரீட்சகர்கள் அடுத்த ஜன்மத்தில் கூட உனக்கு கிரேடை உயர்த்த மாட்டார்கள். உனக்கு ரேடியோவில் பாடச் சந்தர்ப்பமும் கிடைக்காது. ஆகையால் நீ பாட்டை மறந்துவிட்டு நல்ல வேலையில் அமர்ந்து விடு. நீ பட்டதாரியாதலால் ஆரம்பச் சம்பளம் இருநூறு ரூபாய்க்கும் மேலேயே கிடைக்கும்'' என்றார்.

''எனக்கு யார் வேலை கொடுப்பார்கள்? இதுமாதிரி ஏதாவது தவறிப்போய் நேர்ந்தால்தான் உண்டு. தாங்கள் சிபாரிசு செய்கிறீர்களா?'' என்று அவள் கேட்டாள்.


''ஏன், நானே வேலை கொடுக்கிறேன். நான் ரேடியோ டைரக்டர். நீ பாட்டுக்கு ஒரு தலை முழுகிவிட்டு வேலையை ஒப்புக்கொண்டு என்னைக் காப்பாற்று!'' என்றார்.

''சரி, ஸார்!'' என்று பார்வதம் ஒப்புக் கொண்டாள். பிறகு 'லொக், லொக் லொக்' என்ற சப்தம் அவள் தொண்டையிலிருந்து கிளம்பிற்று.


வசந்தன் கதையைக் கூறி முடித்துவிட்டுச் சிறிது ஓய்வெடுத்துக் கொண்டான்.

மாதங்கியின் உதடுகள், 'பாவம், பார்வதம்' என்று முணு முணுத்து விட்டு ஓய்ந்தன. அவள் கதையைத் தொடங்குவதாகத் தோன்றவில்லை. ''சரி, நீ சொல்லாவிட்டால் போயேன். நானே சொல்லுகிறேன். க்யூவில் வேண்டியவர்கள் ஒருவருக்கொருவர் இடம் மாறி நிற்பதில்லையா? அது போல!'' என்று ஆரம்பித்தான் வசந்தன்.

''ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு மாப்பிள்ளை இருந்தான். அவன் ''மாப்பிள்ளை முறுக்கு!'' என்பதில் அந்த முறுக்கைப் பற்றி ஆராய்ச்சி செய்து பார்த்தவன் போல் நடந்துகொண்



டான். தன் மாமனார் வீட்டுக்குச் செல்லும் போது தலையைக் கீழே குனியவே மாட்டான். ஒரு நாள் அவன் அப்படி விறைப்பாக வந்த போது வாசற்படி தலையில் இடித்துவிட்டது.'' வசந்தன் இப்படிக் கூறிக் கொண்டிருந்த போது இரண்டு பஸ்கள் கால் பாகம் காலியாக வரவே இருவரும் தங்கள் தங்கள் வண்டியில் ஏறிச் சென்றனர்.



அட்டைப்படக் கதை



வெயிலின் கடுமையைப் பார்த்தால் ஸெப்டம்பர் மாதம் போலவே இல்லை. அஹமதாபாதில் வெயில் ஆளை வறுத்தெடுத்து விடும் என்று நாங்கள் கேள்விப்பட்டிருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் வெயில் என்றபோது நான் கோடை வெயிலைத்தான் கற்பனை செய்து கொண்டேனே தவிர, ஸெப்டம்பர் மாதத்தில் இப்படி அனலை வாரிக் கொட்டும் என்று நினைக்கவேயில்லை.

காலை மணி பதினொன்று. வீட்டு வேலை முடிந்தாயிற்று. கணவர் அலுவலகம் சென்று விட்டார். குழந்தைகள் பள்ளிக்கு ஓடிவிட்டார்கள். இனி மாலை ஐந்து மணி வரையில் ஓய்வுதான். வராந்தாவை அடுத்த அறையில் தொங்கிய ஊஞ்சல், ''வா, வா'' என்று அழைத்தது. அதில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

ஊஞ்சலை வீசி ஆட்டினேன். காற்று உடல் மேல் பட்ட போது இதமாக இருந்தது. குஜராத்தி மக்களுக்கு ஊஞ்சல் மேல் உள்ள பாசத்தின் காரணம் விளங்கினாற்போலிருந்தது. அந்தக் கணம். அவர்கள் ஊரில் இப்படிப்பட்ட வெயில் இருக்கும்போது, ஊஞ்சலாடுவது குளுமையை ஏற்படுத்துகிறதே. மின்விசிறியின் தயவில்லாமல்!

''டப் டப்'' என்ற சத்தம். அடுத்த பிளாக்கில் வேலைக்காரி துணி துவைக்கிறாள். ''கொட கொட'' என்ற ஒலி. மேல் பிளாக்கில் ஜுரமாய்ப் படுத்திருந்து எழுந்த சிறுவன் பம்பரம் விடுவதுகூடக் கேட்கிறதே, இந்த ஊஞ்சலின் சத்தத்தையும் மீறிக் கொண்டு !

அப்போதுதான் என் செவிகளில் விழுந்தது. ''ஜல்... ஜல்....'' என்ற மற்றோர் ஒலி.......

''நம் ஊர் மாட்டு வண்டிச் சத்தம் மாதிரி இருக்கிறதே!'' என்று எண்ணியவளாய் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். வண்டிதான். ஆனால் மாட்டு வண்டியல்ல, மனித வண்டி.... ''ஹாண்ட் லாரி''! என்று இங்கே கண்ணியமாய் அழைக்கப்படும் டயர் பொருத்தப்பட்ட கட்டை வண்டியை இழுத்து வருவது....? கணவன் மனைவி என்று யூகித்தேன்... அருகே ஸ்கூட்டரில் யாரோ ஒருவர் வந்து கொண்டிருந்ததும் தெரிந்தது.

கட்டிலும் பீரோவும் நாற்காலியுமாக வண்டி நிறையச் சாமான். சட்டென்று எனக்கு ஓர் ஞாபகம் வந்தது. எதிர் பிளாட்டில் இன்று யாரோ குடிவருகிறார்கள் என்பது. பஞ்சாபிகளாம். அஹமதாபாதிலேயே வேறு எங்கோ இருந்தவர்கள் இங்கு வருகிறார்களாம்... ஸ்கூட்டர் ஆசாமிதான் அந்தப் பஞ்சாபிக்காரராக இருக்க வேண்டும் என்று புரிந்துகொண்டேன். அவர் அவசரமாக எதிர்



பிளாட்டை அடைந்து ஸ்கூட்டரிலிருந்து இறங்கி, பூட்டப்பட்டிருந்த கதவைத் திறந்து விட்டார். பின், வராந்தாவுக்கு வந்து திருப்தியோடு தம்மைச் சுற்றிப் பார்க்கலானார். நல்ல வீடு கிடைத்து விட்ட திருப்தி நிலவியது அவர் முகத்தில்.

வண்டி இழுத்து வந்த பெண் மீது என் கவனம் லயித்தது. அவளுக்கு என்ன வயது இருக்கும்? இருபதிலிருந்து முப்பது வரை என்ன வேண்டுமானாலும் இருக்கலாம் என்று தோன்றியது எனக்கு. இடுப்பில் தழையக் கட்டியிருந்த பாவாடை...... சின்னஞ்சிறு சோளி.... ஒரு துணியை இடையில் செருகி முதுகுப் புறமாகத் தலைமேல் பொருத்தி, முன் பக்கம் தொங்க விட்டிருந்தாள். தோளுக்குக் கீழ் இரு கைகளிலும் சுமார் இருபது மஞ்சள் நிற வளையல்கள். கழுத்தில் வளைவு நெளிவற்ற ஏதோ தடித்த ஆபரணம்..... இடது மூக்கில் மூக்குத்தி.

எத்தகைய அழகு இந்த ஏழைப் பெண்ணிடம் அடைக்கலம் புகுந்து விட்டது! செதுக்கி எடுத்த சிற்பம் போன்ற உடலமைப்பு. கருணையே உருவான முகம்; கருங்கேசம் பிடிவாதமாக நெற்றியில் புரண்டது. புருவங்களின் வளைவும், நயனங்களின் கருமையும், மூக்கின் தீர்க்கமும், உதட்டின்சிவப்பும் நான் அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அவளோ தன் அழகைப்பற்றிய சிந்தனையோ, ரசனையோ இல்லாமல் வண்டியை இழுத்து வருவதிலேயே கவனமாய் இருந்தாள்.

ஆயிற்று. வண்டி எதிர் பிளாட்டை அடைந்தாயிற்று. இருவருமாக வண்டியை நிறுத்தி விட்டு அதிலிருந்த சாமான்களை ஒவ்வொன்றாக எடுத்துத் தரையில் வைக்கலானார்கள். அந்தப் பெண் திரும்பி, நிமிர்ந்துகுனிந்த வேகத்தில் அவள் தலைமேல் இருந்த துணி அகன்றது. வெறும்

தாய்தான்!

ருக்மிணி பார்த்தசாரதி



முதுகின் மேல் சாட்டைப் பின்னல். ஆனால் அவள் 'பாக்லெஸ்' சோளி அணிவது கவர்ச்சிக்காக அல்ல, சிக்கனத்துக்காகத்தான்.

அந்தப் பெண்ணிடமிருந்து அகல மறுத்த கண்களைப் பலவந்தமாக எடுத்து அந்த வாலிபனைப் பார்த்தேன். கச்சம் வைத்துக் கட்டிய அழுக்கு வேஷ்டி, காக்கி ஷர்ட், தலையில் கட்டியிருந்த சிவப்புத் துணி... என் கவனம் மீண்டும் அந்தப் பெண்ணிடமே திரும்பிற்று. பார்க்கப் பார்க்க நெஞ்சை நிறைக்கும் அழகு... திகட்டாத திவ்ய அழகு!

நான் என்னை மறந்து பார்த்துக் கொண்டே நின்றேன்....

வண்டியைக் காலி செய்து விட்டார்கள். சாமான்களையெல்லாம் எதிர் பிளாட் வராந்தாவில் சேர்த்தாயிற்று. அவன் வண்டியின் முன் பக்கம் வந்து நின்றுகொண்டு அவளைப் பார்த்தான். அவள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அவன் பக்கத்தில் போய் நின்றாள். இருவரும் குனிந்து வண்டியைத் தூக்கி நிறுத்தி இழுத்துச் சென்றார்கள்.

நான் மறுபடியும் ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தேன். உட்கார்ந்ததுதான் தாமதம்; வாசல் மணி அலறியது. எழுந்து சென்று கதவைத் திறந்தேன். மேல் 'பிளாக்'கில் வசிக்கும் பெண் வந்திருந்தாள். ''வாருங்கள்'' என்று அவளை வரவேற்றேன்.

இருவரும் ஊஞ்சலில் வந்து அமர்ந்தோம்.

''எதிர் பிளாட்டில் சாமான்கள் வர ஆரம்பித்து விட்டாற் போலிருக்கிறதே!'' என்று நான் பேச்சை ஆரம்பித்தேன்.

''ஆமாம்.... பஞ்சாபிகள் வருகிறார்கள். கணவன், மனைவி இரண்டே பேர்.... எனக்குத் தெரியும் அவர்களை....''

''அப்படியா?''

''மிகவும் நல்லமாதிரி..''

''ஓஹோ.... ஹாண்ட் லாரியில் கொஞ்சம் சாமான் வந்தாகி விட்டது. மற்றதைச் சாதாரண லாரியில் அனுப்புகிறார்களோ என்னவோ...!'' என்றேன்.

''அதெல்லாம் இல்லை. அவர்கள் வீட்டில் அப்படி அதிகமாகச் சாமான்கள் கிடையாது. ஊர் ஊராகச் செல்ல வேண்டிய அரசாங்க உத்தியோகமாயிற்றே! ஹாண்ட் லாரியிலே இன்னும் இரண்டு தடவை அவற்றை ஏற்றி அனுப்பி விடுவார்கள்....''

இந்தச் செய்தி எனக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது. அந்த அழகிய பெண்ணை மறுபடியும் பார்க்கும் வாய்ப்புக் கிட்டுமே !

அதன் பிறகு ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு அவள் விடைபெற்றுக் கொண்டாள். மணி இரண்டு. நான் ரேடியோவைத் திருப்பிவிட்டுக் கையில் ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டேன்....

''ஜல்....ஜல்....'' இன்னிசை போல் அந்த ஒலி என் செவிகளில் பாய்ந்தது...புத்தகத்தை அப்படியே போட்டுவிட்டு ஜன்னலருகே ஓடினேன். ஆம்... அவர்களேதான். பாவம்... இந்தப் பாதம் பொரியும் வெயிலில் செருப்புக்கூட இல்லாமல்.... அவனாவது ஆண்மகன். இயற்கையாகவே இன்னும் கரடு முரடாக அமைந்த பாதங்கள்...ஆனால் அவள்? வீட்டுக்குள்ளேயே செருப்போடு நடக்கும் பெண்களை நினைத்தபோது ஏனோ என்னுள் ஆற்றாமை பொங்கியது.

எதிர் பிளாட்டை அணுகியதும் அவர்கள் முன்போல் வண்டியை நிறுத்தினார்கள். அவள் நெற்றி வேர்வையைச் சுண்டி

எறிந்துவிட்டுத் தன்னைச் சுற்றிப் பார்த்தான். — என்ன அதிர்ஷ்டம்! என் வீட்டை நோக்கி நடந்து வந்தான்!

''பஹன்!'' அவள் குரல் தெளிவாக எழுந்தது.

''என்ன?'' என்றவாறு நான் அவசரமாக வராந்தாவுக்கு வந்தேன்.

''டண்டா பானி ஆலோ!''

'பாவம்! வெயிலில் வந்த களைப்பு!' என்று எண்ணியவாறு பானை ஜலமாக ஒரு செம்பு எடுத்து வந்து கொடுத்தேன்.

ஆவலோடு அதை இடக் கையால் வாங்கி வலக் கையில் ஊற்றிக் குடித்தாள். பிறகு செம்பை என்னிடம் நீட்டியவாறு, ''இன்னும் கொஞ்சம்!'' என்றாள் குஜராத்தியில்.

நான் மறுபடியும் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தேன். அவள் செம்பை எடுத்துக் கொண்டுபோய்த் தன் கணவனிடம் நீட்டினாள். அவன் தாகம் தீர நீரைப் பருகியதும் செம்பை என்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, நன்றி தெரிவிக்கும் விதத்தில் முறுவலித்துவிட்டு, வண்டிக்கருகே சென்று சாமான்களை இறக்கலானாள்.

அவள் அழகை வியந்தவாறு நான் என்னை மறந்து நின்றிருந்தபோதுதான், அமுதவெள்ளத்தில் பாய்ந்த நஞ்சு போல் ஒரு சின்னக் குழந்தையின் அழுகுரல் வண்டி நின்றிருந்த திசையிலிருந்து திடீரென்று எழுந்தது.

குழந்தை எங்கே? வண்டி மேலோ சாமான் நிறைந்திருந்தது. முதலில் குழம்பி நின்றவள் வண்டிக்கடியில் குனிந்து பார்த்தேன். அங்கே இரண்டு கொக்கிகளில் தொங்கிய துணித் தூளியில் காலை உதைத்து வீறிட்டு அழுது கொண்டிருந்தது ஒரு சின்னஞ்சிறு குழந்தை.

அந்தப் பெண்ணோ குழந்தையின் அழுகை தன் செவிகளில் விழாதவள் போல் வண்டியிலிருந்த சாமான்களை இறக்குவதிலேயே கருத்தாக இருந்தாள்.

அழுகை கணத்துக்குக் கணம் வலுத்தது. நான் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். அவள் குழந்தையை எடுத்து அணைத்துப் பாலூட்டுவாள் என்று.. அவளோ குழந்தையினருகில் நெருங்கக்கூட இல்லை. கடைசியில் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நான், ''ஏ பெண்ணே, குழந்தை உன்னுடையதுதானே?'' என்றேன்.

என் பக்கம் திரும்பி, ''ஆமாம்!'' என்று கூறிவிட்டு மறுபடியும் சலனமற்று அவள் தன் வேலையில் ஈடுபட்டாள்.

''அழுகிறதே! காதில் விழவில்லையா?''

''அதுதான் கத்துகிறதே! விழாமலென்ன?''

''பின்னே கையில் எடுத்துக்கொள்ளேன்!''

''அது அப்படித்தான் அழும்.... ராட்சசன்... அழட்டும்!'' என்று முகத்தில் கடுமை நிறையச் சொன்னாள் அவள்.

''பெற்றவள் இப்படிச் சொல்கிறாயே!''

''அழுது அழுது தொண்டை வலித்தால் தானே நிறுத்துகிறான்!'' என்றாள் அவள், ஏதோ பெரிய தத்துவத்தை விளக்கிவிட்ட திருப்தியுடன்.

எனக்கு என்ன பதில் சொல்வதென்றே புரியவில்லை. 'வெளித் தோற்றம் அழகே உருவாய் அமைந்தவளின் மனம் அழகின் சாயையே அற்று இருக்கிறதே!' என்று நினைத்தபோது இனம் விளங்காத ஆத்திரம் பொங்கியது.

குழந்தை அழுதுகொண்டே யிருந்தது. எல்லா பிளாக்குகளிலிருந்தும் பெண்கள் கவலையோடு எட்டிப் பார்த்தார்கள். பரிதாபமாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கையைப் பிசைந்தார்கள். குழந்தையின் அழுகைக்குக் கனியாத பெண் மனம் அந்தத் தாயினுடையது ஒன்றுதான் என்று எனக்குத் தோன்றியது.

குழந்தை எப்படி வீறிட்டழுகிறது! பெற்றவளால் எப்படி இதைச் சகிக்க முடிகிறது?

வண்டியைக் காலி செய்து விட்டார்கள். முன்போல் சாமான்களை எதிர் வீட்டு வராந்தாவில் வைத்தாகி விட்டது. இருவரும் வண்டியைத் தூக்கி இழுத்துச் சென்றார்கள். ஜல்...ஜல்...என்ற ஒலியை மீறிக் குழந்தையின் அழுகுரல் என் செவிகளில் பாய்ந்தது. அந்தக் கணம் அப்பெண் விகாரமே வடிவமாக என் கண்களில் பட்டாள்.

ஹார்லிக்ஸ் செய்யும் நன்மைக்கு ஒரு உதாரணம்.



மகனையும் மருமகளையும் பார்த்து இரண்டு வருஷங்களாயின. ஆனால் ஆவலோடு வந்த நான் கண்டதென்ன! வீடு ஒரே அலங்கோலம். குழந்தைகள் கவனிப்பாரற்றுக் கிடந்தனர். எல்லா வேலையையும் நானே செய்யவேண்டியதாயிற்று. ஒரு நாள் மருமகள் சீதாவே என்னிடம் சொன்னாள்: "அம்மா இப்பொழுதெல்லாம் எனக்கு ஒரே சோர்வும் அசதியுமாய் வீட்டு வேலைகளைச் செய்யவே முடிகிறதில்லை. நீங்கள் தான் பரிகாரம் சொல்லவேண்டும்."



சீதாவை டாக்டரிடம் அழைத்துப் போனேன். டாக்டர் கேள்விமேல் கேள்வியாகக் கேட்டு விட்டுப் பிறகு சொன்னார்: "சீதாவுக்குக் கவலைப் படும்படி ஒன்றுமில்லை. அவளுக்குத் தேவையான போஷாக்குச் சரிவர கிடைக்காததினால் சோர்வடைகிறாள். தினமும் தவறாமல் ஹார்லிக்ஸ் பருகினால் எல்லாம் விரைவில் சரியாகும்."



ஹார்லிக்ஸ் நல்ல பலனை அளித்தது. மிகச் சிறந்த சத்துள்ள பாலுடன் கோதுமை மாவு, மால்டட் பார்லி இவற்றின் போஷாக்குச் சத்தும் சேர்ந்ததுதான் ஹார்லிக்ஸ். சில வாரங்களுக்குள் சீதா பழையபடி சுறுசுறுப்புடன் வீட்டு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தாள். ஹார்லிக்ஸ் ஒருபோதும் பலனளிக்கத் தவறுவதேயில்லை.



ஹார்லிக்ஸ் அதிக சக்தி யளிக்கிறது!


கவனித்து போங்கள் —
'எவரெடி' டார்ச்
உபயோகியுங்கள்
EVEREADY
EVEREADY
எவரெடி
UNION CARBIDE
யூனியன் கார்பைடு இந்தியா லிமிடெட்

மறுபடியும் ஊஞ்சலைத் தஞ்சமடைந்தேன் நான். மனம் ஏனோ கருண்டுவிட்டது. புத்தகத்தை எடுத்துப் படிக்கக்கூடத் தோன்றவில்லை எனக்கு.

பால்காரனின் சைக்கிள் மணி அலறியது. பால் பாத்திரத்தோடு நான் வராந்தாவுக்கு வந்தேன்.. பக்கத்து வீட்டுச் சுவர்க் கடிகாரம் ஐந்தடித்து ஓய்ந்தது. இனி குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பி விடுவார்கள். பாலோடு உள்ளே செல்ல நான் அடிவைத்த போது தூரத்தில் மீண்டும் 'ஜல் ஜல்' என்ற ஓசை எழுந்தது. திரும்பிப் பார்த்தேன். அதே ஹாண்ட் வாரிதான். அந்த அழுகுரல் மறுபடியும் கேட்டு விடுமோ என்ற அச்சம் சட்டென்று மனத்தைக் கவ்வியது. காதைத் தீட்டி வைத்துக் கொண்டேன். வண்டி அருகே வந்தது. அழுகுரல் இல்லை. ஆடும் வண்டியின் தாலாட்டை அனுபவித்தவாறு காலை உதைத்து விளையாடிக் கொண்டிருந்தது குழந்தை.

இந்தத் தடவை வண்டியில் சாமான்கள் அதிகமில்லை. அப்படியானால் இதுவே கடைசிச் சவாரியாக இருக்கும்.

வண்டியை நிறுத்தினார்கள். தாலாட்டு சட்டென்று நின்ற ஏமாற்றத்தில் சிணுங்கி அழ ஆரம்பித்துவிட்டது குழந்தை. 'அட தெய்வமே! மறுபடியும் இதன் பரிதாபக் குரலைக் கேட்க வேண்டியிருக்கிறதே!' என்று என் நெஞ்சம் கலங்கிற்று.

அழும் குழந்தையைப் பார்த்துவிட்டு அந்தப் பெண் தன் கணவனின் முகத்தை நிமிர்ந்து நோக்கினாள். உடனே அவன் ''சாமான் அதிகமில்லை, நான் இறக்குகிறேன். நீ குழந்தையைக் கவனி!'' என்றான்.

அவள் முகம் மலர்ந்தபோது தெறித்த அழகு இருக்கிறதே, அதன் தரிசனம் என் இதயத்தைச் சிலிர்க்க வைத்தது. ஆவலோடு அவள் தன் குழந்தையை எடுத்துத் தழுவிக் கொண்டாள். அந்த அரவணைப்பில் அதன் அழுகை சிரிப்பாய் மாறியது.

அவள் குழந்தையின் தலைமயிரை வருடியவாறு நிமிர்ந்து என்னைப்பார்த்தாள். ''ஏதோ உனக்கு இப்போதாவது மனசு வந்ததே!'' என்றேன் நான் முறுவலித்தவாறு. எத்தனை முயன்றும் அந்த வாக்கியத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

''அப்படியில்லை, பஹன்ஜி! குழந்தை அழுதவுடனேயே அதை எடுத்துக்கொண்டால் 'அவள் சாமானை எங்கே இறக்கினாள்? குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தாள்!' என்று கூலியைக் குறைத்து விடுவார்கள். இப்போது கூலி கொஞ்சம் கூடவே கிடைக்கும். இல்லாவிட்டால் என்னால் இந்தத் துஷ்டனின் அழுகுரலைக் கேட்டுத் துடிக்காமல் இருக்க முடியுமா?'' என்றவாறு அவள் குனிந்து தன் அருமைக் குழந்தையின் நெற்றியில் முத்தமிட்டாள்.

என் உள்ளம் சட்டென்று கனிந்தது. ''நிற்கிறாயே, இத்தனை நடைக்கப்புறம்! உட்காரேன்!'' என்றேன்.

அவள் பாயில் உட்கார்ந்தாள்.

''இந்த ஒரு குழந்தைதானா உனக்கு?'' என்றேன் நான்.

''இல்லை. வீட்டில் மூன்று பேர்கள் இருக்கிறார்கள்.''

''மூன்றா? உனக்கென்ன வயசு?''

''தெரியாது பஹன்ஜி! நிறைய இருக்க வேண்டும். கல்யாணமாகியே எட்டு வருஷங்களுக்கு மேலாகிறது!'' என்று முறுவலித்தாள் அவள்.

நான் அவள் முத்துப் பற்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் ''மணி என்ன இருக்கும்?'' என்று கேட்டாள்.

''ஐந்தடித்துவிட்டது. ஏன் கேட்கிறாய்?''

''சீக்கிரம் போகவேண்டும்....குழந்தைகள் பசியோடு இருப்பார்கள். ரொட்டி சுட்டுத் தர வேண்டும்... பாவம்...''

நான் சட்டென்று அவளைப் பார்த்தேன். பசி! ஆம். அவள் ஆற்றவேண்டியது இந்தச் சிசுவின் பசியை மட்டும் அல்ல; வீட்டிலுள்ள மூன்று காலி வயிறுகளையும் அவள் நிறைத்தாக வேண்டும். அதற்காக, குழந்தைகளுக்காகப் பாகாய் உருகும் தன் தாய் உள்ளத்துக்கு அவள் விலங்கிட்டுத்தான் ஆக வேண்டும்..., அப்போதுதான் கூலி நிறையக் கிடைக்கும். அவள் தாய் என்பது உண்மை தான். ஆனால் ஏழைத் தாய் என்பது அதை விடப் பெரிய உண்மை.

கையில் ரூபாய் நோட்டுக்களோடும், முகத்தில் மலர்ச்சியோடும் அந்த வாலிபன் அவளருகே வந்தான். அவள் எதிர்பார்த்தது போல் கூலி சற்று அதிகமாகவே கிடைத்து விட்டது என்பது எனக்கு விளங்கிற்று.

பணத்தை வேஷ்டியில் மடித்துச் செருகிக் கொண்டு கைகளை நீட்டியவாறு ''கொடு பயலை!'' என்றான் அவன்.

''முடியாது!'' என்று அவள் குழந்தையை இன்னும் இறுக அணைத்துக் கொண்டாள்.

''பேராசையைப் பார்! இத்தனை நேரம் கொஞ்சவில்லை? கொடு இப்படி!'' என்று அவன் குழந்தையைப் பிடுங்கித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான். குனிந்து முத்தமாரி பொழிந்தவாறு போய்க் காலி வண்டியில் ஏறி அமர்ந்து கொண்டான்.

''போய் வருகிறேன், பஹன்ஜி!'' என்று விடைபெற்றுக் கொண்டாள் அவள். பிறகு முகமெல்லாம் புன்னகை மயமாய் வண்டிக் கருகே போய் நின்று, கணவனையும் குழந்தையையும் பார்த்தாள். அதன் பின் என்ன அழகான காட்சி! — வண்டியைத் தூக்கி இழுத்துச் செல்லலானாள்.

நான் பார்த்தவாறே நின்றிருந்தேன். காலையில் பிரிந்த அவர்கள் குடும்பம் இன்னும் சிறிது நேரத்தில் ஒன்று சேர்ந்துவிடும். தாய், தகப்பன், குழந்தைகள்....

வண்டி பார்வையிலிருந்து மறையு முன் என் கண்களைக் கண்ணீர் திரையிட்டது. ஆனால் ஜல்...ஜல்... என்ற அந்த ஒலி மட்டும் அமுதமாய்ச் செவி வழியே நெஞ்சில் பாய்ந்தது.

வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.



உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸென்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக்கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.

புதிய, நவீன காஸ்மெடிக் டின்!





மற்றும் கிடைக்கும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ்—
மயக்கும் 17 ஸென்டுகளின் அற்புதமான கலவை

FT.G.7 TAM.

அலுவலகம் விட்டு வந்த கணமே லீலா வந்திருக்கிறாள் என்று உணர்ந்து கொண்டான் வரதன். உயிரற்ற வறண்ட சிரிப்பு விரிந்தது அவன் உதடுகளில். இது தன் தாயின் ஏற்பாடாகத்தான் இருக்கும் என்பதில் அவனுக்குக் கொஞ்சமும் ஐயமில்லை. இப்படி அவன் மனத்தையே புரிந்துகொள்ளாமல் நடக்கும் அம்மாவை நினைக்கும்போது அவன் வேதனை மேலும் பெருகியது. அவன் விரக்தியையே உணராமல் சலிப்பை ஊட்டி விடுகிறாள்.

வரதன் இயந்திரமாக உடை மாற்றிக் கொண்டான். மேசை மீதிருந்த சுதாவின் படம் துடைத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த அரைச் சிரிப்பும், மன மோகனக் கனவுகளையே விரியத் திறந்து வைத்தாற்போல் தெரியும் கண்களுமாய்ச் சுதா அவனை என்னமாகப் பார்க்கிறாள்! சுதா! அடுத்த கணமே அந்த எண்ணம் விக்கி இதயத்தில் சிக்கியது. அவன் சுதா அவனை விட்டுப் போய் ஆறு மாதங்களாகி விட்டனவே!

மேசை மீது அவனுக்கு மிகவும் பிடித்தமான டிபன் தயாராக இருந்தது. சூடு பறக்கும் ரவா உப்புமா! மற்றொரு முறை மனத் தூண்டில் பழைய நினைவில் சிக்கிப் பற்றியது. அந்த விசனத்தின் ரேகையை

"அத்தான், சுதா இறந்து போனதால் உங்கள் உலகமே அஸ்தமித்துவிட்டது என்று அர்த்தமா? அந்தத் துயரம் இருளாக விலகி ஒளி காட்டும், அத்தான்! நீங்கள் இப்படி அந்த நினைவிலேயே அமிழ்ந்து கிடக்காமல், மனத்தைத் தேற்றிக் கொள்ளுங்கள். உங்கள் துயரமீட்பாக நான் இருப்பேன், அத்தான்."


"லீலா!" அவன் குரல் அதிர்ந்தது.

அவள் குனிந்த தலை நிமிராமல் மேசை மீது விரலால் கோலம் போட்டாள்.

"இதுவும் அம்மாவின் போதனையா? இந்த மாதிரிப் பேச்சுக்களுக்குச் செவிசாய்க்காதே... அந்த மாதிரியான எண்ணங்களை வளர விடாதே. உனக்குச் செழிப்பான வாழ்க்கை காத்திருக்கிறதென்று கேள்விப் பட்டேன்.... அதுதான் முறை......"

"அது நீங்கள் கேள்விப்பட்ட போது நிஜமாக இருக்கலாம். இப்போது நான் நிர்மாணித்ததும், சொல்வதும் மட்டுமே உண்மை. என்னை நானே மனம் திறந்து காட்டிப் பயனடையலாம் என்றுதான் நான் புறப்பட்டு வந்தேன், அத்தான்....."

அம்மாவின் நடை கேட்டது. வரதன் காப்பியை மடக் மடக்கென்று விழுங்கி விட்டு மாடிக்குச் சென்றான். தாயிடம் பேசவே பிடிக்காத சூழ்நிலை. உள் மனத்தில்



பற்றுக்கோடு

கோமகள்

மறைத்தவாறே உப்புமாவை ஸ்பூனாலும் எடுத்துச் சாப்பிட்டவாறே சுற்றுமுற்றும் நோக்கினான். நேரெதிராகச் சுவரில் அவனும் சுதாவுமாக இணைந்து நின்று எடுத்த புகைப் படம். கை வாயருகே தயங்கி நின்றுவிட்டது. 'நீயில்லாமல்கூட சுதா, நான் உண்கிறேன், வாழ்கிறேன்' என்று உள்ளம் நூண்டு குமுறுகிறது.

"அத்தான்! என்ன இது? சாப்பிடுங்கள்." காப்பியுடன் வந்த லீலா அதை அவனருகே வைத்துவிட்டு, எதிர் நாற்காலியில் அமர்ந்து கொண்டாள்.

"ம்."

"எதற்கு அத்தான் இத்தனை ஆயாசம்? நீங்கள் இப்படி இடிந்து விடலாமா, அத்தான்? விதி அப்படி இருக்கிறது. அதையே நினைத்து மாய்ந்து விடலாமா? அத்தையை எண்ணிப் பார்க்க வேண்டாமா? உங்களை இப்படிப் பார்க்க, பெற்ற மனசு எப்படித் துடிக்கும்?" அவள் தன் கண்கோரம் குவிந்து திரண்ட நீர் முத்துக்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நானும், அவளுமாக வாழ்ந்த இந்த வீட்டின் சுகச் சூழலில் 'களீர்'ச் சிரிப்பைச் சிந்தியவளாயிற்றே நீ. நீயே சொல். அவளுக்கு அப்புறம் எனக்கு என்ன இருக்கிறது இந்த உலகில்?"

நியாயமற்ற தவிப்பு. இந்த லீலாவை இப்படி யெல்லாம் பேசத் தூண்டியவள் அம்மாதான் என்பதில் என்ன சந்தேகம்? அந்த வீட்டில் அவனும் சுதாவும் உயிரொன்று, உடலிரண்டுமாக வாழ்ந்ததை யெல்லாம் கண்டு கொண்டிருந்த அம்மாவே இப்படி முயற்சி செய்வதா? சுதாவை முதன் முதலில் அவன் மணக்கப் பிரியப்பட்டபோது கூட அம்மா இப்படித்தான் குறுக்கே நின்றாள். இதோ இப்போது மறுபடியும் அவன் வாழ்வில் புக முயற்சி செய்யும் லீலாவையே அம்மா மணக்கும்படி கூறினாள். லீலா அம்மாவின் அண்ணு மகள். சுதா தூரத்து உறவு. எனவே, அவள் லீலாவைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பேதுமில்லை. ஆனால் வரதனின் கண்களுக்குக் குளிர்ச்சியாக நின்று இதயத்துக்கு இதமூட்டியவள் சுதாதான்.

அவளோடு வாழ்ந்த அந்த மூன்று ஆண்டுகளும் சுவர்க்கத்தின் படிகளில் ஏறும் சுகம் மிக்க கனவுகள். இப்போது சுதா இல்லை என்றால் என்ன? அவளால் உற்ற சுகத்தின் நீண்ட கனவுகள் நெஞ்சின் இனிமைகளாகத் தேங்கிச் சூழ்ந்திருக்கிறதே. அம்மா இன்று அந்தக் காலத்திலேயே உணர்ந்தவளில்லை. சுதா மழலை வரம் பெற்று விளங்கவில்லை என்று ஏசிக் காட்டினாள். அவனுக்கு மறு

மணம் வாய்த்தால் மழலை வாய்க்கும் என்று சுதாவைக் குத்திக் காட்டிக் கண்ணீர் பெருக்க விட்டாள். தம்பதிகளின் திகட்டா அன்பு திரண்டெழுந்து ஒப்பேற்றி ஒரு சின்னஞ்சிறு சாட்சியாக மழலை ரூபத்தில் உருவாகி யிருந்தால் வரதனோ, சுதாவோ யார்தான் மகிழ்ந்திருக்க மாட்டார்கள்? அவர்களுக்கு அந்த ஏக்கம் உள்ளுக்குள் இருந்தது. அம்மாவோ அதைக் குத்திக் காட்டிக் கூறியதன் மூலம் விரக்தியை மூட்டி விட்டாள். வரதன் சினந்தான். சுதா வெம்பினாள். ஒரு நாள் துயர் தாளாமல் அவன் மடியில் முகம் புதைத்து அழுதவாறே, "எனக்குக் கிடைக்காத பாக்கியத்தை நீங்கள் மற்றொருத்தி மூலம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று சொல்லியும் விட்டாள். வரதன் துடிதுடித்து விட்டான். அந்தக் கள்ளமறியாதவளின் துயர் துடைக்க அவன் பட்டபாடு, கொஞ்சமல்ல.

"அத்தான் !"

அறையில் விளக்குப் பளீரிட்டது. அழைத்தவள் லீலா. இருளின் பிடியில் மனக்கனவில் நீந்திக் கிடந்தவன் சுயநினைவு பெற்றான்.

"என்ன லீலா?"

"இரண்டொரு தினங்களில் ஊருக்குப் புறப்படலாம் என்று இருக்கிறேன்."

"உன் இஷ்டம்."

"நான் உங்களோடு கொஞ்ச நேரம் மனம் விட்டுப் பேசலாம் என்று வந்தேன். நான் இப்படி வலிய வந்து வந்து பேசுவது உங்களுக்கு வேடிக்கையாக இருக்கும். இல்லையா அத்தான் ? உரிமையுள்ள இடத்தில் நாணம் தேவை போல் தெரியவில்லை.

"நான் அப்படி ஒன்றும் புதிதாக எதையும் கூறிவிடவில்லை. உலகில் மனைவியை இழந்த கணவன் மற்றொருத்தியை மணப்பது அதிசயமல்ல அத்தான். ஆனால் நீங்கள் இப்படியே வருந்துவதும் அவள் ஆத்மாவுக்குச் சாந்தியாகாது!"

கெட்டிக்காரி லீலா, என்று வியக்காமலிருக்க முடியவில்லை வரதனால். ஆடு நனைகிறதென்று ஓநாய் வருந்திய கதைதான். சுதாவின் ஆத்ம சாந்தியைப் பற்றி லீலாவுக்கு எத்தனை கவலை!

"லீலா! என் மனம் வெறிச்சிட்டுக் கிடக்கிறது. அந்தத் துயர் தீரக் கூடியதென்றால் என்றோ தீர்ந்திருக்க வேண்டுமே. என்னை விட்டுப் போய் விட்டவளுக்கு என் உடலை மட்டுமா, உள்ளத்தையும் ஈந்து விட்டேன். இனி யாருக்கும் தர என்னிடம் ஒன்றுமே இல்லை. அவளோடு நான் போய் விட்டேன். இப்போது நான் நடைப்பிணம். என்னிடம் காதல், அன்பு, வாழ்வு என்றெல்லாம் எதிர்பார்ப்பதே அர்த்தமற்ற செய்கை. நீ வாழ வேண்டியவள், நான் வாழ்ந்து முடிந்தவன். இதைத் தவிர சொல்ல வேறெதுமில்லை."

"ஆனால் உங்களுக்கு வாழும் வயதுதான்! இளமை துறந்த ஞானியல்ல நீங்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது அத்தான். எனக்கு முதலில் உங்கள் நிழலில் ஒதுங்க இடம் கொடுங்கள் போதும். அப்புறம் உங்கள் மனத்தில் இடம் பெறச் சுலபமாக முயற்சி செய்வேன். நீங்கள் யோசித்துப் பாருங்கள். உங்கள் பதிலுக்காக நான் இரண்டு தினங்களும் காத்திருந்து புறப்படுகிறேன்."

இந்தச் சொற்களைக் கூறி நகர முயன்ற லீலாவை வரதனின் சொற்கள் சாட்டையால் அடிப்பது போல் ஒலித்தன.

"ஒரு வருடம் அவகாசமானாலும் இதே பதில்தான் லீலா. இந்தக் கணம் உணர்த்தும் என் உணர்வுகள் பொய்த்து விடாது போல் தோன்றுகிறது. வேறு பதில் இல்லை போல் படுகிறது."

அவள் அம்புபட்ட தீனமான பறவையைப் போல் நோக்கினாள். முகமெல்லாம் வேதனையால் கரைய, அவனை நீங்கினாள்.

மூன்று தினங்கள் கழிந்தன. லீலா ஊருக்குப் புறப்படக் காணோம். கலகலப்பாகச் சிரித்துப் பேசவும் காணோம். ஒரு மர்மமான ஒருவருக்கொருவர் உதவிபுரியும் தோரணை மட்டும் நிலைத்திருந்தது. அந்தந்த வேளைக்கு, அவரவர்களின் காரியங்கள் ஒப்பாக நிறைவேறிக் கொண்டிருந்தன.

அன்று வரதன் ஆபீஸ் விட்டு வரும் போது அவனது மேசை மீது கிடந்த புத்தகங்களையெல்லாம் துப்புரவாக ஒழித்து அடுக்கி வைத்துவிட்டு, சுதாவின் புகைப் படத்தை எடுத்துத் துடைத்து மாட்டிக் கொண்டிருந்தாள் லீலா.

"த்லொ ! இது எதற்கு இந்த வீண் சிரமம் உனக்கு லீலா ?"

"இதில் என்ன சிரமம்?" என்றவாறே தேங்காய் நார் பிரஷால் நாற்காலியைத் தூசு தட்டவாரம்பித்தாள்.

"பின்னே இல்லையா? எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக்கொண்டு செய்கிறாய். உடம்புகூட ஒரு சுற்று உனக்கு இளைத்து விட்டது."

'அதுகூட உங்கள் கண்ணில் படுகிறதா அத்தான்?' என்பது போல் திகைத்த லீலா மீண்டும் திக்பிரமையடைந்தாள்.

வரதன் அவளையே பார்த்தவாறு நின்று கொண்டிருந்தான்.

'இது உண்மையா, இது உண்மையா?' என்ற அறைகூவல் உள்ளத்தில் ததும்பியது. கடைசியில் அவளுக்கு வெற்றியா? அவன் மனம் அவளிடம் கனிந்து விட்டதா?

அன்று ஞாயிற்றுக்கிழமை. அன்று முழுதும் லீலா வரதனை நன்கு கவனிக்க முடிந்தது. ஆவலோடு அவளையே வட்டமிடும் கண்கள், ஒருமுறைகூட முதல் மனைவி சுதாவின் புகைப்படத்தின் மீது விழவில்லை. காலையில் அம்மா பரிமாறும்போதுகூட வரதன் "நீ உட்காரேன் அம்மா, லீலா பரிமாறட்டுமே" என்று அவளை நோக்கினான்: அந்தப் பார்வையின் குழைவை அவளால் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. அதையும் விடப் பெரிய ஆச்சரியமும் காத்திருந்தது: வழக்கமாக வாங்கிவரும் இரண்டு முழ மல்லிகை அன்று சுதாவின் படத்தை அலங்கரிக்கவில்லை. அப்படியே அந்தப் பொட்டலத்தை வரதன் லீலாவிடம் கொடுத்து விட்டான். சொல்லாமல் செய்த இச்செயலில் தொனித்த ஓராயிரம் அர்த்தங்கள் அவளது வெற்றியைப் பறைசாற்றின. அவள் எதிர் நோக்கிக் காத்த தவம் பொய்த்து

விடவில்லை. வரதனின் மாற்றம் அம்மாவின் கண்களுக்கும் தப்பவில்லை.

காலைப் பத்திரிகையைக் கைகளில் தந்த லீலா, ''அத்தான்! நான் வந்து பத்து தினங்களாகி விட்டன....'' என்று தொடங்கினாள்.

''ஓ! ஐ ஸீ!'' என்றவாறே ஆளை நோட்ட மிட்டான் அவன். அந்தப் பார்வையில் குறும்பு உயிர்த்திருந்தது.

''உங்கள் மனம் என் முடிவை ஒப்புக் கொண்டுவிட்டது என்று நம்பலாமில்லையா?'' அவள் குரலில் வெற்றியும் நாணமும் போட்டி யிட்டன.

''உனக்கு எப்படிப் படுகிறது லீலா?''

''எப்படியிருந்தாலும் உங்கள் வாயால் கூறினால்தான்....''

''சுருங்கச் சொன்னால் நீ என்னை வென்று விட்டாய் லீலா!'' அவன் சாவதானமாகப் பதில் கூறினான்.

''அத்தான்!'' மகிழ்ச்சியின் அதிர்வில் சொற்கள் பிடிபடவில்லை.

''ஆம், லீலா! இன்னும் சொல்லப் போனால் சுதாவின் நினைவிலிருந்து மீளவேண்டுமானால் நீ இல்லாமல் முடியாது போலிருக்கிறது.''

லீலாவின் மனம் மகிழ்ச்சியில் பூரித்தது.

''ஆனால்....''

''ஆனால்... எதற்கு அத்தான்?''

''நீ என்னை மனப்பூர்வமாக விரும்புகிறாய் அல்லவா?''


''இதென்ன வேண்டாத கேள்வி?''.

''இல்லை லீலா. சொல்வதற்கே தயக்க மாக இருக்கிறது. ஆயினும் நீ என்மீதுள்ள அன்பின் பொருட்டு அதைப் பெரிதாக மதிக்க மாட்டாய் என்றே கருதுகிறேன்.''

''என்னவென்று சொல்லுங்களேன், அத்தான்?''

''உனக்குத் தாய்மையில் விருப்பமில்லை என்றால் என் மனப்பூர்வமான சம்மதம் உனக்கு உண்டு...''

அவள் சட்டெனக் குழம்பிவிட்டாள். ''ஆ... மின்...: நீங்கள் என்ன சொல்கிறீர்கள் அத்தான்? ஏன் அப்படி? எனக்கு எதுவும் புரியவில்லையே....?''



''அதைத்தான் உனக்குப் புரிய வைக்கப் போகிறேன், லீலா. சுதா இறந்து போவதற்கு ஆறு மாதங்கள் முன்பு ஒரு நாள் அவளுக்குத் 'தாங்க முடியாத நெஞ்சு வலி வந்து விட்டது. அவள் வலியால் துடித்துப்

சென்ற ஆண்டு வீட்டுக்கு ஓட்டுக்கூரை, இவ்வாண்டு தனக்கொரு சைக்கிள், அடுத்த ஆண்டு... பணம் நல்ல வழியில் பயன் படுகிறது!

வளமையைப் பெருக்குகிறான் ராமு. முற்போக்கான விவசாயி அவன். உயர்ந்த விதைகளை உபயோகிக்கிறான். விஞ்ஞான முறையில் பயிர்களை மாற்றுகிறான். நீர்ப்பாசன வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறான். தவிர, ராலீஸ் தயாரிக்கும் சமநிலை உரக் கலவைகளால் நிலத்தைச் செழுமையாக்குவதுடன் டாடா பைஸன் தயாரிக்கும் பூச்சி மருந்துகள் மூலம் பயிர்களைப் பாதுகாக்கவும் செய்கிறான். இரண்டுமே சுலபமாகக் கிடைக்கின்றன. அதிகப்படியான, தரத்திலுயர்ந்த விளைச்சலுக்கு வழிசெய்கின்றன.

TATA FISON RALLIS TREE BRAND FERTILIZERS AND PESTICIDES

உரங்கள், பூச்சி மருந்துகள் மூலம் வளமை



SHBI-RF-83 TAM

போய்விட்டாள். அப்போது அம்மா உங்கள் வீட்டுக்கு வந்து விட்டிருந்தார்கள். ஞாபகம் வருகிறதில்லையா? ஆஸ்பத்திரியில் ஒரு வார சிகிச்சைக்குப் பின் சுதா குணமுற்று வீடு திரும்பினாள். ஆனால் டாக்டர் கூறிய செய்தி இதய பலவீனமுற்ற சுதா தாய்மை ஏற்றால் மீள்வது கடினம். அதற்கு ஆசைப்பட வேண்டாம் என்பதுதான். சுதாவிடம் இவ் விஷயத்தை நான் கூறவில்லை. ஆயினும் அவளைக் காக்கும் உறுதி என் நெஞ்சில் நிறைந்திருந்தது. அவள் ஒருத்திதான் என் பரிபூரணமானவளாக இருந்தாள். மற்ற தெல்லாம் எனக்குத் துச்சமாகப் பட்டது. எனவே வெளியூர் போவதாகவும் திரும்ப ஒரு வாரம் ஆகும் என்றும் சுதாவிடம் கூறிவிட்டு டாக்டரைப் போய்ப் பார்த்தேன். ஒரு வாரம் கழித்து வீடு திரும்பும்போது நான் பழைய வரதன் அல்ல....''

''அத்தான்... அத்தான்! இப்படிச் செய்ய லாமா'' என்று உணர்வு பொங்க, மெய் நடுங்க முனகினாள் லீலா.

''ஆம் லீலா, அப்படிச் செய்துவிட்டேன். ஆனால் எந்த சுதாவின் ஆயுளைக் கெட்டியாக்க எண்ணி அப்படிச் செய்தேனோ, அவள் மூன்றே நாள் ஜுரத்தில் சற்றும் எதிர் பாராதபோது என்னை விட்டுப் போய்விட் டாள்....அந்தத் துயரத்தை, ஆறாத நெருப்பை இன்று கொஞ்சம் கொஞ்சமாக அணைக்க உதவியவள் நீ. என் குறிப்பறிந்து நடக்கவும், எனக்காக எதையும் செய்யவும் தயாராக நீ இருக்கிறாய். மறுமணம் வேண் டாம் என்று இருந்த என்னையும் நீ திசை திருப்பிவிட்டாய். உண்மையில் முதல் மனை வியை இழந்த துக்கம் இரண்டாம் திருமணத் தால் போய்விடு மென்றே நம்புகிறேன்.''

''சுதாவை சாகவதமாக எண்ணி இப்படிச் செய்துகொண்டிருக்கலாமா அத்தான்? மற் றொருத்திக்கு இழைத்த துரோகமாகிவிட வில்லையா அது?''

''அது, எப்படி ஆகும் லீலா? அவள் என்னைப் பிரிந்துவிடுவாள் என்று கண் டேனா?.... உம்! அதிருக்கட்டும். தாய்மை அப்படி என்ன மகத்தான விஷயம்? உனக்கு என்மீது உண்மையான அன்பு இருக்கிறது. என்னையும் நீ அப்படி மாற்றி விட்டாய். அப்புறம் என்ன லீலா?'' அவன் குரலில் கெஞ்சல் இழைந்திருந்தது.

லீலாவின் முகம் கோபத்தால் சிவந்து துடித்தது. ''அந்த வெறும் அன்பு முதல் ஓரிரண்டு வருடங்கள்தான் இனிக்கச் செய் யும், அத்தான். அதுவல்ல வாழ்க்கை. ஒருவருக்கொருவர் இன்துணையாகும்போது அன்பு ஊடாடவே செய்கிறது. ஆனால் தெய்வ மழலைகள் அவ்விருவருக்கும் பொது வான சொந்தமாகும்போதுதான் அங்கே வாழ்க்கையின் உதயமே தெரியும். இல் லறத்தின் மாண்பும் விளங்கும்.''

வரதன் அதிர்ந்தாற்போல் நிமிர்ந்தான். ''ஏன் லீலா! கணவனும் மனைவியுமே ஒருத் தருக்கொருத்தர் போதாதா? தூய்மையான அன்புக்குச் சாட்சி வேண்டுமா என்ன? மனத் தில் பொங்கும் அன்பு போதாதா?''

''இல்லை, போதாது...சந்ததி விளங்கினால் தான் தாம்பத்தியம் சிறக்கும்....அதுதான் ...வாழ்வின் லட்சியம்....'' என்று ஓரிரு வார்த்தையாக நிறுத்திக் கூறிய லீலா பெரு மூச்செறிந்தாள்.

''இனி எந்த முடிவுக்கும் இடமில்லை.'

''நன்றாக யோசித்துப் பார், லீலா. வீணாக என் மனத்தில் கற்பனைகளைத் தூண்டி விட்டு விட்டு இப்படி விலகத் தயாராகி விடாதே. எதையும் நிதானமாக யோசிக்க வேண்டும். நீ என் முடிவுக்கே வரவேண்டும் என்பதுதான் என் ஆசை. ஒரு வாரம் அவ காசம் எடுத்துக் கொள். அப்புறம் உன் பதிலைக் கூறு. இப்போது அவசரமில்லை...''

''ஒரு வருடம் அவகாசம் தந்தாலும் இதே பதில்தான். இந்தக் கணம் உணர்த் தும் என் உணர்வுகள் பொய்த்து விடாது போல் தோன்றுகிறது. வேறு பதில் இல்லை போல் படுகிறது....'' என்று கூறிய கவட் டோடு லீலா விருட்டென்று நீங்கினாள்.

அன்று மாலை வரதன் ஆபீஸ் விட்டு வந்த போது வீடு வெறிச்சிட்டுக் கிடந்தது. அழு தழுது அம்மாவின் முகமெல்லாம் வீங்கிக் கிடந்தது. ''வரதா! உங்களுக்குள் என்ன தான் நடந்தது? அந்தப் பெண் எத்தனை சொல்லியும் கேளாமல் மத்தியானமே புறப் பட்டுவிட்டாள். அதோடு விட்டாளோ? அவ ளுக்கு அடுத்த மாதம் நடக்கப் போகும் கல் யாணத்துக்கு நாம் இரண்டு பேரும் வரணு மாம். ஏண்டா, இப்படி உளறி விட்டுப் போகிறாள்? நீ அவளை என்ன சொன்னாய்?'' என்று பல நாட்களுக்கு அப்புறம் அவனிடம் பேசிக் கொட்டினாள்.

''ஒன்றும் தெரியாதே'' என்று மெல்லிய குரலில் கூறியவாறே தன் கையிலிருந்த மல்லிகைச் சரத்தை, இரண்டு முழப் பூவைச் சுதாவின் படத்தில் சூட்டிவிட்டு அதில் நேற்று லீலா சூட்டியிருந்த மலர் ஆரத்தை எடுத்து எறிந்தான். ஒரு முழம் பூ அது. சரி பாதியை நேற்று மட்டும் பகிர்ந்த லீலா அவன் வாழ்வையே பகிர ஆசைப்பட்டு வந்தவள் இல்லையா?

''சுதா! என்னை மன்னித்துவிடு. சில நாட்கள் உன் புகைப்படத்தையே பார்க்கா மல் லீலாவையே பார்த்துக் கொண்டிருந் தேன். அவள் மீது அன்பு கொண்டாற் போல் அளவுக்கு மீறியே நடித்தேன். அது மட்டுமா? உனக்கு நெஞ்சு வலி என்றும், உன்பொருட்டு நான் டாக்டரிடம் சிகிச்சை பெற்றவன் என்றும் பொய் சொல்ல நேர்ந் தது. எந்தப் பெண் உலகில் தனக்குத் தாய்மை வேண்டாம் என்று துணிவாள்? என் யுக்தி பலித்தது. ஆயினும் மேலும் மேலும் லீலா தன் மனத்தை உறுதி செய்து கொள்ளப் பேசக் கொடுத்தேன். என் தெய்வீக உணர்வை அவள் சாமானிய உணர் வாக மதித்திருந்தாள். ஆனால், இந்த வாழ் வில் தெய்வ மழலை கிடைக்காது என்ற என் கற்பனையில் அவள் சுயநலம் வென்று விட் டது. அதுவே என் வெற்றியாகி விட்டது!''

வரதன் நிம்மதிப் பெருமூச்சுடன் மனைவி யின் படத்தை நோக்கினான். இனி அவன் கற்பனையின் இனிமைகளுக்கு யாரும் குறுக் கிடப் போவதில்லை. சுதாவின் நினைவு மட்டுமே தெய்வீக மணமாக எஞ்சி நிற்கும்!



இரண்டு வரி பிரசுரமானால்....?

சிரஸன்



பெரிய பிரபல மனிதர்கள் காலமாகி விட்டால், அவர்களைப் பற்றிப் பத்திரிகைகளில் புகைப்படங்களுடன் செய்தி பிரசுரமாவதைப் பார்த்திருக்கிறோம். ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஐயாக்கண்ணு, சலவைத் தொழிலாளி சரவணன், இவர்களது மரணச் செய்திகள் பற்றியும் குறிப்புகள் வெளியிடத் தொடங்கினால்....?

ஆரம்ப ஆசிரியர் மறைவு

"ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஐயாக்கண்ணு நேற்றுமாலை திடீரென்று மாரடைப்பினால் காலமாகி விட்டார். அன்னாரின் மறைவையொட்டி அவர் பணியாற்றிய பள்ளி இன்று மூடப்பட்டது."

வாழ்க்கைக் குறிப்பு: அவர் 1912ல் தரித்திராபுரத்திலே பிறந்தார். ஹையர் கிரேடு ஆசிரியர் பயிற்சி பெற்று ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஆனார்.

பெரிய சம்சாரி. இன்னும் ஒரு பெண்ணுக்குக்கூடத் திருமணமாகவில்லை. அன்னார் குடும்பத்துக்கு அநுதாபங்கள்.

ஆசிரியர் ஐயாக்கண்ணுவின் மரணத்தையொட்டிய பிறர் அநுதாபக் குறிப்புக்கள்:

"ஆசிரியர் ஐயாக்கண்ணு சொற்ப வருவாயில் எப்படித்தான் குடும்பம் நடத்தினாரோ, அந்த ரகசியத்தை நான் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டதுண்டு. என் ஆசையிலே மண்ணைப் போட்டுவிட்டு மறைந்து விட்டார். — புரோகிதர் பராங்குசம்."

"வாத்தியார் ஐயா எனக்குப் பால் பாக்கி பதினேழு ரூபாய்! ஹூம்! மனிதனே போய் விட்டார். பணமா வரப்போகிறது? போகட்டும். மொத்தத்திலே மனுஷன் நல்லவர். — பால்காரர் பரமசிவம்."

"அப்பாடா! பொழுது விடிஞ்சால் 'ஒன்று கொடு, இரண்டு கொடு' என்று பிராணனை எடுத்துக் கொண்டிருந்தார். தொல்லை விட்டது. — ஒண்டுக்குடி உமாபதி"

"இனிமேல் அவரைப்போல் ஒரு வாத்தியார் கிடைப்பது ஏது? என்மீது அவருக்கு ஒரு தனி அன்பு. காரணம் அவருடைய மூக்குக் குறிப்பு அறிந்து பொடி வாங்கி வருவேன். சில சமயம் நானே காசு கொடுத்து வாங்கித் தருவேன். 'அடே! நீ காசு கொடுத்து வாங்கியது யாருக்கும் தெரிய வேண்டாம்' என்பார். ஹூம்! யாரிடமும் மூச்சுவிட்டதில்லை. — மாணவன் மணி."

சலவைத் தொழிலாளி மறைந்தார்

சலவைத் தொழிலாளி சரவணன் இன்று காலை தம் இருபத்தெட்டாவது வயதிலே திடீரென்று காலமானார். அழுக்கஞ்சேரியில் தம் பெற்றோருக்கு ஒன்பதாவது மகனாகப் பிறந்த சரவணன், தம் குடும்பத் தொழிலாம் சலவைத் தொழிலை மேற்கொண்டார்.

அநுதாபக் குறிப்புக்கள்:

"சரவணன் காலகதியடைந்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டேன். சுமார் நூறு துணிகள் வரை போட்டிருந்தது இன்னும் வரவில்லையே என்ற கவலையினால் அல்ல. மனிதன் தங்கம். — வாடிக்கைக்காரர்"

"ஐயோ! என் பட்டுப்புடவையை இன்னும் தராமல் இதோ அதோ என்று நான்கு மாதமாய் இழுக்கடித்துக் கொண்டிருந்தானே? இனி யாரைக் கேட்பேன்?

— வனஜாட்சி அம்மாள்."

"என் கிராக்கியை எல்லாம் பிடிச்சுக் கிட்டு என் வயித்திலே அடிச்சான் மனுஷன். என்ன புரோஜனம்? மனிசன் வாழ்ந்தானுன்னு கேட்கிறேன்.

— சகோதரத் தொழிலாளி ஆறுமுகம்."

"நானும் பல சலவைத் தொழிலாளிகளைப் பார்த்திருக்கிறேன். உள்ளே ஆயிரம் கிழிசல் இருந்தாலும் (போடும்போது கிழிசலே இராது) அதைக் கிழிசல் தெரியாமல், இதுதான் முதல் சலவையோ என்று எண்ணும் வண்ணம், மடித்துத் தருவதற்குச் சரவணனைப்போல இன்னொருவன் இனி பிறக்க வேண்டும். அக்கலையிலே நிபுணன் நமது சரவணன்.

—மாஜி வாடிக்கைக்காரர் மீரான் சாஹிப்."

"முதலாளி ஐயா போயிட்டாங்களே! சினிமாவிலே துண்டுப் பீடி பொறுக்கிக்கிட்டுக் கிடந்த என்னை இட்டாந்து, பொட்டி போடக் கத்துக் கொடுத்துப் பிழைக்க வழி செய்த தரும துரைங்க அவரு.

— இஸ்திரிப்பெட்டி போடும் ஏழுமலை."

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.

No. M. 4392
as a Newspaper in Ceylon

